உ

திருக்குறள் மூலமும்

அதிகார வைப்பு முறையும் சேர்ந்துள்ள

நற்பதிப்பு நூல்

வித்வான், கா. மு. சின்னப்பா பிள்ளை

அவர்களால் எழுதியது.

TNSDA
05484

P. L. அருணாசல முதலியார் & பிரதர்ஸ்

பெரம்பூர் பாரெக்ஸ் போஸ்டு,

சென்னை.

காபிரைட்] 1950 [விலை ரூ. 1-8.

உ

கடவுள் துணை

தமிழ்ப் பொதுமறையாகிய

திருக்குறள் மூலமும்

அதிகார வைப்பு முறையும், திருவள்ளுவர் சரித்திரச் சுருக்கமும்,
சேர்ந்துள்ள நற்பதிப்பு நூல்

வித்வான் கா. மு. சின்னப்பா பிள்ளை அவர்கள்
தமிழ்ப் பேராசிரியர்
சிந்தாதிரிப்பேட்டை உயர்தரக் கல்விக்கழகம்
சென்னை

P. L. அருணசல முதலியார் & பிரதர்ஸ்
15, படவட்டம்மன் கோவில் தெரு, குயப்பேட்டை
பெரம்பூர் பாரெக்ஸ் போஸ்டு,
சென்னை.

காபிரைட்] 1950 [விலை ரூ. 1.8.

5484
DEC 1976

SREE VIDHYA PRESS,
MADRAS, 12.

நூலாசிரியர் வரலாறு

முன்னுரை

உலகில் வாழும் எம்மதத்தவரும், சம்மதமாய் ஏற்றுப் போற்றும்,பெற்றியுற்ற, நற்றமிழ்ப் பொதுமறையாம் திருக்குறளை யாத்த பெருமான், தெய்வப்புலமைத் திருவள்ளுவனார்தம், பிறப்பாறேனையவற்றைப் பலர் பலவாறு பகராநிற்பர். அங்ஙன முரைக்கும் வரலாறுகள் நம் நாட்டிலுலவும் நாட் புதினங்களிலும், கிழமைத் தாள்களிலும், திங்களிதழ்களிலும், புத்தக வடிவங்களிலும் அச்சிடப்பட்டு வெளிவந் துலாவுகின்றன.

ஈண்டு எஞ்சிற்றாராய்ச்சிக் கெட்டியபடி அவ்வரலாற்றை வரையலுற்றேம். குறையுளதேல் பொறுக்கவும், குறைவை நிறைவாக்கவும் அறிஞரைப் பணிவுடன் வேண்டுகின்றனம்.

1. பிறப்பிடம்

நம் பொதுமறைப் புலவர் திலகர், சீர்பெருகும் சென்னைமா நகர்க்கணித்தாய் இலகும் திருமயிலேயிற்றான் றோன்றினர். அவர் அவண் அவதரித்தாரெனற்கு, அவர் தம் திருநூலினும், பிறர் தம் பெருநூலினும் அகச்சான்றுகள் ஒன்றுமின்று. ஆனல், பிறச்சான்றாக, ஆங்கமைந்துள்ள அவர் தம் திருக்கோயில் ஒன்றே விளங்குகின்றது. மற்றும், இற்றை ஞான்று வழங்கிவரும் அவர் சரித்திரக் கட்டுக்கதையும், கபிலர் அகவலும் முறையே புறச்சான்றும், நூற்சான்றுமா யுலவுகின்றன. வேறு உண்மைச்சான்றுகள் கிடைக்குங்காறும், இவற்றையே ஆதாரமாக்கொண்டு ஆசிரியர் பிறந்தவிடம் மயிலேயே எனக் கோடல்வேண்டும்.

2. குலம்

இது போழ்து நம்நாட்டில் வழங்கும் சாதிப்பகுதிகள், கடைச் சங்கத்தார் காலத்திற்கு முன்பே ஏற்பட்டு முதிர்வுபெற்றிருந்தன

அவற்றுள் 'வள்ளுவர்' என்பதூஉம் ஓர் சாதிப்பிரிவே. இவ்வகுப்பு அந்நாளில் உண்டென்பதை "நாஞ்சில்வள்ளுவன்" "செய்தி வள்ளுவன்" முதலான புலவர்கள் பெயர்களே வலியுறுத்துகின்றன. ஆகலான், உலகம் போற்றும் ஒண்டமிழ் நீதிநூல் வகுத்த ஆசிரியர்க்கும், அவர் இடுக்குறிப்பெயர் மறைந்து வள்ளுவர் என்னும் அவருடைய சாதிப்பெயரே அவர்க்குக் காரணப்பெயராயமைந்தது. அவர், வள்ளுவர் வகுப்பினராயிருந்து, அரிய, பெரிய நூலைச் செய்து வெளிப்படுத்திய காலத்தில் பலர் அவரையும், அந் நூலையும் பலபடி பாராட்டிப் புகழ்ந்து போற்றினர். சாதிச்செருக்குக் கொண்ட சிலர் "வள்ளுவனே இத்நூலைச்செய்தவன்" என்றும்; "இந்நூலைச் செய்தவன் வள்ளுவன்" என்றும், மற்றும் பல இழிவுகடோன்றக் கூறலாயினர். அவற்றைச் செவியேற்ற மாமூலனார் என்னும் கடைச்சங்கத்துப் புலவர்—

"அறம்பொருள் இன்பம்வீ டென்னுமந் நான்கின்
திறந்தெரிந்து செப்பிய தேவை—மறந்தேயும்
வள்ளுவன் என்பானோர் பேதை அவன்வாய்ச்சொல்
கொள்ளார் அறிவுடை யார்"

என்று கூறி, அழுக்காறுற்ற அக்கயவர் உரையை மறுத்தறைந்துளார். இஃதொன்றனே, நம் பேராசிரியர், வள்ளுவர் இனத்தைச்சார்ந்தவர் எனத் தெற்றனப்புலனுமன்றோ? மற்றும், தோன்றும் சில கரிகளால் அவர் வள்ளுவவகுப்பினரே என்று துணிந்து கூறலாம்.

3. பெற்றோர்

உலகில் வாழும் மக்கட்கு அன்னையே கண்கண்ட முதற்றெய்வமாகும். அன்னை பணியே தெய்வப்பணியாம். அறிஞர் ஒவ்வொருவரும் தத்தம் தாய்மனம் குளிரப்பண்ணியே வேறு எப்பணியும் ஆற்றத்தொடங்குவர். இதுபற்றியே "அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்" என்னும் அவ்வையாரது அறநெறிச் சூத்திரமும் அறைகின்றது.

இவ்வறநெறியை, நம் பெருநாவலர் நன்குணர்ந்திருந்தார். அவர், தாம் உள்ளளவும், தமது பெற்றோரைப் போற்றிவந்தார். தவிர, அவர்கள் திருப்பெயர்கள் உலகுள்ளவரை மறையாதிக்கவும் எஞ்ஞான்றும் பலராலும் அவை ஓதப்படவும் வேண்டுமென்றெண்ணினர். அக்கருத்து நிறைவேறற்கு, அவர், தாம் செய்த நூலின் முதற்பாவிலேயே கடவுளை வணங்கு முகத்தான் சிலேடைப்பொருட்பட 'ஆதி' 'பகவன்' என்னும் தம்மிரு முதுகுரவர் பெயர்களை அமைத்துப் புனைந்து போற்றியுளார். இந்நியதியான் அவர் தாய் தந்தையர் பெயர்கள் அவையேயாகும்.

அவ்விருவரும் வள்ளுவர் என்னும் ஒரே வகுப்பைச் சேர்ந்தவரேயாவர். அதில் எட்டுணையும் ஐயமின்று. அதற்கு அகக்கரிகள் ஒன்றுமின்று. ஆயினும், புறக்கரியா யுலகவழக்கில் சிறந்தவோர் சரதமுண்டு. அஃதென்னையெனின்,—ஆதி, பகவன் என்னும் பெயர்கள் பெரும்பாலும் வள்ளுவர் என்னும் வகுப்பார் இடையேதான் இன்றளவும் வழங்குகின்றன. அக்கோட் சிற்றூர் பல பழகினர்க்கு நன்கு புலனாகும்.

அந்நாளில் நிமித்தம், சோதிடம், ஆரூடம் முதலியன பகர்வோர்க்கு வள்ளுவர் என்றே பெயர். அதனை,—

"வள்ளுவன் சாக்கை எனும்பெயர் மன்னர்க்
குட்படும் கருமத்தலைவற் கொன்றும்" என்றும்,
"வருநிமித்திகன் பேர் சாக்கை வள்ளுவன் என்று மாகும்"

என்றும், முறையே பிங்கல நிகண்டும், சூடாமணி நிகண்டும் அறையுமாற்றான் அறியலாம்.

அம்முறைப்படி, ஆசிரியர் வள்ளுவரது தந்தையாரும் நிமித்தம், சோதிடம் முதலியன கூறுவதிற் சிறந்திருந்தனர். அதனையே அவர் தமது சீவனத்தொழிலாகக் கொண்டிருந்தனர். எப்பொருளைப்பற்றிக் கேட்பினும், அவர் தயங்காமல் கேட்போர் வியக்கக் கூறுவர். அதனால் எல்லாரும் அவரிடமே விழைந்துவருவர். கூறு

வான் என்பதற்கு நேரிதாகப் பகர்வான் என்பதையே அந்நாள் மக்கள் பெரும்பாலும் தம் வழக்கில் கொண்டிருந்தனர். அதனால், மக்கள் அவரைக் குறித்துப் பேசுந்தோறும் " அவனிடம்போனால் நன்றாய்ப் பகர்வான் " என்று பேசலாயினர்.

சென்னையில் 'ஹாமில்டன் பிரிட்ஜ்' என்பது 'அம்பட்டன் வாராவதி' யாகமாறியதுபோன்றும், "தேவசேனை" என்பது' தெய்வயானை' யாக மாறியதுபோன்றும் 'பகர்வான்' என்னும் சொல் 'பகல்வன்' 'பகவன்' ஆக மாறி முடிவில் அவர் தம் இயற்பெயர் மறைந்து பகவன் என்பதே அவருக்குப் பெயராய் நிலைத்திருக்க வேண்டும்.

ஆதி என்னும் சொல் தெலுங்கு பேசும் சில வகுப்பார், தம் மக்கட்குப் பெயராய் இடுகின்றனர். ஆயினும், அது மிகச் சிறுபான்மையே ஆகும். அப்பெயர் வள்ளுவர் வகுப்பிற்றான் பெரும்பாலும் பெண்களிடம் பயிலப்படுகின்றது. ஆதலான், ஆசிரியரது பெற்றோர் இருவரும் வள்ளுவர் இனத்தவரே யாவர்; அவ்விரு பெயர்களும் அவர்களுடையனவேயாகும்.

(வாகீச முனிவர், தாம் அருளிச்செய்த ஞானமிர்தம் என்னும் நூலில் திருவள்ளுவனாரின் தந்தையார் பெயர் 'யாளிதத்த முனிவர்' என்று கூறுகிறார். அது, பகவனுக்கு இயற்பெயராய் இருந்தது போலும்.)

4. காலம்

ஆசிரியர் காலம் இன்னதென்று துணிந்து கூறற்கு இடனின்றாயினும், அவர் காலத்திருந்த புலவர்களைக்கொண்டோ அன்றி அரசர்களைக்கொண்டோ ஒருவாறு கணிக்கவேண்டும். அவர் காலத்து வேந்தர் இவர் எனத் தெரியவில்லை. ஆகலான், அவரைப் புகழ்ந்துள்ள வேறு நூலாசிரியர்களைக்கொண்டு ஆராய்வாம். ஐம்பெருங் காவியங்களுள் ஒன்றாய் மணிமேகலையுள்,—

" தெய்வந் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள்
பெய்யெனப்பெய்யு பெருமழை என்றவப்
பொய்யில் புலவன் பொருளுரை தேராய் "

என்று சீத்தலைச் சாத்தனாரும்:—சிலப்பதிகாரத்துள்;—

"தெய்வம்தொழா அள் கொழுநற்றொழுவாளைத்
தெய்வந் தொழூஉம் தகைமை திண்ணமால்"

என்று இளங்கோவடிகளும், நம் ஆசிரியரையும், பொதுமறையையும் புகழ்ந்து போற்றியுள்ளார்கள்.

இவ்வீராசியர்களும் ஒரே காலத்தவர். அதனை,—

"இளங்கோ வேந்தன் அருளிக்கேட்ப
வளங்கெழு கூல வாணிகன் சாத்தன்
மாவண் டமிழ்த்திறம் மணிமேகலைத் துறவு
ஆறைம் பாட்டினுள் அறியவைத் தனன்"

என்று மணிமேகலைப் பதிகமும்,

"உரைசாலடிகள் அருளமதுரைக்
கூலவாணிகன் சாத்தன் கேட்டனன்"

என்று சிலப்பதிகாரப் பதிகமும் கூறுமாற்றான் உணரலாம்.

ஒருநூலும், நூற்பொருளும் பிறர்தம் நூலுள்மேற் கோள்களாக ஏறுவதற்குக் குறைந்தது ஐம்பதறுபது ஆண்டுகளேனும் கடக்க வேண்டும். அதனை நோக்கின், நம் தெய்வப்புலவர், இவ்விரண்டாசிரியர் காலத்திற்கு ஏறக்குறைய நூறு ஆண்டுகளுக்கு முன்பு இருந்திருக்க வேண்டும் எனத் தெளிவாகிறது.

அவர்கள் காலத்தில் சேரநாட்டை ஆண்டுவந்தவன் இவ்விளங்கோவின் தமயன் சேரன் செங்குட்டுவனாவன். அவன், சிலப்பதிகாரக் கதாநாயகியாம் கற்புடைக் கடவுள் கண்ணகித் தேவிக்கு ஆலயம் சமைத்தான். அங்ஙனமே, அஞ்ஞான்று இலங்கையை ஆண்டுவந்த கயவாகு வேந்தனும் கண்ணகிக்குத் திருக்கோயில் எடுப்பித்தான். காலத்தைக் கணிக்கும் சரித்திர ஆராய்ச்சியாளர், அக்கயவாகுவின் காலம் கி-பி. முதலாம் நூற்றாண்டுக்குச் சிறிது முன் பின்னாக இருக்கலாம் என்கின்றனர். பிறவாராய்ச்சிக் குறிப்புகளைக் காணினும் நம் தேவர் ஏறக்குறைய இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்பு இருந்தனர் என்றே துணியலாம்.

5. சமயம்

நம் நாயனர் இன்ன சமயத்தவர் என்று கோட்டற்குப் புறச் சான்றுகள் யாண்டுமில. ஆயின், அவர்தம் நூலை நுணுகி, உலக வழக்கோடு ஒட்டித் துருவிப்பார்பின் அகச்சான்றுகள் பல கிடைக் கின்றன. அச்சான்றுகள், இந்நாள் நிலவும் பல சமயங்கட்கும் பொருந்தக்கூடியனவாக விருக்கின்றன. அவற்றையும் அவரது காலக் கொள்கையையும் சீர்தூக்கிப்பார்த்தால் அவர் ' சமரச சந் மார்க்க ' சமயத்தவர் என்பதே தோற்றும், அதனை விடுத்து அவ ரைச் சைவர் என்றும், வைணவர் என்றும், பவுத்தர் என்றும், கிறித்தவர் என்றும், மகம்மதியர் என்றும், சமணர் என்றும் மற்றும் பலவாறும் வலிந்து வலிந்து கூறுவார் மனப்போக்கை நடுவு நிலையுடன் ஆராயின் அவர்களது கூற்று நலிந்து நலிந்து ஒழிந்துபோம் என்பதைத் திண்ணமாய் எண்ணல் வேண்டும். அதனை வரையின் பெருகும் என்று இத்துடன் நிறுத்துகின்றும்.

6. நூல்

ஏலேலசிங்கர், அழகாநந்தம் முதலிய தம் சீடர்களதுவேண்டு கோட்படி, உலகமக்கள் யாவரும் உவந்துணர்ந்துய்யும்பொருட்டுத் திருக்குறளை மயிலையில் இயற்றி மதுரையி லரங்கேற்றி யருளினர் திருவள்ளுவனர்.

சிந்தாதிரிப்பேட்டை,
" உயர்தரக்கல்விக்கழகம் "
சென்னை.

இங்ஙனம்,
கா. மு. சின்னப்பாபிள்ளை,
தமிழ்த் தலைமைப்புலவர்.

பாலியலகராதி

பால்.	பக்கம்.	இயல்.	பக்கம்.
அறத்துப்பால்	1	அங்கவியல்	64
காமத்துப்பால்	109	அரசியல்	39
பொருட்பால்	39	இல்லறவியல்	5
		ஒழிபியல்	96
		களவியல்	109
		கற்பியல்	116
		துறவறவியல்	25

அதிகாரவகராதி

அதிகாரம்	பக்கம்	அதிகாரம்	பக்கம்
அடக்கமுடைமை	13	கடவுள் வாழ்த்து	1
அமைச்சு	64	கண்ணோட்டம்	58
அரண்	75	கண்விதுப்பழிதல்	118
அருளுடைமை	25	கயமை	108
அலரறிவுறுத்தல்	115	கல்லாமை	41
அவர்வயின்விதும்பல்	127	கல்வி	40
அவாவறுத்தல்	37	கள்ளாமை	29
அவையஞ்சாமை	73	கள்ளுண்ணாமை	93
அவையறிதல்	72	கனவுநிலையுரைத்தல்	122
அழுக்காறாமை	17	காதற்சிறப்புரைத்தல்	113
அறன்வலியுறுத்தல்	4	காலமறிதல்	49
அறிவுடைமை	43	குடிசெயல்வகை	103
அன்புடைமை	8	குடிமை	96
ஆள்வினையுடைமை	62	குறிப்பறிதல்	71
இகல்	86	குறிப்பறிதல்	110
இடனறிதல்	50	குறிப்பறிவுறுத்தல்	128
இடுக்கணழியாமை	63	குற்றங்கடிதல்	44
இரவச்சம்	107	கூடாநட்பு	83
இரவு	106	கூடாவொழுக்கம்	28
இல்வாழ்க்கை	5	கேள்வி	42
இறைமாட்சி	39	கொடுங்கோன்மை	56
இனியவைகூறல்	10	கொல்லாமை	33
இன்னாசெய்யாமை	32	சான்றாண்மை	99
ஈகை	23	சிற்றினஞ்சேராமை	46
உட்பகை	89	சுற்றந்தழால்	53
உழவு	104	சூது	94
உறுப்புநலனழிதல்	124	செங்கோன்மை	55
ஊக்கமுடைமை	60	செய்ந்நன்றியறிதல்	11
ஊடலுவகை	133	சொல்வன்மை	65
ஊழ்	38	தகையணங்குறுத்தல்	109
ஒப்புரவறிதல்	22	தவம்	27
ஒழுக்கமுடைமை	14	தனிப்படர்மிகுதி	120
ஒற்றாடல்	59	தீநட்பு	82

அதிகாரம்	பக்கம்	அதிகாரம்	பக்கம்
தீவினையச்சம்	21	புணர்ச்சிவிதும்பல்	129
துறவு	35	புதல்வரைப்பெறுதல்	7
தூது	69	புலவி	131
தெரிந்துசெயல்வகை	47	புலவிநுணுக்கம்	132
தெரிந்துதெளிதல்	51	புலான்மறுத்தல்	26
தெரிந்துவினையாடல்	52	புல்லறிவாண்மை	85
நடுவுநிலைமை	12	புறங்கூறாமை	19
நட்பாராய்தல்	80	பெண்வழிச்சேறல்	91
நட்பு	79	பெரியாரைத்துணைக்கோடல்	45
நலம்புனைந்துரைத்தல்	112	பெரியாரைப்பிழையாமை	90
நல்குரவு	105	பெருமை	98
நன்றியில்செல்வம்	101	பேதைமை	84
நாடு	74	பொச்சாவாமை	54
நாணுடைமை	102	பொருள்செயல்வகை	76
நாணுத்துறவுரைத்தல்	114	பொழுதுகண்டிரங்கல்	123
நிலையாமை	34	பொறையுடைமை	16
நிறையழிதல்	126	மடியின்மை	61
நினைந்தவர்புலம்பல்	121	மருந்து	65
நீத்தார்பெருமை	3	மன்னரைச்சேர்ந்தொழுகல்	70
நெஞ்சொடுகிளத்தல்	125	மானம்	97
நெஞ்சொடுபுலத்தல்	130	மெய்யுணர்தல்	36
பகைத்திறந்தெரிதல்	88	வரைவின்மகளிர்	92
பகைமாட்சி	87	வலியறிதல்	48
பசப்புறுபருவரல்	119	வாய்மை	30
படர்மெலிந்திரங்கல்	117	வாழ்க்கைத்துணைநலம்	6
படைச்செருக்கு	78	வான்சிறப்பு	2
படைமாட்சி	77	விருந்தோம்பல்	9
பண்புடைமை	100	வினைசெயல்வகை	68
பயனிலசொல்லாமை	20	வினைதிட்பம்	67
பழைமை	81	வினைத்தூய்மை	66
பிரிவாற்றாமை	116	வெகுளாமை	31
பிறனில்விழையாமை	15	வெஃகாமை	18
புகழ்	24	வெருவந்தசெய்யாமை	57
புணர்ச்சிமகிழ்தல்	111		

திருக்குறள்

அறத்துப்பால்

பாயிரம்

முதல் அதிகாரம்—கடவுள் வாழ்த்து

இது, உலகத்திற்கு முதற்காரணமாய்விளங்கும் முழுமுதற்கடவுளைப்பற்றியது ; அதனால் இவ்வதிகாரம் முதலில் வைக்கப்பட்டது.

அகர முதல வெழுத்தெல்லா மாதி
பகவன் முதற்றே யுலகு. 1

கற்றதனு லாய பயனென்கொல் வாலறிவன்
நற்றா டொழாஅ ரெனின். 2

மலர்மிசை யேகினான் மாணடி சேர்ந்தார்
நிலமிசை நீடுவாழ் வார். 3

வேண்டுதல்வேண் டாமை யிலானடி சேர்ந்தார்க்
கியாண்டு மிடும்பை யில. 4

இருள்சே ரிருவினையுஞ் சேரா விறைவன்
பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு. 5

பொறிவாயி லைந்தவித்தான் பொய்தீ ரொழுக்க
நெறிநின்றார் நீடுவாழ் வார். 6

தனக்குவமை யில்லாதான் றாள்சேர்ந்தார்க் கல்லால்
மனக்கவலை மாற்ற லரிது. 7

அறவாழி யந்தணன் றாள்சேர்ந்தார்க் கல்லாற்
பிறவாழி நீந்த லரிது. 8

கோளில் பொறியிற் குணமிலவே யெண்குணத்தான்
றாளை வணங்காத் தலை. 9

பிறவிப் பெருங்கட னீந்துவர் நீந்தார்
இறைவ னடிசேரா தார். 10

2-ம் அதி.—வான் சிறப்பு

கடவுளது ஆணையால் உலகமும், அதற்கு உறுதியாகிய அறம் பொருள் இன்பங்களும் நடத்தற்கு முக்கிய காரணமாய் இருப்பது (அதாவது கடவுளதுகருணையைக் குறிப்பது) மழையே ஆகையால், இவ்வதிகாரம் அதன்பின் வைக்கப்பட்டது.

வானின் றுலகம் வழங்கி வருதலாற்
றானமிழ்த மென்றுணரற் பாற்று. 1

துப்பார்க்குத் துப்பாய துப்பாக்கித் துப்பார்க்குத்
துப்பாய தூஉ மழை. 2

விண்ணின்று பொய்ப்பின் விரிநீர் வியனுலகத்
துண்ணின் றுடற்றும் பசி. 3

ஏரி னுழாஅ ருழவர் புயலென்னும்
வாரி வளங்குன் றிக் கால். 4

கொடுப்பதூஉங் கெட்டார்க்குச் சார்வாய்மற் றாங்கே
எடுப்பதூஉ மெல்லா மழை. 5

விசும்பிற் றுளிவீழி னல்லான்மற் றாங்கே
பசும்புற் றலைகாண் பரிது. 6

நெடுங்கடலுந் தன்னீர்மை குன்றுந் தடிந்தெழிலி
தானல்கா தாகி விடின். 7

சிறப்பொடு பூசனை செல்லாது வானம்
வறக்குமேல் வானோர்க்கு மீண்டு. 8

தானந் தவமிரண்டுந் தங்கா வியனுலகம்
வானம் வழங்கா தெனின். 9

நீரின் றமையா துலகெனின் யார்யார்க்கும்
வானின் றமையா தொழுக்கு. 10

3-ம் அதி.—நீத்தார் பெருமை

இது, முனிவரது பெருமை கூறுதல். உலகப்பற்றினை யொழித்துக் கடவுள் திருவருள் பெற்றோர் முனிவரே ஆதலாலும், அவரே உலகுக்கு அறநெறி உணர்த்த வல்லவர் ஆதலாலும், கடவுளடியார்க்கு வணக்கங்கூறுதல் முறைமையாதலாலும் இவ் வதிகாரம் வான்சிறப்பின் பின் வைக்கப்பட்டது.

ஒழுக்கத்து நீத்தார் பெருமை விழுப்பத்து
வேண்டும் பனுவற் றுணிவு. 1

துறந்தார் பெருமை துணைக்கூறின் வையத்
திறந்தாரை யெண்ணிக்கொண் டற்று. 2

இருமை வகைதெரிந் தீண்டறம் பூண்டார்
பெருமை பிறங்கிற் றுலகு. 3

உரனென்னுந் தோட்டியா னோரைந்துங் காப்பான்
வரனென்னும் வைப்பிற்கோர் வித்து. 4

ஐந்தவித்தா னாற்ற லகல்விசும்பு ளார்கோமான்
இந்திரனே சாலுங் கரி. 5

செயற்கரிய செய்வார் பெரியர் சிறியர்
செயற்கரிய செய்கலா தார். 6

சுவையொளி யூறோசை நாற்றமென் றைந்தின்
வகைதெரிவான் கட்டே யுலகு. 7

நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து
மறைமொழி காட்டி விடும். 8

குணமென்னுங் குன்றேறி நின்றார் வெகுளி
கணமேயுங் காத்த லரிது. 9

அந்தண ரென்போ ரறவோர்மற் றெவ்வுயிர்க்குஞ்
செந்தண்மை பூண்டொழுக லான். 10

4-ம் அதி.—அறன் வலியுறுத்தல்

முனிவரான் உணர்த்தப்படும் அறம் பொருள் இன்பம் என்னும் மூன்றனுள், பொருளும் இன்பமும் போலாது அறன், இம்மை மறுமை வீடு என்னும் மூன்றனையும் பயத்தலால் இவ்வதிகாரம் நீத்தார் பெருமையின் பின் வைக்கப்பட்டது.

சிறப்பீனுஞ் செல்வமு மீனு மறத்தினூஉங்
காக்க மெவனோ வுயிர்க்கு. 1

அறத்தினூஉங் காக்கமு மில்லை யதனை
மறத்தலி னூங்கில்லை கேடு. 2

ஒல்லும் வகையா னறவினை யோவாதே
செல்லும்வா யெல்லாஞ் செயல். 3

மனத்துக்கண் மாசில னாத லனைத்தறன்
ஆகுல நீர பிற. 4

அழுக்கா றவாவெகுளி யின்னாச் சொன்னான்கும்
இழுக்கா வியன்ற தறம். 5

அன்றறிவா மென்னா தறஞ்செய்க மற்றது
பொன்றுங்காற் பொன்றாத் துணை. 6

அறத்தா றிதுவென வேண்டா சிவிகை
பொறுத்தானோ டூர்ந்தா னிடை. 7

வீழ்நாள் படாஅமை நன்றாற்றி னஃதொருவன்
வாழ்நாள் வழியடைக்குங் கல். 8

அறத்தான் வருவதே யின்பமற் றெல்லாம்
புறத்த புகழு மில. 9

செயற்பால தோரு மறனே யொருவற்
குயற்பால தோரும் பழி. 10

இவை நான்கும் பாயிரம்

இல்லறவியல்

5-ம் அதி.—இல்வாழ்க்கை

இல்லறம் துறவறம் என்னும் இரண்டு அறவாழ்க்கையுள் இல்லறமே சிறந்ததாதலால், மனையாளோடு கூடிவாழும் இல்வாழ்க்கையை உணர்த்தும் இவ்வதிகாரத்தை அறன் வலியுறுத்தலின் பின் வைக்கப்பட்டது.

இல்வாழ்வா னென்பா னியல்புடைய மூவர்க்கும்
நல்லாற்றி னின்ற துணை. 1

துறந்தார்க்குந் துவ்வா தவர்க்கு மிறந்தார்க்கும்
இல்வாழ்வா னென்பான் றுணை. 2

தென்புலத்தார் தெய்வம் விருந்தொக்க றானென்றாங்
கைம்புலத்தா றோம்ப றலை. 3

பழியஞ்சிப் பாத்தூ ணுடைத்தாயின் வாழ்க்கை
வழியெஞ்ச லெஞ்ஞான்று மில். 4

அன்பு மறனு முடைத்தாயி னில்வாழ்க்கை
பண்பும் பயனு மது. 5

அறத்தாற்றி னில்வாழ்க்கை யாற்றிற் புறத்தாற்றிற்
போஒய்ப் பெறுவ தெவன். 6

இயல்பினா னில்வாழ்க்கை வாழ்பவ னென்பான்
முயல்வாரு ளெல்லாந் தலை. 7

ஆற்றி னொழுக்கி யறனிழுக்கா வில்வாழ்க்கை
நோற்பாரி னோன்மை யுடைத்து. 8

அறனெனப் பட்டதே யில்வாழ்க்கை யஃதும்
பிறன்பழிப்ப தில்லாயி னன்று. 9

வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையுந்
தெய்வத்துள் வைக்கப் படும். 10

6-ம் அதி.—வாழ்க்கைத் துணைநலம்

இல்வாழ்க்கையின் சிறப்புமனைவியாலேயே ஏற்படவேண்டும். ஆகலான், அதன்பின் இவ்வதிகாரம் வைக்கப்பட்டது.

மனைத்தக்க மாண்புடைய ளாகித்தற் கொண்டான்
வளத்தக்காள் வாழ்க்கைத் துணை. 1

மனைமாட்சி யில்லாள்க ணில்லாயின் வாழ்க்கை
எனைமாட்சித் தாயினு மில். 2

இல்லதெ னில்லவண் மாண்பானா லுள்ளதென்
இல்லவண் மாணாக் கடை. 3

பெண்ணிற் பெருந்தக்க யாவுள கற்பென்னுந்
திண்மையுண் டாகப் பெறின். 4

தெய்வந் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யு மழை. 5

தற்காத்துத் தற்கொண்டாற் பேணித் தகைசான்ற
சொற்காத்துச் சோர்விலாள் பெண். 6

சிறைகாக்குங் காப்பெவன் செய்யுமகளிர்
நிறைகாக்குங் காப்பே தலை. 7

பெற்றாற் பெறிற்பெறுவர் பெண்டிர் பெருஞ்சிறப்புப்
புத்தேளிர் வாழு முலகு. 8

புகழ்புரிந் தில்லிலோர்க் கில்லை யிகழ்வார்முன்
ஏறுபோற் பீடு நடை. 9

மங்கல மென்ப மனைமாட்சி மற்றதன்
நன்கல நன்மக்கட் பேறு. 10

7-ம் அதி.—புதல்வரைப் பேறுதல்

முனிவர் கடன் கேள்வியானுந் தேவர் கடன் வேள்வியானும் தென்புலத்தார் கடன் புதல்வரைப் பெறுதலானும் அல்லதுசெலுத் தக்கூடாமையால் அக்கடன் செலுத்துதற்கும் மனையின் அழகுக் கும் நல் மக்களைப் பெறவேண்டு மாதலால் இவ்வதிகாரம் வாழ்க் கைத் துணை நலத்தின்பின் வைக்கப்பட்டது.

பெறுமவற்றுள் யாமறிவ தில்லை யறிவறிந்த
மக்கட்பே றல்ல பிற. 1

எழுபிறப்புந் தீயவை தீண்டா பழிபிறங்காப்
பண்புடை மக்கட் பெறின். 2

தம்பொரு ளென்ப தம்மக்க ளவர்பொருள்
தந்தம் வினையான் வரும். 3

அமிழ்தினு மாற்ற வினிதேதம் மக்கள்
சிறுகை யளாவிய கூழ். 4

மக்கண்மெய் தீண்ட லுடற்கின்ப மற்றவர்
சொற்கேட்ட லின்பஞ் செவிக்கு. 5

குழலினி தியாழினி தென்பதம் மக்கள்
மழலைச்சொற் கேளா தவர். 6

தந்தை மகற்காற்று நன்றி யவையத்து
முந்தி யிருப்பச் செயல். 7

தம்மிற்றம் மக்க ளறிவுடைமை மாநிலத்து
மன்னுயிர்க் கெல்லா மினிது. 8

ஈன்ற பொழுதிற் பெரிதுவக்குந் தன்மகனைச்
சான்றோ னெனக்கேட்ட தாய். 9

மகன்றந்தைக் காற்று முதவி யிவன்றந்தை
என்னோற்றான் கொல்லெனுஞ் சொல். 10

8-ம் அதி.—அன்புடைமை

மனைவி மக்கள் முதலாகிய சம்பந்த முடையவரிடத்தே ஆசை உண்டாகுதல்இயல்பு. ஆதலால், இவ்வதிகாரம் புதல்வரைப் பெறு தலின் பின் வைக்கப்பட்டது.

அன்பிற்கு முண்டோ வடைக்குந்தா ழார்வலர்
புன்கணீர் பூச றரும். 1

அன்பிலா ரெல்லாந் தமக்குரிய ரன்புடையார்
என்பு முரியர் பிறர்க்கு. 2

அன்போ டியைந்த வழக்கென்ப வாருயிர்க்
கென்போ டியைந்த தொடர்பு. 3

அன்பீனு மார்வ முடைமை யதுவீனும்
நண்பென்னு நாடாச் சிறப்பு. 4

அன்புற் றமர்ந்த வழக்கென்ப வையகத்
தின்புற்றா ரெய்துஞ் சிறப்பு. 5

அறத்திற்கே யன்புசார் பென்ப வறியார்
மறத்திற்கு மஃதே துணை. 6

என்பி லதனை வெயில்போலக் காயுமே
அன்பி லதனை யறம். 7

அன்பகத் தில்லா வுயிர்வாழ்க்கை வன்பாற்கண்
வற்றன் மரந்தளிர்த் தற்று. 8

புறத்துறுப் பெல்லா மெவன்செய்யும் யாக்கை
அகத்துறுப் பன்பி லவர்க்கு. 9

அன்பின் வழிய துயிர்நிலை யஃதிலார்க்
கென்புதோல் போர்த்த வுடம்பு. 10

9-ம் அதி.—விருந்தோம்பல்

தென்புலத்தார், தெய்வம், விருந்தினர், சுற்றத்தார், தான் என்கிற ஐவகையோரை உபசரித்தல்களிலே முன்னவையிரண்டும் கண்ணுற் காணப்படாதவரை நினைத்துச் செயப்படுவன வாதலாலும், பின்னவை இரண்டும் பிறர்க்குக் கொடுத்தலல்லாமையாலும், நடுநின்ற விருந்தோம்பல் சிறப்பையுடையதாகி அவ்வில்லறங்களுக்கு முதலாயிற்று. வேறுபாடில்லாத அன்பையுடைய கணவனும் மனையாளுங்கூடி யல்லது செயக்கூடாமையால் இவ்வதிகாரம் அன்புடைமையின் பின் வைக்கப்பட்டது.

இருந்தோம்பி யில்வாழ்வ தெல்லாம் விருந்தோம்பி
வேளாண்மை செய்தற் பொருட்டு. 1

விருந்து புறத்ததாத் தானுண்டல் சாவா
மருந்தெனினும் வேண்டற்பாற் றன்று. 2

வருவிருந்து வைகலு மோம்புவான் வாழ்க்கை
பருவந்து பாழ்படுத லின்று. 3

அகனமர்ந்து செய்யா ளுறையு முகனமர்ந்து
நல்விருந் தோம்புவா னில். 4

வித்து மிடல்வேண்டுங் கொல்லோ விருந்தோம்பி
மிச்சின் மிசைவான் புலம். 5

செல்விருந் தோம்பி வருவிருந்து பார்த்திருப்பான்
நல்விருந்து வானத் தவர்க்கு. 6

இனைத்துணைத் தென்பதொன் றில்லை விருந்தின்
துணைத்துணை வேள்விப் பயன். 7

பரிந்தோம்பிப் பற்றற்றே மென்பர் விருந்தோம்பி
வேள்வி தலைப்படா தார். 8

உடைமையு ளின்மை விருந்தோம்ப லோம்பா
மடமை மடவார்க ணுண்டு. 9

மோப்பக் குழையு மனிச்ச முகந்திரிந்து
நோக்கக் குழையும் விருந்து. 10

10-ம் அதி.—இனியவை கூறல்

மனத்தின்கண் உவகையை வெளிப்படுப்பனவாகிய இனிய சொற்களைச் சொல்லுதலும், விருந்தோம்புவார்க்கு இன்றியமையா தாகலின், இவ்வதிகாரம் விருந்தோம்பலின் பின் வைக்கப்பட்டது.

இன்சொலா லீர மளைஇப் படிறிலவாஞ்
செம்பொருள் கண்டார்வாய்ச் சொல். 1

அகனமர்ந் தீதலி னன்றே முகனமர்ந்
தின்சொல னாகப் பெறின். 2

முகத்தா னமர்ந்தினிது நோக்கி யகத்தானும்
இன்சொ லினதே யறம். 3

துன்புறூஉந் துவ்வாமை யில்லாகும் யார்மாட்டும்
இன்புறூஉ மின்சொ லவர்க்கு. 4

பணிவுடைய னின்சொல னாத லொருவற்
கணியல்ல மற்றுப் பிற. 5

அல்லவை தேய வறம்பெருகு நல்லவை
நாடி யினிய சொலின். 6

நயனீன்று நன்றி பயக்கும் பயனீன்று
பண்பிற் றலைப்பிரியாச் சொல். 7

சிறுமையு ணீங்கிய வின்சொன் மறுமையும்
இம்மையு மின்பந் தரும். 8

இன்சொ லினிதீன்றல் காண்பா னெவன்கொலோ
வன்சொல் வழங்கு வது. 9

இனிய வுளவாக வின்னாத கூறல்
கனியிருப்பக் காய்கவர்ந் தற்று. 10

11-ம் அதி.—செய்ந்நன்றி யறிதல்

இனிய சொற்களைச்சொல்லி இல்லறத்தின் வழுவாதவர்க்கு நன்றிமறத்தல் தீராக்குற்றமாதலின், இதனை நீக்குதற்பொருட்டு இவ்வதிகாரம் இனியவைகூறலின்பின் வைக்கப்பட்டது.

செய்யாமற் செய்த வுதவிக்கு வையகமும்
வானகமு மாற்ற லரிது. 1

காலத்தி னாற்செய்த நன்றி சிறிதெனினும்
ஞாலத்தின் மாணப் பெரிது. 2

பயன்றூக்கார் செய்த வுதவி நயன்றூக்கின்
நன்மை கடலிற் பெரிது. 3

தினைத்துணை நன்றி செயினும் பனைத்துணையாக்
கொள்வர் பயன்றெரி வார். 4

உதவி வரைத்தன் றுதவி யுதவி
செயப்பட்டார் சால்பின் வரைத்து. 5

மறவற்க மாசற்றார் கேண்மை துறவற்க
துன்பத்துட் டுப்பாயார் நட்பு. 6

எழுமை யெழுபிறப்பு முள்ளுவர் தங்கண்
விழுமந் துடைத்தவர் நட்பு. 7

நன்றி மறப்பது நன்றன்று நன்றல்ல
தன்றே மறப்பது நன்று. 8

கொன்றன்ன வின்னா செயினு மவர்செய்த
ஒன்றுநன் றுள்ளக் கெடும். 9

எந்நன்றி கொன்றார்க்கு முய்வுண்டா முய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு. 10

12-ம் அதி.—நடுவுநிலைமை

தனக்கு நன்றியைச் செய்தவரிடத்து அன்பு பாராட்ட வேண்டுவது கடமையாயினும், அவரிடத்தும் பக்ஷபாதமாக ஒழுகுதல் கூடாது என்பதை விளக்கும் பொருட்டு, நடுவுநிலைமையென்னும் அதிகாரம் செய்ந்நன்றி யறிதலென்னும் அதிகாரத்தின்பின் வைக்கப்பட்டது.

தகுதி யெனவொன்று நன்றே பகுதியாற்
பாற்பட் டொழுகப் பெறின். 1

செப்ப முடையவ னாக்கஞ் சிதைவின்றி
எச்சத்திற் கேமாப் புடைத்து. 2

நன்றே தரினு நடுவிகந்தா மாக்கத்தை
அன்றே யொழிய விடல். 3

தக்கார் தகவில ரென்ப தவரவர்
எச்சத்தாற் காணப் படும். 4

கேடும் பெருக்கமு மில்லல்ல நெஞ்சத்துக்
கோடாமை சான்றோர்க் கணி. 5

கெடுவல்யா னென்ப தறிகதன் னெஞ்சம்
நடுவொரீஇ யல்ல செயின். 6

கெடுவாக வையா துலக நடுவாக
நன்றிக்கட் டங்கியான் றாழ்வு. 7

சமன்செய்து சீர்தூக்குங் கோல்போ லமைந்தொருபாற்
கோடாமை சான்றோர்க் கணி. 8

சொற்கோட்ட மில்லது செப்ப மொருதலையா
உட்கோட்ட மின்மை பெறின். 9

வாணிகஞ் செய்வார்க்கு வாணிகம் பேணிப்
பிறவுந் தம்போற் செயின். 10

13-ம். அதி.—அடக்க முடைமை

அடக்கமுடைமையாவது காயமும் வாக்கும், மனமும், தீய வழியிலே செல்லாமல் அடங்குதலுடையவனா யிருத்தலாம். இது பிறர் குற்றம்போலத் தங்குற்றமும் காணும்நடுவு நிலைமையுடையவனுக்கு உரித்தாதலால் இது நடுவுநிலைமையின்பின் வைக்கப்பட்டது.

அடக்க மமரரு ளுய்க்கு மடங்காமை
ஆரிரு ளுய்த்து விடும். 1

காக்க பொருளா வடக்கத்தை யாக்கம்
அதனினூஉங் கில்லை யுயிர்க்கு. 2

செறிவறிந்து சீர்மை பயக்கு மறிவறிந்
தாற்றி னடங்கப் பெறின். 3

நிலையிற் றிரியா தடங்கியான் றோற்றம்
மலையினு மாணப் பெரிது. 4

எல்லார்க்கு நன்றாம் பணித லவருள்ளுஞ்
செல்வர்க்கே செல்வந் தகைத்து. 5

ஒருமையு ளாமைபோ லைந்தடக்க லாற்றின்
எழுமையு மேமாப் புடைத்து. 6

யாகாவா ராயினு நாகாக்க காவாக்காற்
சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு. 7

ஒன்றானுந் தீச்சொற் பொருட்பய னுண்டாயின்
நன்றாகா தாகி விடும். 8

தீயினாற் சுட்டபு ணுள்ளாறு மாறாதே
நாவினாற் சுட்ட வடு. 9

கதங்காத்துக் கற்றடங்க லாற்றுவான் செவ்வி
அறம்பார்க்கு மாற்றி னுழைந்து. 10

14-ம் அதி.—ஒழுக்க முடைமை

அதாவது தத்தம் வருணத்திற்கும் நிலைக்கும் ஓதப்பட்ட ஒழுக்கத்தினை உடையராதல். இது, மெய்ம்முதலிய அடங்கினார்க்கல்லது முடியாதாகலின் இது, அடக்கமுடைமையின்பின்வைக்கப்பட்டது.

ஒழுக்கம் விழுப்பந் தரலா னொழுக்கம்
உயிரினு மோம்பப் படும். 1

பரிந்தோம்பிக் காக்க வொழுக்கந் தெரிந்தோம்பித்
தேரினு மஃதே துணை. 2

ஒழுக்க முடைமை குடிமை யிழுக்கம்
இழிந்த பிறப்பாய் விடும். 3

மறப்பினு மோத்துக் கொளலாகும் பார்ப்பான்
பிறப்பொழுக்கங் குன்றக் கெடும். 4

அழுக்கா றுடையான்க ணாக்கம்போன் றில்லை
ஒழுக்க மிலான்க ணுயர்வு. 5

ஒழுக்கத்தி னொல்கா ருரவோ ரிழுக்கத்தின்
ஏதம் படுபாக் கறிந்து. 6

ஒழுக்கத்தி னெய்துவர் மேன்மை யிழுக்கத்தின்
எய்துவ ரெய்தாப் பழி. 7

நன்றிக்கு வித்தாகு நல்லொழுக்கந் தீயொழுக்கம்
என்று மிடும்பை தரும். 8

ஒழுக்க முடையவர்க் கொல்லாவே தீய
வழுக்கியும் வாயாற் சொலல். 9

உலகத்தோ டொட்ட வொழுகல் பலகற்றுங்
கல்லா ரறிவிலா தார். 10

15-ம் அதி.—பிறனில் விழையாமை

அதாவது காமமயக்கத்தினாலே பிறனது மனையாளை விரும்பாமையாம். இது, ஒழுக்கமுடையவரிடத்தே உண்டாவதாகலின் அதன்பின் வைக்கப்பட்டது.

பிறன்பொருளாட் பெட்டொழுகும் பேதைமை ஞாலத்
தறம்பொருள் கண்டார்க ணில். 1

அறன்கடை நின்றாரு ளெல்லாம் பிறன்கடை
நின்றாரிற் பேதையா ரில். 2

விளிந்தாரின் வேறல்லர் மன்ற தெளிந்தாரில்
தீமை புரிந்தொழுகு வார். 3

எனைத்துணைய ராயினு மென்னாந் தினைத்துணையுந்
தேரான் பிறனில் புகல். 4

எளிதென வில்லிறப்பா னெய்துமெஞ் ஞான்றும்
விளியாது நிற்கும் பழி. 5

பகைபாவ மச்சம் பழியென நான்கும்
இகவாவா மில்லிறப்பான் கண். 6

அறனியலா னில்வாழ்வா னென்பான் பிறனியலாள்
பெண்மை நயவா தவன். 7

பிறன்மனை நோக்காத பேராண்மை சான்றோர்க்
கறனொன்றோ வான்ற வொழுக்கு. 8

நலக்குரியார் யாரெனி னாமநீர் வைப்பிற்
பிறற்குரியா டோடோயா தார். 9

அறன்வரையா னல்ல செயினும் பிறன்வரையாள்
பெண்மை நயவாமை நன்று. 10

16-ம் அதி.—பொறை யுடைமை

அதாவது, காரணம்பற்றியாவது அறியாமையாலாவது ஒருவன் தம்மிடத்துத் தீங்குசெய்தவிடத்துத் தாமும் அதனை அவனிடத்துச் செய்யாது பொறுத்தலுடையராதலாம். இது, பிறனில் விழையாமைபோல் அவசியம் வேண்டுவதா யிருக்கையால் அதன் பின் வைக்கப்பட்டது.

அகழ்வாரைத் தாங்கு நிலம்போலத் தம்மை
இகழ்வார்ப் பொறுத்த றலை. 1

பொறுத்த லிறப்பினை யென்று மதனை
மறத்த லதனினு நன்று. 2

இன்மையு ளின்மை விருந்தொரால் வன்மையுள்
வன்மை மடவார்ப் பொறை. 3

நிறையுடைமை நீங்காமை வேண்டிற் பொறையுடைமை
போற்றி யொழுகப் படும். 4

ஒறுத்தாரை யொன்றாக வையாரே வைப்பர்
பொறுத்தாரைப் பொன்போற் பொதிந்து. 5

ஒறுத்தார்க் கொருநாளை யின்பம் பொறுத்தார்க்குப்
பொன்றுந் துணையும் புகழ். 6

திறனல்ல தற்பிறர் செய்யினு நோநொந்
தறனல்ல செய்யாமை நன்று. 7

மிகுதியான் மிக்கவை செய்தாரைத் தாந்தந்
தகுதியான் வென்று விடல். 8

துறந்தாரிற் றூய்மை யுடைய ரிறந்தார்வாய்
இன்னாச்சொ னோக்கிற் பவர். 9

உண்ணாது நோற்பார் பெரியர் பிறர்சொல்லும்
இன்னாச்சொ னோற்பாரிற் பின். 10

17-ம் அதி.—அழுக்காறாமை

அதாவது, பிறர் செல்வ முதலானவை கண்ட விடத்துப் பொறாமைப்படாமை. இப்பொறாமையும் பொறுமைக்கு எதிரிய தாதலின் இதனை விலக்குதற்கு இது பொறை யுடைமையின் பின்னே வைக்கப்பட்டது.

ஒழுக்காறாக் கொள்க வொருவன்றன் னெஞ்சத்
தழுக்கா றிலாத வியல்பு. 1

விழுப்பேற்றி னஃதொப்ப தில்லையார் மாட்டும்
அழுக்காற்றி னன்மை பெறின். 2

அறனாக்கம் வேண்டாதா னென்பான் பிறனாக்கம்
பேணா தழுக்கறுப் பான். 3

அழுக்காற்றி னல்லவை செய்யா ரிழுக்காற்றின்
ஏதம் படுபாக் கறிந்து. 4

அழுக்கா றுடையார்க் கதுசாலு மொன்னார்
வழுக்கியுங் கேடீன் பது. 5

கொடுப்ப தழுக்கறுப்பான் சுற்ற முடுப்பதூஉம்
உண்பதூஉ மின்றிக் கெடும். 6

அவ்வித் தழுக்கா றுடையானைச் செய்யவள்
தவ்வையைக் காட்டி விடும். 7

அழுக்கா றெனவொரு பாவி திருச்செற்றுத்
தீயுழி யுய்த்து விடும். 8

அவ்விய நெஞ்சத்தா னாக்கமுஞ் செவ்வியான்
கேடு நினைக்கப் படும். 9

அழுக்கற் றகன்றாரு மில்லையஃ தில்லார்
பெருக்கத்திற் றீர்ந்தாரு மில். 10

18-ம் அதி.—வெஃகாமை

அஃதாவது, பிறர்க்கு உரிய பொருளை வௌவக்கருதாமை. பிறருடைமை கண்டவழிப் பொறுமை யேயன்றி அதனைத் தான் வௌவக் கருதுதலும் குற்றமென்றற்கு, இஃது, அழுக்காறாமை யின்பின் வைக்கப்பட்டது.

நடுவின்றி நன்பொருள் வெஃகிற் குடிபொன்றிக்
குற்றமு மாங்கே தரும். 1

படுபயன் வெஃகிப் பழிப்படுவ செய்யார்
நடுவன்மை நாணு பவர். 2

சிற்றின்பம் வெஃகி யறனல்ல செய்யாரே
மற்றின்பம் வேண்டு பவர். 3

இலமென்று வெஃகுதல் செய்யார் புலம்வென்ற
புன்மையில் காட்சி யவர். 4

அஃகி யகன்ற வறிவென்னும் யார்மாட்டும்
வெஃகி வெறிய செயின். 5

அருள்வெஃகி யாற்றின்க ணின்றான் பொருள்வெஃகிப்
பொல்லாத சூழக் கெடும். 6

வேண்டற்க வெஃகியா மாக்கம் விளைவயின்
மாண்டற் கரிதாம் பயன். 7

அஃகாமை செல்வத்திற் கியாதெனின் வெஃகாமை
வேண்டும் பிறன்கைப் பொருள். 8

அறனறிந்து வெஃகா வறிவுடையார்ச் சேருந்
திறனறிந் தாங்கே திரு. 9

இறலீனு மெண்ணாது வெஃகின் விறலீனும்
வேண்டாமை யென்னுஞ் செருக்கு. 10

19-ம் அதி.—புறங்கூறாமை

அதாவது, காணாதவிடத்தே பிறரை இகழ்ந்து பேசாமையாம். வாக்கின் குற்றம் மனக்குற்றத்தின் வழியாகத் தோன்றலால், இது அழுக்காறாமை வெஃகாமைகளின் பின் வைக்கப்பட்டது.

அறங்கூறா னல்ல செயினு மொருவன்
புறங்கூறா னென்ற லினிது. 1

அறனழீஇ யல்லவை செய்தலிற் றீதே
புறனழீஇப் பொய்த்து நகை. 2

புறங்கூறிப் பொய்த்துயிர் வாழ்தலிற் சாதல்
அறங்கூறு மாக்கந் தரும். 3

கண்ணின்று கண்ணறச் சொல்லினுஞ் சொல்லற்க
முன்னின்று பின்னோக்காச் சொல். 4

அறஞ்சொல்லு நெஞ்சத்தா னன்மை புறஞ்சொல்லும்
புன்மையாற் காணப் படும். 5

பிறன்பழி கூறுவான் றன்பழி யுள்ளுந்
திறன்றெரிந்து கூறப் படும். 6

பகச்சொல்லிக் கேளிர்ப் பிரிப்பர் நகச்சொல்லி
நட்பாட லேற்றா தவர். 7

துன்னியார் குற்றமுந் தூற்று மரபினார்
என்னைகொ லேதிலார் மாட்டு. 8

அறனோக்கி யாற்றுங்கொல் வையம் புறனோக்கிப்
புன்சொ லுரைப்பான் பொறை. 9

ஏதிலார் குற்றம்போற் றங்குற்றங் காண்கிற்பிற்
றீதுண்டோ மன்னு முயிர்க்கு. 10

20-ம் அதி.—பயனில சொல்லாமை

அஃதாவது, தமக்கும் பிறர்க்கும் அறம் பொருளின்பங்களுள் ஒன்றையுந்தாராத சொற்களைச் சொல்லாமையாம். பொய், குறளை, கடுஞ்சொல், பயனில்சொல், என வாக்கினிடத்தே உண்டாம் பாவம் நான்கினுள் பொய் துறந்தோர்க்கு அல்லது பற்றற விடக் கூடாமையால், அதனை ஒழித்து இல்வாழ்வாரால் விடக் கூடுமவையாகிய மற்றை மூன்றினுள், கடுஞ்சொல் இனியவை கூறலாலும், குறளை புறங்கூறாமையாலும், விலக்கிநின்ற பயனில் சொல்லை இதனால் விலக்குகின்றாராகலால், இது, புறங்கூறாமையின் பின் வைக்கப்பட்டது.

பல்லார் முனியப் பயனில சொல்லுவான்
எல்லாரு மெள்ளப் படும். 1

பயனில பல்லார்முற் சொல்ல னயனில
நட்டார்கட் செய்தலிற் றீது. 2

நயனில னென்பது சொல்லும் பயனில
பாரித் துரைக்கு முரை. 3

நயன்சாரா நன்மையி னீக்கும் பயன்சாராப்
பண்பில்சொல் பல்லா ரகத்து. 4

சீர்மை சிறப்பொடு நீங்கும் பயனில
நீர்மை யுடையார் சொலின். 5

பயனில்சொற் பாராட்டு வானை மகனெனல்
மக்கட் பதடி யெனல். 6

நயனில சொல்லினுஞ் சொல்லுக சான்றோர்
பயனில சொல்லாமை நன்று. 7

அரும்பய னாயு மறிவினார் சொல்லார்
பெரும்பய னில்லாத சொல். 8

பொருடீர்ந்த பொச்சாந்துஞ் சொல்லார் மருடீர்ந்த
மாசறு காட்சி யவர். 9

சொல்லுக சொல்லிற் பயனுடைய சொல்லற்க
சொல்லிற் பயனிலாச் சொல். 10

21-ம் அதி.—தீவினையச்சம்

அஃதாவது, பாவங்களாயுள்ளவைகளைச் செய்தற்கு அஞ்சுதலாம். இதனால் காயத்தினிடத்தே விளைகின்ற பாவங்களையெல்லாம் தொகுத்து விலக்குகின்றாராகலின், இது பயனில் சொல்லாமையின்பின் வைக்கப்பட்டது.

தீவினையா ரஞ்சார் விழுமியா ரஞ்சுவர்
தீவினை யென்னுஞ் செருக்கு. 1

தீயவை தீய பயத்தலாற் றீயவை
தீயினு மஞ்சப் படும். 2

அறிவினு ளெல்லாந் தலையென்ப தீய
செறுவார்க்குஞ் செய்யா விடல். 3

மறந்தும் பிறன்கேடு சூழற்க சூழின்
அறஞ்சூழுஞ் சூழ்ந்தவன் கேடு. 4

இலனென்று தீயவை செய்யற்க செய்யின்
இலனாகு மற்றும் பெயர்த்து. 5

தீப்பால தான்பிறர்கட் செய்யற்க நோய்ப்பால
தன்னை யடல்வேண்டா தான். 6

எனைப்பகை யுற்றாரு முய்வர் வினைப்பகை
வீயாது பின்சென் றடும். 7

தீயவை செய்தார் கெடுத னிழன்றன்னை
வீயா தடியுறைந் தற்று. 8

தன்னைத்தான் காதல னாயினெனைத் தொன்றுந்
துன்னற்க தீவினைப் பால். 9

அருங்கேட னென்ப தறிக மருங்கோடித்
தீவினை செய்யா னெனின். 10

22-ம் அதி.—ஒப்புரவறிதல்

அஃதாவது, உலகநடையினை அறிந்து செய்தல். உலகநடை வேதநடைபோல அறநூல்களுட் கூறப்படுவதன்றித் தாமே அறிந்து செய்யுந் தன்மைத்தாகலின், ஒப்புரவறிதல் என்றார். மேல் மனமொழி மெய்களால் தவிரத்தகுவன கூறினார். இனி செய்யத்தகுவனவற்றுள் எஞ்சி நின்றன கூறுகின்றாராகலின், இது தீவினையச்சத்தின்பின் வைக்கப்பட்டது.

கைம்மாறு வேண்டா கடப்பாடு மாரிமாட்
டென்னாற்றுங் கொல்லோ வுலகு. 1

தாளாற்றித் தந்த பொருளெல்லாந் தக்கார்க்கு
வேளாண்மை செய்தற் பொருட்டு. 2

புத்தே ளுலகத்து மீண்டும் பெறலரிதே
ஒப்புரவி னல்ல பிற. 3

ஒத்த தறிவா னுயிர்வாழ்வான் மற்றையான்
செத்தாருள் வைக்கப் படும். 4

ஊருணி நீர்நிறைந் தற்றே யுலகவாம்
பேரறி வாளன் றிரு. 5

பயன்மர முள்ளூர்ப் பழுத்தற்றாற் செல்வம்
நயனுடை யான்கட் படின். 6

மருந்தாகித் தப்பா மரத்தற்றாற் செல்வம்
பெருந்தகை யான்கட் படின். 7

இடனில் பருவத்து மொப்புரவிற் கொல்கார்
கடனறி காட்சி யவர். 8

நயனுடையா னல்கூர்ந்தா னாதல் செயுநீர
செய்யா தமைகலா வாறு. 9

ஒப்புரவி னால்வருங் கேடெனி னஃதொருவன்
விற்றுக்கோட் டக்க துடைத்து. 10

23-ம் அதி.—ஈகை

அஃதாவது, வறியவராய் இரந்தவர்க்கு இல்லையென்னாமல் கொடுத்தல்; இது மறுமையைக் குறித்ததாகலின், இம்மையைக் குறித்த ஒப்புரவறிதலின்பின் வைக்கப்பட்டது.

வறியார்க்கொன் றீவதே யீகைமற் றெல்லாங்
குறியெதிர்ப்பை நீர துடைத்து. 1

நல்லா றெனினுங் கொளறீது மேலுலகம்
இல்லெனினு மீதலே நன்று. 2

இலனென்னு மெவ்வ முரையாமை யீதல்
குலனுடையான் கண்ணே யுள. 3

இன்னா திரக்கப் படுத லிரந்தவர்
இன்முகங் காணு மளவு. 4

ஆற்றுவா ராற்றல் பசியாற்ற லப்பசியை
மாற்றுவா ராற்றலிற் பின். 5

அற்றா ரழிபசி தீர்த்த லஃதொருவன்
பெற்றான் பொருள்வைப் புழி. 6

பார்த்தூண் மரீஇ யவனைப் பசியென்னுந்
தீப்பிணி தீண்ட லரிது. 7

ஈத்துவக்கு மின்ப மறியார்கொ றாமுடைமை
வைத்திழக்கும் வன்க ணவர். 8

இரத்தலி னின்னாது மன்ற நிரப்பிய
தாமே தமிய ருணல். 9

சாதலி னின்னாத தில்லை யினிததூஉம்
ஈத லியையாக் கடை. 10

24-ம் அதி.—புகழ்

அஃதாவது, இல்வாழ்க்கை முதல் ஈகை ஈறுகச் சொல்லப் பட்ட இல்லறத்தில் வழுவாதார்க்கு இம்மைப்பயனுகிய இவ்வுலகத் திலே செய்தபடியே நிற்பதாகிய கீர்த்தியாம். இது பெரும்பாலும் ஈகைபற்றி வருதலால் அதன்பின் வைக்கப்பட்டது.

ஈத லிசைபட வாழ்த லதுவல்ல
தூதிய மில்லை யுயிர்க்கு. 1

உரைப்பா ருரைப்பவை யெல்லா மிரப்பார்க்கொன்
றீவார்மே னிற்கும் புகழ். 2

ஒன்ரு வுலகத் துயர்ந்த புகழல்லாற்
பொன்ருது நிற்பதொன் றில். 3

நிலவரை நீள்புக ழாற்றிற் புலவரைப்
போற்ருது புத்தே ளுலகு. 4

நத்தம்போற் கேடு முளதாகுஞ் சாக்காடும்
வித்தகர்க் கல்லா லரிது. 5

தோன்றிற் புகழொடு தோன்றுக வஃதிலார்
தோன்றலிற் ருேன்ருமை நன்று. 6

புகழ்பட வாழாதார் தந்நோவார் தம்மை
இகழ்வாரை நோவ தெவன். 7

வசையென்ப வையத்தார்க் கெல்லா மிசையென்னும்
எச்சம் பெருஅ விடின். 8

வசையிலா வண்பயன் குன்று மிசையிலா
யாக்கை பொறுத்த நிலம். 9

வசையொழிய வாழ்வாரே வாழ்வா ரிசையொழிய
வாழ்வாரே வாழா தவர். 10

இல்லறவியல் முற்றிற்று

துறவறவியல்

25-ம் அதி.—அருளுடைமை

அஃதாவது, தொடர்பு பற்றுமல் இயல்பாக எல்லா உயிர்களின் மேலும் செல்வதாகிய கருணையுடையராதலாம். இல்லறத்துக்கு அன்புடைமைபோல் இது, துறவறத்துக்குச் சிறந்தமையின் புகழின் பின்னும், துறவறவியலின் முன்னும் வைக்கப்பட்டது.

அருட்செல்வஞ் செல்வத்துட் செல்வம் பொருட்செல்வம்
பூரியார் கண்ணு முள. 1

நல்லாற்று ணாடி யருளாள்க பல்லாற்றுற்
றேரினு மஃதே துணை. 2

அருள்சேர்ந்த நெஞ்சினூர்க் கில்லை யிருள்சேர்ந்த
இன்னு வுலகம் புகல். 3

மன்னுயி ரோம்பி யருளாள்வாற் கில்லென்ப
தன்னுயி ரஞ்சும் வினை. 4

அல்ல லருளாள்வார்க் கில்லை வளிவழங்கும்
மல்லன்மா ஞாலங் கரி. 5

பொருணீங்கிப் பொச்சாந்தா ரென்ப ரருணீங்கி
அல்லவை செய்தொழுகு வார். 6

அருளில்லார்க் கவ்வுலக மில்லை பொருளில்லார்க்
கிவ்வுலக மில்லா கியாங்கு. 7

பொருளற்றூர் பூப்ப ரொருகா லருளற்றூர்
அற்றூர்மற் றூத லரிது. 8

தெருளா தான் மெய்ப்பொருள் கண்டற்றுற் றேரின்
அருளாதான் செய்யு மறம். 9

வலியார்முற் றன்னை நினைக்கதான் றன்னின்
மெலியார்மேற் செல்லு மிடத்து. 10

26-ம் அதி.—புலான் மறுத்தல்

அஃதாவது, ஊனுண்ணுதலை ஒழித்தலாம். கொலைப்பாவத்தைப் பின்னும் உளதாக்கலால் அதற்குக் காரணமாதலையும், முன்னும் அதனால் வருதலால் அதன் காரியமாதலையும் ஒருசேர உடைத்தாகிய ஊனுண்ணுதல் அருளுடையார்க்கு இயைவது அன்றாகலின் அதனைவிலக்குதற்கு இது, அருளுடைமையின்பின் வைக்கப்பட்டது.

தன்னூன் பெருக்கற்குத் தான்பிறி தூனுண்பான்
எங்ஙன மாளு மருள். 1

பொருளாட்சி போற்றாதார்க் கில்லை யருளாட்சி
ஆங்கில்லை யூன்றின் பவர்க்கு. 2

படைகொண்டார் நெஞ்சம்போ னன்றூக்கா தொன்றன்
உடல்சுவை யுண்டார் மனம். 3

அருளல்ல தியாதெனிற் கொல்லாமை கோறல்
பொருளல்ல தவ்வூன் றினல். 4

உண்ணாமை யுள்ள துயிர்நிலை யூனுண்ண
அண்ணாத்தல் செய்யா தளறு. 5

தினற்பொருட்டாற் கொல்லா துலகெனின் யாரும்
விலைப்பொருட்டா லூன்றருவா ரில். 6

உண்ணாமை வேண்டும் புலாஅல் பிறிதொன்றன்
புண்ண துணர்வார்ப் பெறின். 7

செயிரிற் றலைப்பிரிந்த காட்சியா ருண்ணார்
உயிரிற் றலைப்பிரிந்த வூன். 8

அவிசொரிந் தாயிரம் வேட்டலி னொன்றன்
உயிர்செகுத் துண்ணாமை நன்று. 9

கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி
எல்லா வுயிருந் தொழும். 10

27-ம் அதி.—தவம்

அஃதாவது, மனம் பொறிவழி போகாது நிற்றற் பொருட்டு விரதங்களான் உண்டி சுருக்கலும், கோடைக்கண் வெயில்நிலைநிற்றலும், மாரியினும் பனியிலும் நீர்நிலை நிற்றலும் முதலிய செயல்களை மேற்கொண்டு அவற்றால் தம் உயிர்க்கு வருந் துன்பங்களைப் பொறுத்துப் பிறஉயிர்களை ஓம்புதல். புலால் மறுத்து உயிர்கள் மேல் அருள் முதிர்ந்துழிச் செய்யப்படுவதாகலின், இது, புலால் மறுத்தலின்பின் வைக்கப்பட்டது.

உற்றநோய் நோன்ற லுயிர்க்குறுகண் செய்யாமை
அற்றே தவத்திற் குரு. 1

தவமுந் தவமுடையார்க் காகு மவமதனை
அஃதிலார் மேற்கோள் வது. 2

துறந்தார்குத் துப்புறவு வேண்டி மறந்தார்கொல்
மற்றை யவர்க டவம். 3

ஒன்னார்த் தெறலு முவந்தாரை யாக்கலும்
எண்ணிற் றவத்தான் வரும். 4

வேண்டிவி வேண்டியாங் கெய்தலாற் செய்தவம்
ஈண்டு முயலப் படும். 5

தவஞ்செய்வார் தங்கருமஞ் செய்வார் மற்றல்லார்
அவஞ்செய்வா ராசையுட் பட்டு. 6

சுடச்சுடரும் பொன்போ லொளிவிடுந் துன்பஞ்
சுடச்சுட நோக்கிற் பவர்க்கு. 7

தன்னுயிர் தானறப் பெற்றானை யேனைய
மன்னுயி ரெல்லாந் தொழும், 8

கூற்றங் குதித்தலுங் கைகூடு நோற்றலின்
ஆற்ற றலைப்பட் டவர்க்கு. 9

இலர்பல ராகிய காரண நோற்பார்
சிலர்பலர் நோலா தவர். 10

28-ம் அதி.—கூடாவொழுக்கம்

அஃதாவது, தாம் விட்ட காமவின்பத்தை உறுதியில்லாமையி னுலே பின்னும் விரும்பும் வழிதோன்ற அவ்வழியே கொண்டு நின்று தவத்தோடு பொருந்தாதாகிய தீயவொழுக்கம். அது விலக்குதற்கு இது, தவத்தின்பின் வைக்கப்பட்டது.

வஞ்ச மனத்தான் படிற்றொழுக்கம் பூதங்கள்
ஐந்து மகத்தே நகும். 1

வானுயர் தோற்ற மெவன்செய்யுந் தன்னெஞ்சந்
தானறி குற்றப் படின். 2

வலிய ிலிமையான் வல்லுருவம் பெற்றம்
புலியின்றோல் போர்த்துமேய்ந் தற்று. 3

தவமறைந் தல்லவை செய்தல் புதன்மறைந்து
வேட்டுவன் புட்சிமிழ்த் தற்று. 4

பற்றற்றே மென்பார் படிற்றொழுக்க மெற்றெற்றன்
றேதம் பலவுந் தரும். 5

நெஞ்சிற் றுறவார் துறந்தார்போல் வஞ்சித்து
வாழ்வாரின் வன்கணா ரில். 6

புறங்குன்றி கண்டனைய ரேனு மகங்குன்றி
மூக்கிற் கரியா ருடைத்து. 7

மனத்தது மாசாக மாண்டார்நீ ராடி
மறைந்தொழுகு மாந்தர் பலர். 8

கணைகொடி தியாழ்கோடு செவ்விதாங் கன்ன
வினைபடு பாலாற் கொளல். 9

மழித்தலு நீட்டலும் வேண்டா வுலகம்
பழித்த தொழித்து விடின். 10

29-ம் அதி.—கள்ளாமை

அஃதாவது, பிறருடைமையாயுள்ளவைகளில்யாதொரு பொருளையும் அவரை வஞ்சித்துக்கொள்ள நினையாமையாம். நினைத்தலும் செய்தற்குச் சமானமாதலால் கள்ளாமை என்றார். இது, பொருளைப்பற்றி யுண்டாங் குற்றத்தை விலக்குவதாகலின் காமம் பற்றி யுண்டாங் கூடாவொழுக்கத்தின்பின் வைக்கப்பட்டது.

எள்ளாமை வேண்டுவா னென்பா னெனைத்தொன்றுங்
கள்ளாமை காக்கதன் னெஞ்சு. 1

உள்ளத்தா லுள்ளலுந் தீதே பிறன்பொருளைக்
கள்ளத்தாற் கள்வே மெனல். 2

களவினா லாகிய வாக்க மளவிறந்
தாவது போலக் கெடும். 3

களவின்கட் கன்றிய காதல் விளைவின்கண்
வீயா விழுமந் தரும். 4

அருள்கருதி யன்புடைய ராதல் பொருள்கருதிப்
பொச்சாப்புப் பார்ப்பார்க ணில். 5

அளவின்க ணின்றொழுக லாற்றார் களவின்கட்
கன்றிய காத லவர். 6

களவென்னுங் காரறி வாண்மை யளவென்னும்
ஆற்றல் புரிந்தார்க ணில். 7

அளவறிந்தார் நெஞ்சத் தறம்போல நிற்குங்
களவறிந்தார் நெஞ்சிற் கரவு. 8

அளவல்ல செய்தாங்கே வீவர் களவல்ல
மற்றைய தேற்றா தவர். 9

கள்வார்க்குத் தள்ளு முயிர்நிலை கள்ளார்க்குத்
தள்ளாது புத்தே ளுலகு. 10

30-ம் அதி.—வாய்மை

அஃதாவது, மெய்யினது தன்மை பெரும்பான்மையுங் காமமும் பொருளும்பற்றி நிகழ்வதாய பொய்ம்மையை விலக்கல். ஆகலின் இது, கூடாவொழுக்கங் கள்ளாமைகளின்பின் வைக்கப் பட்டது.

வாய்மை யெனப்படுவ தியாதெனின் யாதொன்றுந்
தீமை யிலாத சொலல். 1

பொய்ம்மையும் வாய்மை யிடத்த புரைதீர்ந்த
நன்மை பயக்கு மெனின் 2

தன்னெஞ் சறிவது பொய்யற்க பொய்த்தபின்
தன்னெஞ்சே தன்னைச் சுடும். 3

உள்ளத்தாற் பொய்யா தொழுகி னுலகத்தா
ருள்ளத்து ளெல்லா முளன். 4

மனத்தொடு வாய்மை மொழியிற் றவத்தொடு
தானஞ்செய் வாரிற் றலை. 5

பொய்யாமை யன்ன புகழில்லை யெய்யாமை
யெல்லா வறமுந் தரும். 6

பொய்யாமை பொய்யாமை யாற்றி னறம்பிற
செய்யாமை செய்யாமை நன்று. 7

புறந்தூய்மை நீரா னமையு மகந்தூய்மை
வாய்மையாற் காணப் படும். 8

எல்லா விளக்கும் விளக்கல்ல சான்றோர்க்குப்
பொய்யா விளக்கே விளக்கு. 9

யாமெய்யாக் கண்டவற்று ளில்லையெனைத் தொன்றும்
வாய்மையி னல்ல பிற. 10

31-ம் அதி.—வெகுளாமை

அஃதாவது, கோபஞ்செய்தற்குக் காரணமாகிய குற்றம்ஒருவனிடத்தே உண்டாகிய விடத்தும் கோபம் செய்யாமையாம். இது, பொய்மைபற்றி உண்டாம் கோபத்தை விலக்கலால் வாய்மையின் பின் வைக்கப்பட்டது.

செல்லிடத்துக் காப்பான் சினங்காப்பா னல்லிடத்துக்
காக்கினென் காவாக்கா லென். 1

செல்லா விடத்துச் சினந்தீது செல்லிடத்தும்
இல்லதனிற் றீய பிற. 2

மறத்தல் வெகுளியை யார்மாட்டுந் தீய
பிறத்த லதனான் வரும். 3

நகையு முவகையுங் கொல்லுஞ் சினத்திற்
பகையு முளவோ பிற. 4

தன்னைத்தான் காக்கிற் சினங்காக்க காவாக்காற்
றன்னையே கொல்லுஞ் சினம். 5

சினமென்னுஞ் சேர்ந்தாரைக் கொல்லி யினமென்னும்
ஏமப் புணையைச் சுடும். 6

சினத்தைப் பொருளென்று கொண்டவன் கேடு
நிலத்தறைந்தான் கைபிழையா தற்று. 7

இணரெரி தோய்வன்ன வின்னா செயினும்
புணரின் வெகுளாமை நன்று. 8

உள்ளிய வெல்லா முடனெய்து முள்ளத்தால்
உள்ளான் வெகுளி யெனின். 9

இறந்தா ரிறந்தாரனையர் சினத்தைத்
துறந்தார் துறந்தார் துணை. 10

32-ம் அதி.—இன்னா செய்யாமை

அஃதாவது, தனக்கு ஒருபயன் நோக்கியதால், வைரம்பற்றியதால், சோர்வானதால் ஒருயிர்க்கு இன்னாதவற்றைச்செய்யாமை. இன்னாசெய்தல் வெகுளி யொழியவும் நிகழும் என்பது அறிவித்தற்கு, இது, வெகுளாமையின்பின் வைக்கப்பட்டது.

சிறப்பீனுஞ் செல்வம் பெறினும் பிறர்க்கின்னா
செய்யாமை மாசற்றார் கோள். 1

கறுத்தின்னா செய்தவக் கண்ணு மறுத்தின்னா
செய்யாமை மாசற்றார் கோள். 2

செய்யாமற் செற்றார்க்கு மின்னாத செய்தபின்
உய்யா விழுமந் தரும். 3

இன்னா செய்தாரை யொறுத்த லவர்நாண
நன்னயஞ் செய்து விடல். 4

அறிவினா லாகுவ துண்டோ பிறிதினோய்
தந்நோய்போற் போற்றாக் கடை. 5

இன்னா வெனத்தா னுணர்ந்தவை துன்னாமை
வேண்டும் பிறன்கட் செயல். 6

எனைத்தானு மெஞ்ஞான்றும் யார்க்கு மனத்தானா
மாணாசெய் யாமை தலை. 7

தன்னுயிர்க் கின்னாமை தானறிவா னென்கொலோ
மன்னுயிர்க் கின்னா செயல். 8

பிறர்க்கின்னா முற்பகற் செய்யிற் றமக்கின்னா
பிற்பகற் றாமே வரும். 9

நோயெல்லா நோய்செய்தார் மேலவா நோய்செய்யார்
நோயின்மை வேண்டு பவர். 10

33-ம் அதி.—கொல்லாமை

அஃதாவது, ஐயறிவுடையன முதல் ஓரறிவுடையன ஈருய உயிர்களைச் சோர்ந்தும் கொல்லுதலைச் செய்யாமை. இது, மேற் கூறிய அறங்களெல்லாவற்றினுஞ் சிறப்பு உடைத்தாய், கூருத அறங்களையும் அகப்படுத்து நிற்றலின் இன்னு செய்யாமையின்பின் வைக்கப்பட்டது.

அறவினை யாதெனிற் கொல்லாமை கோறல்
பிறவினை யெல்லாந் தரும். 1

பகுத்துண்டு பல்லுயி ரோம்புத னூலோர்
தொகுத்தவற்று ளெல்லாந் தலை. 2

ஒன்ருக நல்லது கொல்லாமை மற்றதன்
பின்சாரப் பொய்யாமை நன்று. 3

நல்லா றெனப்படுவ தியாதெனின் யாதொன்றுங்
கொல்லாமை சூழு நெறி. 4

நிலையஞ்சி நீத்தாரு ளெல்லாங் கொலையஞ்சிக்
கொல்லாமை சூழ்வான் றலை. 5

கொல்லாமை மேற்கொண் டொழுகுவான் வாழ்நாண்மேற்
செல்லா துயிருண்ணுங் கூற்று. 6

தன்னுயிர் நீப்பினுஞ் செய்யற்க தான்பிறி
தின்னுயிர் நீக்கும் வினை. 7

நன்ருகு மாக்கம் பெரிதெனினுஞ் சான்றோர்க்குக்
கொன்ருகு மாக்கங் கடை. 8

கொலைவினைய ராகிய மாக்கள் புலைவினையர்
புன்மை தெரிவா ரகத்து. 9

உயிருடம்பி னீக்கியா ரென்ப செயிருடம்பிற்
செல்லாத்தீ வாழ்க்கை யவர். 10

34-ம் அதி.—நிலையாமை

இனி, அவ்விரதங்களினுலே கரணங்கள் பரிசுத்தமானவிடத்து உண்டாவது, மோட்சத்தைத் தருவது ஆகிய அறிவு. அது நிலையாமை முதல் அவாவறுத்தல் இறுதியாக நான்கதிகாரத்துள் அடக்கிச் சொல்லப்படுகிறது.

நிலையாமையாவது தோற்றமுடையவை யெல்லாம் நிலைபெருத தன்மையாம். இதனை அறிந்தவிடத்தேயல்லாமல் பொருள்களிலே பற்றுவிடாதாகலின் அந்நான்கிற்கு முன்னும், கொல்லாமையின் பின்னும் இது, வைக்கப்பட்டது.

நில்லா தவற்றை நிலையின வென்றுணரும்
புல்லறி வாண்மை கடை. 1

கூத்தாட் டவைக்குழாத் தற்றே பெருஞ்செல்வம்
போக்கு மதுவிளிந் தற்று. 2

அற்கா வியல்பிற்றுச் செல்வ மதுபெற்ருல்
அற்குப வாங்கே செயல். 3

நாளென வொன்றுபோற் காட்டி யுயிரீரும்
வாள தணர்வார்ப் பெறின். 4

நாச்செற்று விக்குண்மேல் வாராமு னல்வினை
மேற்சென்று செய்யப் படும். 5

நெருந லுளனொருவ னின்றில்லை யென்னும்
பெருமை யுடைத்திவ் வுலகு. 6

ஒருபொழுதும் வாழ்வ தறியார் கருதுப
கோடியு மல்ல பல. 7

குடம்பை தனித்தொழியப் புட்பறந் தற்றே
உடம்போ டுயிரிடை நட்பு. 8

உறங்குவது போலுஞ் சாக்காடு றங்கி
விழிப்பது போலும் பிறப்பு. 9

புக்கி லமைந்தின்று கொல்லோ வுடம்பினுள்
துச்சி லிருந்த வுயிர்க்கு. 10

35-ம் அதி.—துறவு

அஃதாவது, புறமாகிய செல்வத்திலும், அகமாகிய உடம்பிலும், உண்டாகியவற்றை அவைகளது நிலையாமையைப்பார்த்து விடுதலாம். ஆகையால் இது, நிலையாமையின்பின் வைக்கப்பட்டது

யாதனின் யாதனி னீங்கியா னோதல்
அதனி னதனி னிலன். 1

வேண்டி னுண்டாகத் துறக்க துறந்தபின்
ஈண்டியற் பால பல. 2

அடல்வேண்டு மைந்தன் புலத்தை விடல்வேண்டும்
வேண்டிய வெல்லா மொருங்கு. 3

இயல்பாகு நோன்பிற்கொன் றின்மை யுடைமை
மயலாகு மற்றும் பெயர்த்து. 4

மற்றுந் தொடர்ப்பா டெவன்கொல் பிறப்பறுக்கல்
உற்றார்க் குடம்பு மிகை. 5

யானென தென்னுஞ் செருக்கறுப்பான் வானோர்க்
குயர்ந்த வுலகம் புகும். 6

பற்றி விடாஅ விடும்பைகள் பற்றினைப்
பற்றி விடாஅ தவர்க்கு. 7

தலைப்பட்டார் தீரத் துறந்தார் மயங்கி
வலைப்பட்டார் மற்றை யவர். 8

பற்றற்ற கண்ணே பிறப்பறுக்கு மற்று
நிலையாமை காணப் படும். 9

பற்றுக பற்றற்றான் பற்றினை யப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு. 10

36-ம் அதி.—மெய் யுணர்தல்

அஃதாவது, பிறப்பு வீடுகளையும், அவற்றின்காரணங்களையும் விபரீத ஐயங்களானன்றி உண்மையான்உணர்தல். இதுவும்பற்றற்ருன் பற்றினைப் பற்றியவழிஉளதாவதாகலின், அக்காரணவொற்றுமைபற்றி, துறவின்பின் வைக்கப்பட்டது.

பொருளல் லவற்றைப் பொருளென் றுணரும்
மருளா மாணுப் பிறப்பு. 1

இருணீங்கி யின்பம் பயக்கு மருணீங்கி
மாசறு காட்சி யவர்க்கு. 2

ஐயத்தி னீங்கித் தெளிந்தார்க்கு வையத்தின்
வான நணிய துடைத்து. 3

ஐயுணர் வெய்திக் கண்ணும் பயமின்றே
மெய்யுணர் வில்லா தவர்க்கு. 4

எப்பொரு ளெத்தன்மைத் தாயினு மப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு. 5

கற்றீண்டு மெய்ப்பொருள் கண்டார் தலைப்படுவர்
மற்றீண்டு வாரா நெறி. 6

ஓர்த்துள்ள முள்ள துணறி னொருதலையாய்ப்
பேர்த்துள்ள வேண்டா பிறப்பு. 7

பிறப்பென்னும் பேதைமை நீங்கச் சிறப்பென்னும்
செம்பொருள் காண்ப தறிவு. 8

சார்புணர்ந்து சார்பு கெடவொழுகின் மற்றழித்துச்
சார்தரா சார்தரு நோய். 9

காமம் வெகுளி மயக்க மிவைமூன்றன்
நாமங் கெடக்கெடு நோய். 10

37-ம் அதி.—அவாவறுத்தல்

அஃதாவது, முன்னும் பின்னும் வினைத்தொடர்பு அறுத்தார்க்கு நடுநின்ற உடம்பும், அதுகொண்ட வினைப்பயன்களும், நின்றமையால் அதுபற்றி ஒரேவிடத்துத் துறக்கப்பட்ட புலன்களின்மேலே பழைய பழக்க வயத்தினாலே நினைவுசெல்லுமென்றே அந்நினைவும் பிறவிக்கு வித்தாமாகலால் அதனை இடைவிடாத மெய்ப்பொருளுணர்வால் அறுத்தலாம். ஆகையால் இது, மெய்யுணர்தலின்பின் வைக்கப்பட்டது.

அவாவென்ப வெல்லா வுயிர்க்குமெஞ் ஞான்றுந்
தவாஅப் பிறப்பீனும் வித்து. 1

வேண்டுங்கால் வேண்டும் பிறவாமை மற்றது
வேண்டாமை வேண்ட வரும். 2

வேண்டாமை யன்ன விழுச்செல்வ மீண்டில்லை
ஆண்டு மஃதொப்ப தில். 3

தூஉய்மை யென்ப தவாவின்மை மற்றது
வாஅய்மை வேண்ட வரும். 4

அற்றவ ரென்பா ரவாவற்றார் மற்றையார்
அற்றாக வற்ற திலர். 5

அஞ்சுவ தோரு மறனே யொருவனை
வஞ்சிப்ப தோரு மவா. 6

அவாவினை யாற்ற வறுப்பிற் றவாவினை
தான்வேண்டு மாற்றான் வரும். 7

அவாவில்லார்க் கில்லாகுந் துன்பமஃ துண்டேல்
அதவது மேன்மேல் வரும். 8

இன்ப மிடையறா தீண்டு மவாவென்னுந்
துன்பத்துட் டுன்பங் கெடின். 9

ஆரா வியற்கை யவாநீப்பி னந்நிலையே
பேரா வியற்கை தரும். 10

4

38-ம் அதி.—ஊழ்

அஃதாவது, நல்வினைப் பயனாகிய இன்பமும், தீவினைப்பயனாகிய துன்பமும், அவ்வினைகளைச் செய்தவனையே சென்று அடைதற்கு ஏதுவாகிய நியாயம். இது, பொருளின்பங்களிரண்டுக்கும் பொதுவாய் ஒன்றனுள் வைக்கப்படாமையாலும், முன்சொல்லப் பட்ட அறத்தோடு சம்பந்த முடைமையாலும் அவாவறுத்தலின் பின் வைக்கப்பட்டது.

ஆகூழாற் றோன்று மசைவின்மை கைப்பொருள்
போகூழாற் றோன்று மடி. 1

பேதைப் படுக்கு மிழவூ ழறிவகற்றும்
ஆகலூ ழுற்றக் கடை. 2

நுண்ணிய நூல்பல கற்பினு மற்றுந்தன்
உண்மை யறிவே மிகும். 3

இருவே றுலகத் தியற்கை திருவேறு
தெள்ளிய ராதலும் வேறு. 4

நல்லவை யெல்லாஅந் தீயவாந் தீயவும்
நல்லவாஞ் செல்வஞ் செயற்கு. 5

பரியினு மாகாவாம் பாலல்ல வுய்த்துச்
சொரியினும் போகா தம. 6

வகுத்தான் வகுத்த வகையல்லாற் கோடி
தொகுத்தார்க்குந் துய்த்த லரிது. 7

துறப்பார்மற் றுப்புர வில்லா ருறற்பால
ஊட்டா கழியு மெனின். 8

நன்றாங்கா னல்லவாக் காண்பவ ரன்றாங்கால்
அல்லற் படுவ தெவன். 9

ஊழிற் பெருவலி யாவுள மற்றொன்று
சூழினுந் தான்முந் துறும். 10

அறத்துப்பால் முற்றிற்று.

பொருட்பால்

அரசியல்

39-ம் அதி.—இறைமாட்சி

இனி, இல்லறத்தின் வழிப்படுவனவாய பொருளின்பங்களுள் இருமையும் பயப்பதாய பொருள் கூறுவான் எடுத்துக்கொண்டார். அது தன் துணைக்காரணமாய அரசனீதி கூறவே அடங்கும். மலர்தலையுலகிற்கு உயிரெனச் சிறந்த அரசனது இயல்பு இருபத்தைந்து அதிகாரத்தாற் கூறுவான் தொடங்கினர். ஆதலின், அரசியல் முதற்கண்ணும், ஊழின் பின்னும் இது, வைக்கப்பட்டது.

படைகுடி கூழமைச்சு நட்பரணாறும்
உடையா னரசரு ளேறு. 1

அஞ்சாமை யீகை யறிவூக்க மிந்நான்கும்
எஞ்சாமை வேந்தற் கியல்பு. 2

தூங்காமை கல்வி துணிவுடைமை யிம்மூன்றும்
நீங்கா நிலனாள் பவற்கு. 3

அறனிழுக்கா தல்லவை நீக்கி மறனிழுக்கா
மான முடைய தரசு. 4

இயற்றலு மீட்டலுங் காத்தலுங் காத்த
வகுத்தலும் வல்ல தரசு. 5

காட்சிக் கெளியன் கடுஞ்சொல்ல னல்லனேல்
மீக்கூறு மன்ன னிலம். 6

இன்சொலா லீத்தளிக்க வல்லாற்குத் தன்சொலால்
தான்கண் டனைத்திவ் வுலகு. 7

முறைசெய்து காப்பாற்று மன்னவன் மக்கட்
கிறையென்று வைக்கப் படும். 8

செவிகைப்பச் சொற்பொறுக்கும் பண்புடை வேந்தன்
கவிகைக்கீழ்த் தங்கு முலகு. 9

கொடையளி செங்கோல் குடியோம்ப னான்கும்
உடையானாம் வேந்தர்க் கொளி. 10

40-ம் அதி.—கல்வி

அஃதாவது, அவ்வரசன் தான் கற்றற்குரிய நூல்களைக் கற்றல். அரசன் அறிவுடையவனாயிருந்தால் தன்னுயிர்க்கேயன்றி மன்னுயிர்க்கும் பயன்படுதல் குறித்து இது அரசியலுள் வைக்கப்பட்டதாயினும், யாவர்க்கும் உறுதியைத் தருவதாகிய சிறப்புடைமையினாலே பொதுப்படச் சொல்லுகின்றார். முன்னதிகாரத்திலே தூங்காமையென்னும் பாட்டிலே தோற்றுவாய் செயப்பட்ட மாட்சியை விரித்துச் சொல்லுதலால் இது, இறைமாட்சியின்பின் வைக்கப்பட்டது.

கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க வதற்குத் தக. 1

எண்ணென்ப வேனை யெழுத்தென்ப விவ்விரண்டுங்
கண்ணென்ப வாழு முயிர்க்கு. 2

கண்ணுடைய ரென்பவர் கற்றோர் முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லா தவர். 3

உவப்பத் தலைக்கூடி யுள்ளப் பிரிதல்
அனைத்தே புலவர் தொழில். 4

உடையார்மு னில்லார்போ லேக்கற்றுங் கற்றார்
கடையரே கல்லா தவர். 5

தொட்டனைத் தூறு மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத் தூறு மறிவு. 6

யாதானு நாடாமா லூராமா லென்னொருவன்
சாந்துணையுங் கல்லாத வாறு. 7

ஒருமைக்கட் டான்கற்ற கல்வி யொருவற்
கெழுமையு மேமாப் புடைத்து. 8

தாமின் புறுவ துலகின் புறக்கண்டு
காமுறுவர் கற்றறிந் தார். 9

கேடில் விழுச்செல்வங் கல்வி யொருவற்கு
மாடல்ல மற்றை யவை. 10

41-ம் அதி.—கல்லாமை

அஃதாவது, கற்றலைச் செய்யாமையி னிழிவாம். கல்வியது சிறப்பு முன்னே சொல்லிய வளவால் முடிவு பெறுமை நோக்கி எதிர்மறையினாலேயும் சொல்லுதலால், இது, கல்வியின்பின் வைக்கப்பட்டது.

அரங்கின்றி வட்டாடி யற்றே நிரம்பிய
நூலின்றிக் கோட்டி கொளல். 1

கல்லாதான் சொற்கா முறுதன் முலையிரண்டும்
இல்லாதாள் பெண்காமுற் றற்று. 2

கல்லா தவரு நனிநல்லர் கற்றார்முற்
சொல்லா திருக்கப் பெறின். 3

கல்லாதா னொட்பங் கழியநன் றாயினுங்
கொள்ளா ரறிவுடை யார். 4

கல்லா வொருவன் றகைமை தலைப்பெய்து
சொல்லாடச் சோர்வு படும். 5

உளரென்னு மாத்திரைய ரல்லாற் பயவாக்
களரனையர் கல்லா தவர். 6

நுண்மா ணுழைபுல மில்லா னெழினலம்
மண்மாண் புனைபாவை யற்று. 7

நல்லார்கட் பட்ட வறுமையி னின்னாதே
கல்லார்கட் பட்ட திரு. 8

மேற்பிறந்தா ராயினுங் கல்லாதார் கீழ்ப்பிறந்துங்
கற்றா ரனைத்திலர் பாடு. 9

விலங்கொடு மக்க ளனைய ரிலங்குநூல்
கற்றாரோ டேனை யவர். 10

42-ம் அதி.—கேள்வி

அஃதாவது, கேட்கத்தகு நூலின் பொருள்களைக்கற்றறிந்தவர் சொல்லக் கேட்குதல். கற்றவிடத்தை அதனாலாகிய அறிவை உறுதிப்படுத்தலாலும் கல்லாதவிடத்தும் அதனை உண்டாக்கலாலும் இது, கல்வி கல்லாமைகளின்பின் வைக்கப்பட்டது.

செல்வத்துட் செல்வஞ் செவிச்செல்வ மச்செல்வஞ்
செல்வத்து ளெல்லாந் தலை. 1

செவிக்குண வில்லாத போழ்து சிறிது
வயிற்றுக்கு மீயப் படும். 2

செவியுணவிற் கேள்வி யுடையா ரவியுணவின்
ஆன்றாரோ டொப்பர் நிலத்து. 3

கற்றில னாயினுங் கேட்க வஃதொருவற்
கொற்கத்தி னூற்றாந் துணை. 4

இழுக்க லுடையுழி யூற்றுக்கோ லற்றே
ஒழுக்க முடையார்வய்ச் சொல். 5

எனைத்தானு நல்லவை கேட்க வனைத்தானும்
ஆன்ற பெருமை தரும். 6

பிழைத்துணர்ந்தும் பேதைமை சொல்லா ரிழைத்துணர்ந்
தீண்டிய கேள்வி யவர். 7

கேட்பினுங் கேளாத் தகையவே கேள்வியால்
தோட்கப் படாத செவி. 8

நுணங்கிய கேள்விய ரல்லார் வணங்கிய
வாயின ராத லரிது. 9

செவியிற் சுவையுணரா வாயுணர்வின் மாக்கள்
அவியினும் வாழினு மென். 10

41-ம் அதி.—அறிவுடைமை

அஃதாவது, கல்வி கேள்விகளினாலாகிய அறிவோடு உண்மை யறிவுடையதனால் இது, கேள்வியின்பின் வைக்கப்பட்டது.

அறிவற்றங் காக்குங் கருவி செறுவார்க்கும்
உள்ளழிக்க லாகா வரண். 1

சென்ற விடத்தாற் செலவிடா தீதொரீஇ
நன்றின்பா லுய்ப்ப தறிவு. 2

எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினு மப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு. 3

எண்பொருள வாகச் செலச்சொல்லித் தான்பிறர்வாய்
நுண்பொருள் காண்ப தறிவு. 4

உலகந் தழீஇய தொட்ப மலர்தலுங்
கூம்பலு மில்ல தறிவு. 5

எவ்வ துறைவ துலக முலகத்தோ
டவ்வ துறைவ தறிவு. 6

அறிவுடையா ராவ தறிவா ரறிவிலார்
அஃதறி கல்லா தவர். 7

அஞ்சுவ தஞ்சாமை பேதைமை யஞ்சுவ
தஞ்ச லறிவார் தொழில். 8

எதிரதாக் காக்கு மறிவினார்க் கில்லை
அதிர வருவதோர் நோய். 9

அறிவுடையா ரெல்லா முடையா ரறிவிலார்
என்னுடைய ரேனு மிலர். 10

44-ம் அதி.—குற்றங் கடிதல்

அஃதாவது, காமம், குரோதம், உலோபம், மானம், உவகை, மதம் எனப்பட்ட ஆறு குற்றங்களையும், அரசன் தன்னிடத்தே தோன்றாமற் கடிதல். இவைகளைக் குற்றமென்றறிதலும், கடிதலும், அறிவுடையார்க் கல்லது மற்றவர்க்குக் கூடாமையால் இது, அதன்பின் வைக்கப்பட்டது.

செருக்குஞ் சினமுஞ் சிறுமையு மில்லார்
பெருக்கம் பெருமித நீர்த்து. 1

இவறலு மாண்பிறந்த மானமு மாணா
உவகையு மேத மிறைக்கு. 2

தினைத்துணையாங் குற்றம் வரினும் பனைத்துணையாக்
கொள்வர் பழிநாணு வார். 3

குற்றமே காக்க பொருளாகக் குற்றமே
அற்றந் தரூஉம் பகை. 4

வருமுன்னர்க் காவா தான் வாழ்க்கை யெரிமுன்னர்
வைத்தூறு போலக் கெடும். 5

தன்குற்ற நீக்கிப் பிறர்குற்றங் காண்கிற்பின்
என்குற்ற மாகு மிறைக்கு. 6

செயற்பால செய்யா திவறியான் செல்வம்
உயற்பால தன்றிக் கெடும். 7

பற்றுள்ள மென்னு மிவறன்மை யெற்றுள்ளும்
எண்ணப் படுவதொன் றன்று. 8

வியவற்க வெஞ்ஞான்றுந் தன்னை நயவற்க
நன்றி பயவா வினை. 9

காதல காத லறியாமை யுய்க்கிற்பின்
ஏதில வேதிலார் நூல். 10

45-ம் அதி.—பெரியாரைத் துணைக்கோடல்

அஃதாவது, அவ்வறுவகைக் குற்றங்களையும் கடிந்த அரசன் தன்னைத் தீயவழியில் விலக்கி நல்ல வழியிலே செலுத்தும் பேரறிவுடையவரைத் தனக்குத் துணையாகக் கொள்ளுதல். ஆகையால், இது, குற்றங்கடிதலின்பின் வைக்கப்பட்டது.

அறனறிந்து மூத்த வறிவுடையார் கேண்மை
திறனறிந்து தேர்ந்து கொளல். 1

உற்றநோய் நீக்கி யுறாஅமை முற்காக்கும்
பெற்றியார்ப் பேணிக் கொளல். 2

அரியவற்று ளெல்லா மரிதே பெரியாரைப்
பேணித் தமராக் கொளல். 3

தம்மிற் பெரியார் தமரா வொழுகுதல்
வன்மையு ளெல்லாந் தலை. 4

சூழ்வார்கண் ணாக வொழுகலான் மன்னவன்
சூழ்வாரைச் சூழ்ந்து கொளல். 5

தக்கா ரினத்தனாய்த் தானொழுக வல்லானைச்
செற்றார் செயக்கிடந்த தில். 6

இடிக்குந் துணையாரை யாள்வாரை யாரே
கெடுக்கப் தகைமை யவர். 7

இடிப்பாரை யில்லாத வேமரா மன்னன்
கெடுப்பா ரிலானுங் கெடும். 8

முதலிலார்க் கூதிய மில்லை மதலையாஞ்
சார்பிலார்க் கில்லை நிலை. 9

பல்லார் பகைகொளலிற் பத்தடுத்த தீமைத்தே
நல்லார் தொடர்கை விடல். 10

46-ம் அதி.—சிற்றினஞ் சேராமை

அஃதாவது, சிறிய வினத்தைப் பொருந்தாமை; சிறிய வினமாவது, நல்லதிலே நன்மையும், தீயதிலே தீமையும், இல்லையென்போரும், விடரும், தூர்த்தரும் முதலாயின கூட்டம். அறிவை வேறுபடுத்தி இருமையுங்கெடுக்குமியல்பினதாகிய இதனைப்பொருந்தினல், பெரியாரைத் துணைக்கோடல் பயனில்லையென்பது அறிவித்தற்கு இது, அதன்பின் வைக்கப்பட்டது.

சிற்றின மஞ்சும் பெருமை சிறுமைதான்
சுற்றமாச் சூழ்ந்து விடும். 1
நிலத்தியல்பா னீர்திரிந் தற்றாகு மாந்தர்க்
கினத்தியல்ப தாகு மறிவு. 2
மனத்தானு மாந்தர்க் குணர்ச்சி யினத்தானும்
இன்னு னெனப்படுஞ் சொல். 3
மனத்து ளதுபோலக் காட்டி யொருவற்
கினத்துள தாகு மறிவு. 4
மனந்தூய்மை செய்வினை தூய்மை யிரண்டும்
இனந்தூய்மை தூவா வரும். 5
மனந்தூயார்க் கெச்சநன் றாகு மினந்தூயார்க்
கில்லைநன் றாகா வினை. 6
மனநல மன்னுயிர்க் காக்க மினநலம்
எல்லாப் புகழுந் தரும். 7
மனநல நன்குடைய ராயினுஞ் சான்றோர்க்
கினநல மேமாப் புடைத்து. 8
மனநலத்தி னாகு மறுமைமற் றஃதும்
இனநலத்தி னேமாப் புடைத்து. 9
நல்லினத்தி னூங்குந் துணையில்லை தீயினத்தின்
அல்லற் படுப்பதூஉ மில். 10

47-ம் அதி.—தெரிந்து செயல்வகை

அஃதாவது, அரசன் தான் செய்யுந் தொழில்களை ஆராய்ந்து செய்யுந்திறம். அச்செயல் பெரியாரைத் துணைக்கொள்ளுதல், பயனுடைத்தாயவிடத்து அவருடன் செய்யப்படுவதால் இது, சிற்றினஞ் சேராமையின்பின் வைக்கப்பட்டது.

அழிவதூஉ மாவதூஉ மாகி வழிபயக்கும்
ஊதியமுஞ் சூழ்ந்து செயல். 1

தெரிந்த வினத்தொடு தேர்ந்தெண்ணிச் செய்வார்க்
கரும்பொருள் யாதொன்று மில். 2

ஆக்கங் கருதி முதலிழக்குஞ் செய்வினை
ஊக்கா ரறிவுடை யார். 3

தெளிவி லதனைத் தொடங்கா ரிளிவென்னும்
ஏதப்பா டஞ்சு பவர். 4

வகையறச் சூழா தெழுதல் பகைவரைப்
பாத்திப் படுப்பதோ ராறு. 5

செய்தக்க வல்ல செயக்கெடுஞ் செய்தக்க
செய்யாமை யானுங் கெடும். 6

எண்ணித் துணிக கருமந் துணிந்தபின்
எண்ணுவ மென்ப திழுக்கு. 7

ஆற்றின் வருந்தா வருத்தம் பலர்நின்று
போற்றினும் பொத்துப் படும். 8

நன்றாற்ற லுள்ளுந் தவறுண் டவரவர்
பண்பறிந் தாற்றாக் கடை. 9

எள்ளாத வெண்ணிச் செயல்வேண்டுந் தம்மொடு
கொள்ளாத கொள்ளா துலகு. 10

48-ம் அதி.—வலியறிதல்

அஃதாவது, அவ்வுபாயக்களுள் தண்டஞ்செய்யக் குறித்த அரசனவன் நால்வகை வலிமைகளையும் அளந்து அறிதலாம். ஆகையால் இது, தெரிந்து செயல்வகையின்பின் வைக்கப் பட்டது.

வினைவலியுந் தன்வலியு மாற்றான் வலியுந்
துணைவலியுந் தூக்கிச் செயல். 1

ஒல்வ தறிவ தறிந்ததன் கட்டங்கிச்
செல்வார்க்குச் செல்லாத தில். 2

உடைத்தம் வலியறியா ரூக்கத்தி னூக்கி
இடைக்கண் முரிந்தார் பலர். 3

அமைந்தாங் கொழுகா னளவறியான் றன்னை
வியந்தான் விரைந்து கெடும். 4

பீலிபெய் சாகாடு மச்சிறு மப்பண்டஞ்
சால மிகுத்துப் பெயின். 5

நுனிக்கொம்ப ரேறினா ரஃதிறந் தூக்கின்
உயிர்க்கிறுதி யாகி விடும். 6

ஆற்றி னளவறிந் தீக வதுபொருள்
போற்றி வழங்கு நெறி. 7

ஆகா றளவிட்டி தாயினுங் கேடில்லை
போகா றகலாக் கடை. 8

அளவறிந்து வாழாதான் வாழ்க்கை யுளபோல
இல்லாகித் தோன்றாக் கெடும். 9

உளவரை தூக்காத வொப்புர வண்மை
வளவரை வல்லைக் கெடும். 10

49-ம் அதி.—காலமறிதல்

அஃதாவது, வலிமையினாலே மிகுதியுடையவனாய்ப் பகைவன் மேல் போர்க்குச்செல்லு மரசன் அச்செல்லுதலுக்கு ஏற்ற காலத்தினை அறிதலாம். ஆகலான், இது, வலியறிதலின்பின் வைக்கப்பட்டது.

பகல்வெல்லுங் கூகையைக் காக்கை யிகல்வெல்லும்
வேந்தர்க்கு வேண்டும் பொழுது. 1

பருவத்தோ டொட்ட வொழுக றிருவினைத்
தீராமை யார்க்குங் கயிறு. 2

அருவினை யென்ப வுளவோ கருவியாற்
கால மறிந்து செயின். 3

ஞாலங் கருதினுங் கைகூடுங் காலங்
கருதி யிடத்தாற் செயின். 4

காலங் கருதி யிருப்பர் கலங்காது
ஞாலங் கருது பவர். 5

ஊக்க முடையா னொடுக்கம் பொருதகர்
தாக்கற்குப் பேருந் தகைத்து. 6

பொள்ளென வாங்கே புறம்வேரார் காலம்பார்த்
துள்வேர்ப்ப ரொள்ளி யவர். 7

செறுநரைக் காணிற் சுமக்க விறுவரை
காணிற் கிழக்காந் தலை. 8

எய்தற் கரிய தியைந்தக்கா லந்நிலையே
செய்தற் கரிய செயல். 9

கொக்கொக்க கூம்பும் பருவத்து மற்றதன்
குத்தொக்க சீர்த்த விடத்து. 10

50-ம் அதி.—இடனறிதல்

அஃதாவது, வலியும் காலமும் அறிந்து பகைமேற் செல்லு வோன் தான் செல்லுதற்கு ஏற்றநிலத்தினை அறிதலாம். ஆகலான், இது, காலமறிதலின்பின் வைக்கப்பட்டது.

தொடங்கற்க வெவ்வினையு மெள்ளற்க முற்றும்
இடங்கண்ட பின்னல் லது. 1

முரண்சேர்ந்த மொய்ம்பி னவர்க்கு மரண்சேர்ந்தாம்
ஆக்கம் பலவுந் தரும். 2

ஆற்றாரு மாற்றி யடுப விடனறிந்து
போற்றார்கட் போற்றிச் செயின். 3

எண்ணியா ரெண்ண மிழப்ப ரிடனறிந்து
துன்னியார் துன்னிச் செயின். 4

நெடும்புன லுள் வெல்லு முதலை யடும்புனலின்
நீங்கி னதனைப் பிற. 5

கடலோடா கால்வ னெடுந்தேர் கடலோடும்
நாவாயு மோடா நிலத்து. 6

அஞ்சாமை யல்லாற் றுணைவேண்டா வெஞ்சாமை
எண்ணி யிடத்தார் செயின். 7

சிறுபடையான் செல்லிடஞ் சேரி னுறுபடையான்
ஊக்க மழிந்து விடும். 8

சிறைநல னுஞ் சீரு மிலரெனினு மாந்தர்
உறைநிலத்தோ டொட்ட லரிது. 9

காலாழ் களரி னரியடுங் கண்ணஞ்சா
வேலான் முகத்த களிறு. 10

51-ம் அதி.—தேரிந்து தேளிதல்

மந்திரி முதலானவர்களைப் பிறப்பு, குணம், அறிவு எனப் படுகின்றவைகளையும், செய்கையையும், காட்சி, கருத்து, ஆகமம் என்கிற பிரமாணங்களினாலே ஆராய்ந்து தெளிதல். வலி முதலாகிய மூன்றையும் அறிந்து பகைமேற் செல்லுவானுக்குச் சேனை கருத்தோடு தொழில் செய்தற்கும், எதிரிடாமைக்கும், இத்தெளிவு வேண்டுதலால் இது, இடனறிதலின்பின் வைக்கப்பட்டது.

அறம்பொரு ளின்ப முயிரச்ச நான்கின்
திறந்தெரிந்து தேறப் படும். 1
குடிப்பிறந்து குற்றத்தி னீங்கி வடுப்பரியும்
நாணுடையான் கட்டே தெளிவு. 2
அரியகற் றாசற்றார் கண்ணுந் தெரியுங்கால்
இன்மை யரிதே வெளிறு. 3
குணநாடிக் குற்றமு நாடி யவற்றுள்
மிகைநாடி மிக்க கொளல். 4
பெருமைக்கு மேனைச் சிறுமைக்குந் தத்தங்
கருமமே கட்டளைக் கல். 5
அற்றாரைத் தேறுத லோம்புக மற்றவர்
பற்றிலர் நாணார் பழி. 6
காதன்மை கந்தா வறிவறியார்த் தேறுதல்
பேதைமை யெல்லாந் தரும். 7
தேரான் பிறனைத் தெளிந்தான் வழிமுறை
தீரா விடும்பை தரும். 8
தேறற்க யாரையுந் தேராது தேர்ந்தபின்
தேறுக தேறும் பொருள். 9
தேரான் றெளிவுந் தெளிந்தான்க ணையுறவுந்
தீரா விடும்பை தரும். 10

52-ம் அதி.—தெரிந்து வினையாடல்

அஃதாவது, அத் தெளியப்பட்டவரை அவர் செய்யவல்ல தொழில்களை அறிந்து அவைகளிலே ஆளுந்திறம் வேண்டுவதாமாக லான் இது, தெரிந்து தெளிதலின்பின் வைக்கப்பட்டது.

நன்மையுந் தீமையு நாடி நலம்புரிந்த
தன்மையா னாளப் படும். 1

வாரி பெருக்கி வளம்படுத் துற்றவை
ஆராய்வான் செய்க வினை. 2

அன்பறிவு தேற்ற மவாவின்மை இந்நான்கும்
நன்குடையான் கட்டே தெளிவு. 3

எனைவகையாற் றேறியக் கண்ணும் வினைவகையான்
வேறாகு மாந்தர் பலர். 4

அறிந்தாற்றிச் செய்கிற்பாற் கல்லால் வினைதான்
சிறந்தானென் றேவற்பாற் றன்று. 5

செய்வானை நாடி வினைநாடிக் காலத்தோ
டெய்த வுணர்ந்து செயல். 6

இதனை யிதனா லிவன்முடிக்கு மென்றாய்ந்
ததனை யவன்கண் விடல். 7

வினைக்குரிமை நாடிய பின்றை யவனை
அதற்குரிய னாகச் செயல். 8

வினைக்கண் வினையுடையான் கேண்மைவே றாக
நினைப்பானை நீங்குந் திரு. 9

நாடோறு நாடுக மன்னன் வினைசெய்வான்
கோடாமை கோடா துலகு. 10

53-ம் அதி.—சுற்றந்தழால்

அஃதாவது, அரசன் தனது சுற்றத்தாரைத் தன்னைவிட்டு நீங்காதிருக்கும்படி தழுவுதல். தொழில் செய்வோரைச் சொல்லி மற்றைச் சுற்றத்தாரைச் சொல்லுதலால் இது, தெரிந்து வினையாடலின்பின் வைக்கப்பட்டது.

பற்றற்ற கண்ணும் பழமைபா ராட்டுதல்
சுற்றத்தார் கண்ணே யுள. 1

விருப்பறாச் சுற்ற மியையி னருப்பறா
ஞக்கம் பலவுந் தரும். 2

அளவளா வில்லாதான் வாழ்க்கை குளவளாக்
கோடின்றி நீர்நிறைந் தற்று. 3

சுற்றத்தாற் சுற்றம் படவொழுகல் செல்வந்தான்
பெற்றத்தாற் பெற்ற பயன். 4

கொடுத்தலு மின்சொலு மாற்றி னடுக்கிய
சுற்றத்தாற் சுற்றப் படும். 5

பெருங்கொடையான் பேணான் வெகுளி யவனின்
மருங்குடையார் மாநிலத் தில். 6

காக்கை கரவா கரைந்துண்ணு மாக்கமும்
அன்னநீ ரார்க்கே யுள. 7

பொதுநோக்கான் வேந்தன் வரிசையா நோக்கின்
அதுநோக்கி வாழ்வார் பலர். 8

தமராகித் தற்றுறந்தார் சுற்ற மமராமைக்
காரண மின்றி வரும். 9

உழைப்பிரிந்து காரணத்தின் வந்தானை வேந்தன்
இழைத்திருந் தெண்ணிக் கொளல். 10

54-ம் அதி.—பொச்சாவாமை

அஃதாவது, உருவும் திருவும் ஆற்றலும் முதலாயவற்றான் மகிழ்ந்து தற்காத்தலினும் பகையழித்தல் முதலிய காரியங்களினும் சோர்தலைச் செய்யாமை. மேற்சொல்லிய சுற்றத்தாராற் பயனுள்ளது இச்சோர்வு இல்வழியாகலின், இது சுற்றந்தழாலின் பின் வைக்கப்பட்டது.

இறந்த வெகுளியிற் றீதே சிறந்த
உவகை மகிழ்ச்சியிற் சோர்வு. 1

பொச்சாப்புக் கொல்லும் புகழை யறிவினை
நிச்ச நிரப்புக்கொன் றாங்கு. 2

பொச்சாப்பார்க் கில்லை புகழ்மை யதுவுலகத்
தெப்பானூ லோர்க்குந் துணிவு. 3

அச்ச முடையார்க் கரணில்லை யாங்கில்லை
பொச்சாப் புடையார்க்கு நன்கு. 4

முன்னுறக் காவா திழுக்கியான் றன்பிழை
பின்னூ றிரங்கி விடும். 5

இழுக்காமை யார்மாட்டு மென்றும் வழுக்காமை
வாயி னதுவொப்ப தில். 6

அரியவென் றாகாத வில்லைபொச் சாவாக்
கருவியாற் போற்றிச் செயின். 7

புகழ்ந்தவை போற்றிச் செயல்வேண்டுஞ் செய்யா
திகழ்ந்தார்க் கெழுமையு மில். 8

இகழ்ச்சியிற் கெட்டாரை யுள்ளுக தாந்தம்
மகிழ்ச்சியின் மைந்துறும் போழ்து. 9

உள்ளிய தெய்த லெளிதுமன் மற்றுந்தான்
உள்ளிய துள்ளப் பெறின். 10

55-ம் அதி.—செங்கோன்மை

அஃதாவது, அரசனாற் செய்யப்படும் முறையினது தன்மை; அம்முறை ஒருபாற் கோடாது செவ்வியகோல் போறலின், செங்கோலெனப்பட்டது. அது சோர்வில்லாத அரசனால் செயற்பாலதாகலின், இது, பொச்சாவாமையின்பின் வைக்கப்பட்டது.

ஓர்ந்துகண் ணோடா திறைபுரிந் தியார்மாட்டுந்
தேர்ந்து செய்வஃதே முறை. 1

வானோக்கி வாழு முலகெல்லா மன்னவன்
கோனோக்கி வாழுங் குடி. 2

அந்தணர் நூற்கு மறத்திற்கு மாதியாய்
நின்றது மன்னவன் கோல். 3

குடிதழீஇக் கோலோச்சு மாநில மன்னன்
அடிதழீஇ நிற்கு முலகு. 4

இயல்புளிக் கோலோச்சு மன்னவ னாட்ட
பெயலும் விளையுளுந் தொக்கு. 5

வேலன்று வென்றி தருவது மன்னவன்
கோலதூஉங் கோடா தெனின். 6

இறைகாக்கும் வையக மெல்லா மவனை
முறைகாக்கும் முட்டாச் செயின். 7

எண்பதத்தா னோரா முறைசெய்யா மன்னவன்
தண்பதத்தாற் றானே கெடும். 8

குடிபுறங் காத்தோம்பிக் குற்றங் கடிதல்
வடுவன்று வேந்தன் றொழில். 9

கொலையிற் கொடியாரை வேந்தொறுத்தல் பைங்கூழ்
களைகட் டதனொடு நேர். 10

56-ம் அதி.—கொடுங்கோன்மை

அஃதாவது, அம்முறையினது கோடுதற்றன்மை. ஈண்டும் உவமையின் பெயர், பொருள் மேலாயிற்று. செங்கோன்மைக்கு மாறாகலின், இஃது அதன்பின் வைக்கப்பட்டது.

கொலைமேற்கொண் டாரிற் கொடிதே யலைமேற்கொண்
டல்லவை செய்தொழுகும் வேந்து. 1

வேலொடு நின்றா னிடுவென் றதுபோலுங்
கோலொடு நின்றா னிரவு. 2

நாடொறு நாடி முறைசெய்யா மன்னவன்
நாடொறு நாடு கெடும். 3

கூழுங் குடியு மொருங்கிழக்குங் கோல்கோடிச்
சூழாது செய்யு மரசு. 4

அல்லற்பட் டாற்றா தழுதகண் ணீரன்றே
செல்வத்தைத் தேய்க்கும் படை. 5

மன்னர்க்கு மன்னுதல் செங்கோன்மை யஃதின்றேல்
மன்னாவா மன்னர்க் கொளி. 6

துளியின்மை ஞாலத்திற் கெற்றற்றே வேந்தன்
அளியின்மை வாழு முயிர்க்கு. 7

இன்மையி னின்னா துடைமை முறைசெய்யா
மன்னவன் கோற்கீழ்ப் படின். 8

முறைகோடி மன்னவன் செய்யி னுறைகோடி
ஒல்லாது வானம் பெயல். 9

ஆபயன் குன்று மறுதொழிலோர் நூன்மறப்பர்
காவலன் காவா னெனின். 10

57-ம் அதி.—வெருவந்த செய்யாமை

அஃதாவது, குடிகள் அஞ்சுவதும், மந்திரி முதலியோர் அஞ்சுவதும், தான் அஞ்சுவதும் ஆயதொழில்களைச் செய்யாமை. அவை செய்தல் கொடுங்கோன்மைப் பாற்படுதலின், இஃது, அதன்பின் வைக்கப்பட்டது.

தக்காங்கு நாடித் தலைச்செல்லா வண்ணத்தால்
ஒத்தாங் கொறுப்பது வேந்து. 1

கடிதோச்சி மெல்ல வெறிக நெடிதாக்கம்
நீங்காமை வேண்டு பவர். 2

வெருவந்த செய்தொழுகும் வெங்கோல னாயின்
ஒருவந்த மொல்லைக் கெடும். 3

இறைகடிய னென்றுரைக்கு மின்னாச்சொல் வேந்தன்
உறைகடுகி யொல்லைக் கெடும். 4

அருஞ்செவ்வி யின்னா முகத்தான் பெருஞ்செல்வம்
பேஎய்கண் டன்ன துடைத்து. 5

கடுஞ்சொல்லன் கண்ணில னாயி னெடுஞ்செல்வம்
நீடின்றி யாங்கே கெடும். 6

கடுமொழியுங் கையிகந்த தண்டமும் வேந்தன்
அடுமுரண் டேய்க்கு மரம். 7

இனத்தாற்றி யெண்ணாத வேந்தன் சினத்தாற்றிச்
சீறிற் சிறுகுந் திரு. 8

செருவந்த போழ்திற் சிறைசெய்யா வேந்தன்
வெருவந்து வெய்து கெடும். 9

கல்லார்ப் பிணிக்குங் கடுங்கோ லதுவல்ல
தில்லை நிலக்குப் பொறை. 10

58-ம் அதி.—கண்ணோட்டம்

அஃதாவது, தன்னோடு பயின்றாரைக் காண்டலால் அவர் கூறியன மறுக்கமாட்டாமை. இஃது, அவர்மேற் கண் சென்றவழி நிகழ்வதாகலின் அப்பெயர்த்தாயிற்று. மேல் வெருவந்த செய்யாமையுட் கூறியவதனையே சிறப்புப்பற்றி விரித்துக் கூறுகின்றமையின் இஃது, அதன்பின் வைக்கப்பட்டது.

கண்ணோட்ட மென்னுங் கழிபெருங் காரிகை
உண்மையா னுண்டிவ் வுலகு. 1

கண்ணோட்டத் துள்ள துலகிய லஃதிலார்
உண்மை நிலக்குப் பொறை. 2

பண்ணென்னாம் பாடற் கியைபின்றேற் கண்ணென்னாங்
கண்ணோட்ட மில்லாத கண். 3

உளபோன் முகத்தெவன் செய்யு மளவினாற்
கண்ணோட்ட மில்லாத கண். 4

கண்ணிற் கணிகலங் கண்ணோட்ட மஃதின்றேற்
புண்ணென் றுணரப் படும். 5

மண்ணோ டியைந்த மரத்தனையர் கண்ணோ
டியைந்துகண் ணோடா தவர். 6

கண்ணோட்ட மில்லவர் கண்ணிலர் கண்ணுடையார்
கண்ணோட்ட மின்மையு மில். 7

கருமஞ் சிதையாமற் கண்ணோட வல்லார்க்
குரிமை யுடைத்திவ் வுலகு. 8

ஒறுத்தாற்றும் பண்பினார் கண்ணுங்கண் ணோடிப்
பொறுத்தாற்றும் பண்பே தலை. 9

பெயக்கண்டு நஞ்சுண் டமைவர் நயத்தக்க
நாகரிகம் வேண்டு பவர். 10

59-ம் அதி.—ஒற்றாடல்

அஃதாவது, பகைவர் அயலோர் நட்பினர் என்னு மூன்று திறத்தாரிடத்தும் நிகழ்ந்தவை அறிதற்கு ஒற்றரை ஆளுதல். முன் சொல்லப்பட்ட இலக்கணமுடைய அரசனுக்குத் தன்னாடு காக்கும் போதும் பிறர் நாடு பிடிக்கும்போதும் வேண்டுமவைகளைச் சொல் லத் தொடங்கினாராதலால் அவ்விரண்டு காரியங்களுக்கும் அவசியம் வேண்டுவதாகிய இது, கண்ணோட்டத்தின்பின் வைக்கப்பட்டது.

ஒற்று முரைசான்ற நூலு மிவையிரண்டுந்
தெற்றென்க மன்னவன் கண். 1

எல்லார்க்கு மெல்லா நிகழ்பவை யெஞ்ஞான்றும்
வல்லறிதல் வேந்தன் றொழில். 2

ஒற்றினா னொற்றிப் பொருடெரியா மன்னவன்
கொற்றங் கொளக்கிடந்த தில். 3

வினைசெய்வார் தஞ்சுற்றம் வேண்டாதா ரென்றாங்
கனைவரையு மாராய்வ தாற்று. 4

கடாஅ வுருவொடு கண்ணஞ்சா தியாண்டும்
உகாஅமை வல்லதே யொற்று. 5

துறந்தார் படிவத்த ராகி யிறந்தாராய்ந்
தென்செயினுஞ் சோர்வில தொற்று. 6

மறைந்தவை கேட்கவற் றாகி யறிந்தவை
ஐயப்பா டில்லதே யொற்று. 7

ஒற்றொற்றித் தந்த பொருளையு மற்றுமோர்
ஒற்றினா லொற்றிக் கொளல். 8

ஒற்றொற் றுணராமை யாள்க வுடன்மூவர்
சொற்றொக்க தேறப் படும். 9

சிறப்பறிய வொற்றின்கட் செய்யற்க செய்யிற்
புறப்படுத்தா னாகு மறை. 10

60-ம் அதி.—ஊக்க முடைமை

அஃதாவது, மனமானது தொழில் செய்தலிலே எழுச்சியை உடைத்தாதலாம். ஒற்றரால் நடந்தவை அறிந்து அவைகளுக்கு ஏற்ற தொழில் செய்வோனுக்கு இது அவசியம் வேண்டுதலான் அதன்பின் வைக்கப்பட்டது.

உடைய ரெனப்படுவ தூக்கமஃ தில்லார்
உடைய துடையரோ மற்று. 1

உள்ள முடைமை யுடைமை பொருளுடைமை
நில்லாது நீங்கி விடும். 2

ஆக்க மிழந்தேமென் றல்லவா ரூக்கம்
ஒருவந்தங் கைத்துடை யார். 3

ஆக்க மதர்வினாய்ச் செல்லு மசைவிலா
ஊக்க முடையா னுழை. 4

வெள்ளத் தனைய மலர்நீட்ட மாந்தர்தம்
உள்ளத் தனைய துயர்வு. 5

உள்ளுவ தெல்லா முயர்வுள்ளன் மற்றது
தள்ளினுந் தள்ளாமை நீர்த்து. 6

சிதைவிடத் தொல்கா ருரவோர் புதையம்பிற்
பட்டுப்பா டூன்றுங் களிறு. 7

உள்ள மிலாதவ ரெய்தா ருலகத்து
வள்ளிய மென்னுஞ் செருக்கு. 8

பரியது கூர்ங்கோட்ட தாயினும் யானை
வெரூஉம் புலிதாக் குறின். 9

உரமொருவற் குள்ள வெறுக்கையஃ தில்லார்
மரமக்க ளாதலே வேறு. 10

61-ம் அதி.—மடியின்மை

அஃதாவது, நினைக்கப்பட்டவைகளைச் செய்யும்போது சோம்புதலில்லாமையாம். ஊக்கமுடையவர்க்கு ஒரேவிடத்தே குணவசத்தால் சோம்பல் வருதலைக் குறித்து இது ஊக்கமுடைமையின் பின் வைக்கப்பட்டது.

குடியென்னுங் குன்றா விளக்க மடியென்னும்
மாசூர மாய்ந்து கெடும். 1

மடியை மடியா வொழுகல் குடியைக்
குடியாக வேண்டு பவர். 2

மடிமடிக் கொண்டொழுகும் பேதை பிறந்த
குடிமடியுந் தன்னினு முந்து. 3

குடிமடிந்து குற்றம் பெருகு மடிமடிந்து
மாண்ட வுஞற்றி லவர்க்கு. 4

நெடுநீர் மறவி மடிதுயி னான்கும்
கெடுநீரார் காமக் கலன். 5

படியுடையார் பற்றமைந்தக் கண்ணு மடியுடையார்
மாண்பய னெய்த லரிது. 6

இடிபுரிந் தெள்ளுஞ்சொற் கேட்பர் மடிபுரிந்து
மாண்ட வுஞற்றி லவர். 7

மடிமை குடிமைக்கட் டங்கிற்றன் னொன்னார்க்
கடிமை புகுத்தி விடும். 8

குடியாண்மை யுள்வந்த குற்ற மொருவன்
மடியாண்மை மாற்றக் கெடும். 9

மடியிலா மன்னவ னெய்து மடியளந்தான்
தாஅய தெல்லா மொருங்கு. 10

62-ம் அதி.—ஆள்வினை யுடைமை

அஃதாவது, இடைவிடாத முயற்சியை யுடையதனால், அது ஆளும் வினையெனக் காரியத்தாற் சொல்லப்பட்டது. சோம்பலைக் கெடுத்தாலும் தொழிலை முயற்சியாலல்லாமல் ஆளக் கூடாமையினாலே இது மடியின்மையின்பின் வைக்கப்பட்டது.

அருமை யுடைத்தென் றசாவாமை வேண்டும்
பெருமை முயற்சி தரும். 1

வினைக்கண் வினைகெட லோம்பல் வினைக்குறை
தீர்ந்தாரிற் றீர்ந்தன் றுலகு. 2

தாளாண்மை யென்னும் தகைமைக்கட் டங்கிற்றே
வேளாண்மை யென்னுஞ் செருக்கு. 3

தாளாண்மை யில்லாதான் வேளாண்மை பேடிகை
வாளாண்மை போலக் கெடும். 4

இன்பம் விழையான் வினைவிழைவான் றன்கேளிர்
துன்பந் துடைத்தூன்றுந் தூண். 5

முயற்சி திருவினை யாக்கு முயற்றின்மை
இன்மை புகுத்தி விடும். 6

மடியுளாண் மாமுகடி யென்ப மடியிலான்
தாளுளா டாமரையி னாள். 7

பொறியின்மை யார்க்கும் பழியன் றறிவறிந்
தாள்வினை யின்மை பழி. 8

தெய்வத்தா னாகா தெனினு முயற்சிதன்
மெய்வருத்தக் கூலி தரும். 9

ஊழையு முப்பக்கங் காண்ப ருலைவின்றித்
தாழா துஞற்று பவர். 10

63-ம் அதி —இடுக்க ணழியாமை

அஃதாவது, தொழிலிலே முயல்பவன் ஊழினாலாவது, பொருளில்லாமையினாலாவது, மெய் வருத்தத்தாலாவது, தனக்குத் துன்பம் வந்தவிடத்து அதற்கு மனங்கலங்காமையா மாதலால் இது ஆள்வினை யுடைமையின் பின் வைக்கப்பட்டது.

இடுக்கண் வருங்கா னகுக வதனை
அடுத்தூர்வ தஃதொப்ப தில். 1
வெள்ளத் தனைய விடும்பை யறிவுடையான்
உள்ளத்தி னுள்ளக் கெடும். 2
இடும்பைக் கிடும்பை படுப்ப ரிடும்பைக்
கிடும்பை படாஅ தவர். 3
மடுத்தவா யெல்லாம் பகடன்ன னுற்ற
இடுக்க ணிடர்ப்பா டுடைத்து. 4
அடுக்கி வரினு மழிவிலா னுற்ற
இடுக்க ணிடுக்கட் படும். 5
அற்றேமென் றல்லற் படுபவோ பெற்றேமென்
றோம்புத றேற்றா தவர். 6
இலக்க முடம்பிடும்பைக் கென்று கலக்கத்தைக்
கையாறாக் கொள்ளாதா மேல். 7
இன்பம் விழையா னிடும்பை யியல்பென்பான்
துன்ப முறுத லிலன். 8
இன்பத்து ளின்பம் விழையாதான் றுன்பத்துள்
துன்ப முறுத லிலன். 9
இன்னாமை யின்ப மெனக்கொளி னாகுந்தன்
ஒன்னார் விழையுஞ் சிறப்பு. 10

அரசியல் முற்றிற்று.

அங்கவியல்

64-ம் அதி.—அமைச்சு

அரசியல் நடத்துதலிலே ஒன்றற்கொன்று துணையாகிய அங்கங்களது இயல்பை முப்பத்திரண்டு அதிகாரத்தாலே சொல்லத் தொடங்கி அவ்வங்கங்கள் ஆறனுள்ளும் ஆக்கினை சக்கரத்தைச் செலுத்துதலிலே அவ்வரசனுக்குச் சமானமாகிய அமைச்சனது இயல்பு பத்ததிகாரத்தினாலே சொல்லத் தொடங்கி முதலிலே அமைச்சு சொல்லுகிறார். ஆகலான் இது இடுக்கண் அழியாமையின்பின் வைக்கப்பட்டது.

கருவியுங் காலமுஞ் செய்கையுஞ் செய்யும்
அருவினையு மாண்ட தமைச்சு. 1

வன்கண் குடிகாத்தல் கற்றறித லாள்வினையோ
டைந்துடன் மாண்ட தமைச்சு. 2

பிரித்தலும் பேணிக் கொளலும் பிரிந்தார்ப்
பொருத்தலும் வல்ல தமைச்சு. 3

தெரிதலுந் தேர்ந்து செயலு மொருதலையாச்
சொல்லலும் வல்ல தமைச்சு. 4

அறனறிந் தான்றமைந்த சொல்லானெஞ் ஞான்றுந்
திறனறிந்தான் றேர்ச்சித் துணை. 5

மதிநுட்ப நூலோ டுடையார்க் கதிநுட்பம்
யாவுள முன்னிற் பவை. 6

செயற்கை யறிந்தக் கடைத்து முலகத்
தியற்கை யறிந்து செயல். 7

அறிகொன் றறியா னெனினு முறுதி
உழையிருந்தான் கூறல் கடன். 8

பழுதெண்ணு மந்திரியிற் பக்கத்துட் டெவ்வோர்
எழுபது கோடி யுறும். 9

முறைப்படச் சூழ்ந்து முடிவிலவே செய்வர்
திறப்பா டிலாஅ தவர். 10

65-ம் அதி.—சொல் வன்மை

அஃதாவது, தான் நினைத்ததொழில் முடியும்வழியால் வார்த்தை சொல்ல வல்லவனாகுதல். முன்னதிகாரத்திலே ஒருதலையாச் சொல்லுமென்றதையே, சிறப்புப்பற்றி விரித்துச் சொல்லுவதால் இது, அமைச்சின்பின் வைக்கப்பட்டது.

நாநல மென்னு நலனுடைமை யந்நலம்
யாநலத் துள்ளதூஉ மன்று. 1

ஆக்கமுங் கேடு மதனால் வருதலாற்
காத்தோம்பல் சொல்லின்கட் சோர்வு. 2

கேட்டார்ப் பிணிக்குந் தகையவாய்க் கேளாரும்
வேட்ப மொழிவதாஞ் சொல். 3

திறனறிந்து சொல்லுக சொல்லை யறனும்
பொருளு மதனினூஉங் கில். 4

சொல்லுக சொல்லைப் பிறிதோர்சொ லச்சொல்லை
வெல்லுஞ்சொ லின்மை யறிந்து. 5

வேட்பத்தாஞ் சொல்லிப் பிறர்சொற் பயன்கோடல்
மாட்சியின் மாசற்றார் கோள். 6

சொலல்வல்லன் சோர்வில னஞ்சா னவனை
இகல்வெல்லல் யார்க்கு மரிது. 7

விரைந்து தொழில்கேட்கு ஞால நிரந்தினிது
சொல்லுதல் வல்லார்ப் பெறின். 8

பலசொல்லக் காமுறுவர் மன்றமா சற்ற
சிலசொல்ல றேற்றா தவர். 9

இணருழ்த்து நாறா மலரனையர் கற்ற
துணர விரித்துரையா தார். 10

66-ம் அதி.—வினைத் தூய்மை

அஃதாவது, செய்யப்படுந் தொழில்கள் பொருளை மாத்திரமல்லாமல் அறமும்—புகழுந்தந்து நல்லவையாதல். சொல்லேயல்லாமல் செயலும் நன்றாக வேண்டுமென்கிறமையால் இது, சொல்வன்மையின்பின் வைக்கப்பட்டது.

துணைநல மாக்கந் தரூஉம் வினைநலம்
வேண்டிய வெல்லா தரும். 1

என்று மொருவுதல் வேண்டும் புகழொடு
நன்றி பயவா வினை. 2

ஓஒதல் வேண்டு மொளிமாழ்குஞ் செய்வினை
ஆஅது மென்னு மவர். 3

இடுக்கட் படினு மிளிவந்த செய்யார்
நடுக்கற்ற காட்சி யவர். 4

எற்றென் றிரங்குவ செய்யற்க செய்வானேல்
மற்றன்ன செய்யாமை நன்று. 5

ஈன்றாள் பசிகாண்பா னாயினுஞ் செய்யற்க
சான்றோர் பழிக்கும் வினை. 6

பழிமலைந் தெய்திய வாக்கத்திற் சான்றோர்
கழிநல் குரவே தலை. 7

கடிந்த கடிந்தொரார் செய்தார்க் கவைதாம்
முடிந்தாலும் பீழை தரும். 8

அழக்கொண்ட வெல்லா மழப்போ மிழப்பினும்
பிற்பயக்கு நற்பா லவை. 9

சலத்தாற் பொருள்செய்தே மார்த்தல் பசுமட்
கலத்துணீர் பெய்திரீஇ யற்று. 10

67-ம் அதி.—வினைத் திட்பம்

அஃதாவது, அப் பரிசுத்தமாகிய தொழிலை முடிப்பவனுக்கு வேண்டும் மனவலிமை. ஆகலான் இது, வினைத்தூய்மையின்பின் வைக்கப்பட்டது.

வினைத்திட்ப மென்ப தொருவன் மனத்திட்பம்
மற்றைய வெல்லாம் பிற. 1

ஊறொரா லுற்றபி னொல்காமை யிவ்விரண்டின்
ஆறென்ப ராய்ந்தவர் கோள். 2

கடைக்கொட்கச் செய்தக்க தாண்மை யிடைக்கொட்கின்
எற்றா விழுமந் தரும். 3

சொல்லுதல் யார்க்கு மெளிய வரியவாஞ்
சொல்லிய வண்ணஞ் செயல். 4

வீறெய்தி மாண்டார் வினைத்திட்பம் வேந்தன்கண்
ஊறெய்தி யுள்ளப் படும். 5

எண்ணிய வெண்ணியாங் கெய்துப வெண்ணியார்
திண்ணிய ராகப் பெறின். 6

உருவுகண் டெள்ளாமை வேண்டுமுருள் பெருந்தேர்க்
கச்சாணி யன்னா ருடைத்து. 7

கலங்காது கண்ட வினைக்கட் டுளங்காது
தூக்கங் கடிந்து செயல். 8

துன்ப முறவரினுஞ் செய்க துணிவாற்றி
இன்பம் பயக்கும் வினை. 9

எனைத்திட்ப மெய்தியக் கண்ணும் வினைத்திட்பம்
வேண்டாரை வேண்டா துலகு. 10

68-ம் அதி.—வினை செயல்வகை

அஃதாவது, அவ்வலிமையையுடைய மந்திரியானவன் அத்தொழிலைச் செய்யுந்திறமாம். ஆகலான் இது, வினைத்திட்பத்தின் பின் வைக்கப்பட்டது.

சூழ்ச்சி முடிவு துணிவெய்த லத்துணிவு
தாழ்ச்சியுட் டங்குத றீது. 1

தூங்குக தூங்கிச் செயற்பால தூங்கற்க
தூங்காது செய்யும் வினை. 2

ஒல்லும்வா யெல்லாம் வினைநன்றே யொல்லாக்காற்
செல்லும்வாய் நோக்கிச் செயல். 3

வினைபகை யென்றிரண்டி னெச்ச நினையுங்கால்
தீயெச்சம் போலத் தெறும். 4

பொருள்கருவி காலம் வினையிட னொடைந்தும்
இருடீர வெண்ணிச் செயல். 5

முடிவு மிடையூறு முற்றியாங் கெய்தும்
படுபயனும் பார்த்துச் செயல். 6

செய்வினை செய்வான் செயன்முறை யவ்வினை
உள்ளறிவா னுள்ளங் கொளல். 7

வினையான் வினையாக்கிக் கோட னனைகவுள்
யானையால் யானையாத் தற்று. 8

நட்டார்க்கு நல்ல செயலின் விரைந்ததே
ஒட்டாரை யொட்டிக் கொளல். 9

உறைசிறியா ருண்ணடுங்க லஞ்சிக் குறைபெறிற்
கொள்வர் பெரியார்ப் பணிந்து. 10

69-ம் அதி.—தூது

அஃதாவது, பொருத்தல், பிரிதல்களுக்கு வேற்றரசரிடத்தே செல்வாரது தன்மை. அவ்விரண்டனையும் முன் வினைசெயல்வகை யென்றமையால் இது அதன்பின் வைக்கப்பட்டது. தான்வகுத்துச் சொல்லுவோன், சொல்லியது சொல்லுவோன் எனத் தூது இருவகைப்படும். அவருள் முன்னோன் மந்திரியோடு சமானனுவானாகலானும், பின்னோன் அவனிலேகாற்பங்கு குணங்குறைந்தோன் ஆகலானும், இஃது அமைச்சியலாயிற்று.

அன்புடைமை யான்ற குடிப்பிறத்தல் வேந்தவாம்
பண்புடைமை தூதுரைப்பான் பண்பு. 1

அன்பறி வாராய்ந்த சொல்வன்மை தூதுரைப்பார்க்
கின்றி யமையாத மூன்று. 2

நூலாரு ணூல்வல்ல னாகுதல் வேலாருள்
வென்றி வினையுரைப்பான் பண்பு. 3

அறிவுரு வாராய்ந்த கல்வியும் மூன்றன்
செறிவுடையான் செல்க வினைக்கு. 4

தொகச்சொல்லித் தூவாத நீக்கி நகச்சொல்லி
நன்றி பயப்பதாந் தூது. 5

கற்றுக்கண் ணஞ்சான் செலச்சொல்லிக் காலத்தால்
தக்க தறிவதாந் தூது. 6

கடனறிந்து காலங் கருதி யிடனறிந்
தெண்ணி யுரைப்பான் றலை. 7

தூய்மை துணைமை துணிவுடைமை யிம்மூன்றின்
வாய்மை வழியுரைப்பான் பண்பு. 8

விடுமாற்றம் வேந்தர்க் குரைப்பான் வடுமாற்றம்
வாய்சோரா வன்க ணவன். 9

இறுதி பயப்பினு மெஞ்சா திறைவற்
குறுதி பயப்பதாந் தூது. 10

70-ம் அதி.—மன்னரைச் சேர்ந்தொழுகல்

அஃதாவது, மந்திரி அரசரைப் பொருந்தி நடக்கும் விதம். இது வேந்தவாம் பண்புடைமையென முன்சொல்லப்பட்டமையால் தூதின்பின் வைக்கப்பட்டது.

அகலா தணுகாது தீக்காய்வார் போல்க
இகல்வேந்தர்ச் சேர்ந்தொழுகு வார். 1

மன்னர் விழைப விழையாமை மன்னரால்
மன்னிய வாக்கந் தரும். 2

போற்றி னரியவை போற்றல் கடுத்தபின்
தேற்றுதல் யார்க்கு மரிது. 3

செவிச்சொல்லுஞ் சேர்ந்த நகையு மவித்தொழுகல்
ஆன்ற பெரியா ரகத்து. 4

எப்பொருளு மோரார் தொடரார்மற் றப்பொருளை
விட்டக்காற் கேட்க மறை. 5

குறிப்பறிந்து காலங் கருதி வெறுப்பில
வேண்டுப வேட்பச் சொலல். 6

வேட்பன சொல்லி வினையில வெஞ்ஞான்றுங்
கேட்பினுஞ் சொல்லா விடல். 7

இளைய ரினமுறைய ரென்றிகழார் நின்ற
ஒளியோ டொழுகப் படும். 8

கொளப்பட்டே மென்றெண்ணிக் கொள்ளாத செய்யார்
துளக்கற்ற காட்சி யவர். 9

பழைய மெனக்கருதிப் பண்பல்ல செய்யுங்
கெழுதகைமை கேடு தரும். 10

THE DIRECTOR OF ARCHAEOLOGY
29 DEC 1976
MADRAS

71-ம் அதி.—குறிப்பறிதல்

அஃதாவது, அரசர் கருதியவதனை அவர் கூறாமல் அறிதல். இது, மன்னரைச்சேர்ந்தொழுகற்குஇன்றியமையாதாகலின் அதன் பின் வைக்கப்பட்டது.

கூறாமை நோக்கிக் குறிப்பறிவா னெஞ்ஞான்றும்
மாறாநீர் வையக் கணி. 1

ஐயப் படாஅ தகத்த துணர்வானைத்
தெய்வத்தோ டொப்பக் கொளல். 2

குறிப்பிற் குறிப்புணர் வாரை யுறுப்பினுள்
யாது கொடுத்துங் கொளல். 3

குறித்தது கூறாமைக் கொள்வாரோ டேனை
உறுப்போ ரனையரால் வேறு. 4

குறிப்பிற் குறிப்புணரா வாயி னுறுப்பினுள்
என்ன பயத்தவோ கண். 5

அடுத்தது காட்டும் பளிங்குபோ னெஞ்சங்
கடுத்தது காட்டு முகம். 6

முகத்தின் முதுக்குறைந்த துண்டோ வுவப்பினுங்
காயினு தான்முந் துறும். 7

முகநோக்கி நிற்க வமையு மகநோக்கி
உற்ற துணர்வார்ப் பெறின். 8

பகைமையுங் கேண்மையுங் கண்ணுரைக்குங் கண்ணின்
வகைமை யுணர்வார்ப் பெறின். 9

நுண்ணிய மென்பா ரளக்குங்கோல் காணுங்காற்
கண்ணல்ல தில்லை பிற. 10

72-ம் அதி.—அவை யறிதல்

அஃதாவது, அரசனோடு இருந்து அவையினது இயல்பை அறிதல். காரியஞ் சொல்லுங்கால் அவன் குறிப்பறிதலேயன்றி இதுவும் வேண்டுதலின், இஃது அதன்பின் வைக்கப்பட்டது.

அவையறிந் தாராய்ந்து சொல்லுக சொல்லின்
தொகையறிந்த தூய்மை யவர். 1

இடைதெரிந்து நன்குணர்ந்து சொல்லுக சொல்லின்
நடைதெரிந்த நன்மை யவர். 2

அவையறியார் சொல்லன்மேற் கொள்பவர் சொல்லின்
வகையறியார் வல்லதூஉ மில். 3

ஒளியார் முன்னொள்ளிய ராதல் வெளியார்முன்
வான்சுதை வண்ணங் கொளல். 4

நன்றென்ற வற்றுள்ளு நன்றே முதுவருள்
முந்து கிளவாச் செறிவு. 5

ஆற்றி னிலைதளர்ந் தற்றே வியன்புலம்
ஏற்றுணர்வார் முன்ன ரிழுக்கு. 6

கற்றறிந்தார் கல்வி விளங்குங் கசடறச்
சொற்றெரிதல் வல்லா ரகத்து. 7

உணர்வ துடையார்முற் சொல்லல் வளர்வதன்
பாத்தியு ணீர்சொரிந் தற்று. 8

புல்லவையுட் பொச்சாந்துஞ் சொல்லற்க நல்லவையுள்
நன்கு செலச் சொல்லுவார். 9

அங்கணத்து ளுக்க வமிழ்தற்றாற் றங்கணத்தர்
அல்லார்முற் கோட்டி கொளல். 10

73-ம் அதி.—அவை யஞ்சாமை

சொல்லுதற்கு உரிய அவையினை அறிந்து சொல்லுங்கால் அதற்கு அஞ்சாமை வேண்டும். ஆகலான் இது, அவை யஞ்சாமை யின்பின் வைக்கப்பட்டது.

வகையறிந்து வல்லவை வாய்சோரார் சொல்லின்
தொகையறிந்த தூய்மை யவர். 1

கற்றாருட் கற்றா ரெனப்படுவர் கற்றார்முற்
கற்ற செலச்சொல்லு வார். 2

பகையகத்துச் சாவா ரெளிய ரரியர்
அவையகத் தஞ்சா தவர். 3

கற்றார்முற் கற்ற செலச்சொல்லித் தாங்கற்ற
மிக்காருண் மிக்க கொளல். 4

ஆற்றி னளவறிந்து கற்க வவையஞ்சா
மாற்றங் கொடுத்தற் பொருட்டு. 5

வாளொடென் வண்கண்ண ரல்லார்க்கு நூலொடென்
நுண்ணவை யஞ்சு பவர்க்கு. 6

பகையகத்துப் பேடிகை யொள்வா ளவையகத்
தஞ்சு மவன்கற்ற நூல். 7

பல்லவை கற்றும் பயமிலரே நல்லவையுள்
நன்கு செலச்சொல்லா தார். 8

கல்லா தவரிற் கடையென்ப கற்றறிந்தும்
நல்லா ரவையஞ்சு வார். 9

உளரெனினு மில்லாரொ டொப்பர் களனஞ்சிக்
கற்ற செலச்சொல்லா தார். 10

74-ம் அதி.—நாடு

இனி, அவ்வரசனாலும் அமைச்சனாலும்கொண்டு உய்க்கப்படுவதாய் ஏனை அரண்முதலிய அங்கங்கட்கு இன்றியமையாச் சிறப்பிற்றாயது நாடு. ஆகையால் இது, அதன்பின் வைக்கப்பட்டது.

தள்ளா விளையுளுந் தக்காருந் தாழ்விலாச்
செல்வருஞ் சேர்வது நாடு. 1

பெரும்பொருளாற் பெட்டக்க தாகி யருங்கேட்டால்
ஆற்ற விளைவது நாடு. 2

பொறையொருங்கு மேல்வருங் காற்றாங்கி யிறைவற்
கிறையொருங்கு நேர்வது நாடு. 3

உறுபசியு மோவாப் பிணியுஞ் செறுபகையுஞ்
சேரா தியல்வது நாடு. 4

பல்குழுவும் பாழ்செய்யு முட்பகையும் வேந்தலைக்குங்
கொல்குறும்பு மில்லது நாடு. 5

கேடறியாக் கெட்ட விடத்தும் வளங்குன்றா
நாடென்ப நாட்டிற் றலை. 6

இருபுனலும் வாய்ந்த மலையும் வருபுனலும்
வல்லரணு நாட்டிற் குறுப்பு. 7

பிணியின்மை செல்வம் விளைவின்ப மேமம்
அணியென்ப நாட்டிற்கிவ் வைந்து. 8

நாடென்ப நாடா வளத்தன நாடல்ல
நாட வளந்தரு நாடு. 9

ஆங்கமை வெய்தியக் கண்ணும் பயமின்றே
வேந்தமை வில்லாத நாடு. 10

75-ம் அதி.—அரண்

இனி, அந்நாட்டிற்கு உறுப்பாய் அடங்குமாயினும் பகை வரால் தொலைவுவந்துழி அது தனக்கும் அரசன் தனக்கும் ஏம மாதற் சிறப்புப்பற்றி இது நாட்டின்பின் வைக்கப்பட்டது.

ஆற்று பவர்க்கு மரண்பொரு ளஞ்சித்தற்
போற்று பவர்க்கும் பொருள். 1

மணிநீரு மண்ணு மலையு மணிநிழற்
காடு முடைய தரண். 2

உயர்வகலந் திண்மை யருமையிந் நான்கின்
அமைவர ணென்றுரைக்கு நூல். 3

சிறுகாப்பிற் பேரிடத்த தாகி யுறுபகை
ஊக்க மழிப்ப தரண். 4

கொளற்கரிதாய்க் கொண்டகூழ்த் தாகி யகத்தார்
நிலைக்கெளிதா நீர தரண். 5

எல்லாப் பொருளு முடைத்தா யிடத்துதவும்
நல்லா ளுடைய தரண். 6

முற்றியு முற்று தெறிந்து மறைப்படுத்தும்
பற்றற் கரிய தரண். 7

முற்றாற்றி முற்றி யவரையும் பற்றாற்றிப்
பற்றியார் வெல்வ தரண். 8

முனைமுகத்து மாற்றலர் சாய வினைமுகத்து
வீறெய்தி மாண்ட தரண். 9

எனைமாட்சித் தாகியக் கண்ணும் வினைமாட்சி
இல்லார்க ணில்ல தரண். 10

76-ம் அதி.—பொருள் செயல்வகை

பெரும்பான்மையும் நாட்டானும் அரணானும் ஆக்கவும், காக்கவும்படுவது. பொருளைச் செய்தலின் திறம் கூறுகின்றார் ஆகலான் இது, அதன்பின் வைக்கப்பட்டது.

பொருளல் லவரைப் பொருளாகச் செய்யும்
பொருளல்ல தில்லை பொருள். 1

இல்லாரை யெல்லாரு மெள்ளுவர் செல்வரை
எல்லாருஞ் செய்வர் சிறப்பு. 2

பொருளென்னும் பொய்யா விளக்க மிருளறுக்கும்
எண்ணிய தேயத்துச் சென்று. 3

அறனீனு மின்பமு மீனுந் திறனறிந்து
தீதின்றி வந்த பொருள். 4

அருளொடு மன்பொடும் வாராப் பொருளாக்கம்
புல்லார் புரள விடல். 5

உறுபொருளு முல்கு பொருளுந்தன் னொன்னார்த்
தெறுபொருளும் வேந்தன் பொருள். 6

அருளென்னு மன்பீன் குழவி பொருளென்னுஞ்
செல்வச் செவிலியா லுண்டு. 7

குன்றேறி யானைப்போர் கண்டற்றாற் றன்கைத்தொன்
றுண்டாகச் செய்வான் வினை. 8

செய்க பொருளைச் செறுநர் செருக்கறுக்கும்
எஃகதனிற் கூரிய தில். 9

ஒண்பொருள் காழ்ப்ப வியற்றியார்க் கெண்பொருள்
ஏனை யிரண்டு மொருங்கு. 10

77-ம் அதி.—படை மாட்சி

அப்பொருளினால் ஆவதாய் வெல்வதாய படை. இரண்டு அதிகாரத்தாற் கூறுவான்தொடங்கி முதற்கண் படைமாட்சி கூறுகின்றார். ஆதலான், இது அதன்பின் வைக்கப்பட்டது.

உறுப்பமைந் தூறஞ்சா வெல்படை வேந்தன்
வெறுக்கையு ளெல்லாந் தலை. 1

உலைவிடத் தூறஞ்சா வன்கண் டொலைவிடத்துத்
தொல்படைக் கல்லா லரிது. 2

ஒலித்தக்கா லென்னா முவரி யெலிப்பகை
நாக முயிர்ப்பக் கெடும். 3

அழிவின் றறைபோகா தாகி வழிவந்த
வன்க ணதுவே படை. 4

கூற்றுடன்று மேல்வரினுங் கூடி யெதிர்நிற்கும்
ஆற்ற லதுவே படை. 5

மறமான மாண்ட வழிச்செலவு தேற்றம்
எனநான்கே யேமம் படைக்கு. 6

தார்தாங்கிச் செல்வது தானை தலைவந்த
போர்தாங்குந் தன்மை யறிந்து. 7

அடற்றகையு மாற்றலு மில்லெனினுந் தானை
படைத்தகையாற் பாடு பெறும். 8

சிறுமையுஞ் செல்லாத் துனியும் வறுமையும்
இல்லாயின் வெல்லும் படை. 9

நிலைமக்கள் சால வுடைத்தெனினுந் தானை
தலைமக்க ளில்வழி யில். 10

78-ம் அதி.—படைச்செருக்கு

அஃதாவது, அப்படையது மறமிகுதி. சேனையின் நன்மையைக் கூறினபின்பு அதன் செருக்கைக் கூறுதலாகிய அதிகார முறைமைக்குக் காரணம் வெளிப்படையாக விளங்குவதால், அதிகார முறைமையும் இதனானே விளங்கும்.

என்னைமுன் னில்லன்மின் றெவ்விர் பலரென்னை
முன்னின்று கன்னின் றவர். 1

கான முயலெய்த வம்பினில் யானை
பிழைத்தவே லேந்த லினிது. 2

பேராண்மை யென்ப தறுகணொன் றுற்றக்கால்
ஊராண்மை மற்றத னெஃகு. 3

கைவேல் களிற்றொடு போக்கி வருபவன்
மெய்வேல் பறியா நகும். 4

விழித்தகண் வேல்கொண் டெறிய வழித்திமைப்பின்
ஓட்டன்றோ வன்க ணவர்க்கு. 5

விழுப்புண் படாதநா ளெல்லாம் வழுக்கினுள்
வைக்குந்தன் னாளை யெடுத்து. .. 6

சுழலு மிசைவேண்டி வேண்டா வுயிரார்
கழல்யாப்புக் காரிகை நீர்த்து. 7

உறினுயி ரஞ்சா மறவ ரிறைவன்
செறினுஞ்சீர் குன்ற லிலர். 8

இழைத்த திகவாமைச் சாவாரை யாரே
பிழைத்த தொறுக்கிற் பவர். 9

புரந்தார்கண் ணீர்மல்கச் சாகிற்பிற் சாக்கா
டிரந்துகோட் டக்க துடைத்து. 10

79-ம் அதி.—நட்பு

படைபோல அரசனுக்கு வினையிடத்து உதவுவதாய நட்பின் ஐந்து அதிகாரம் விதிமுகத்தானும், பன்னிரண்டு அதிகாரம் எதிர்மறைமுகத்தானும் கூறுவான் தொடங்கி, விதிமுக அதிகாரம் ஐந்தனுள்ளும் முதற்கண் நட்புக் கூறுகிறார். ஆகலான் இது, படைச்செருக்கின்பின் வைக்கப்பட்டது.

செயற்கரிய யாவுள நட்பி னதுபோல்
வினைக்கரிய யாவுள காப்பு. 1

நிறைநீர நீரவர் கேண்மை பிறைமதிப்
பின்னீர பேதையார் நட்பு. 2

நவிறொறு நூனயம் போலும் பயிறொறும்
பண்புடை யாளர் தொடர்பு. 3

நகுதற் பொருட்டன்று நட்டன் மிகுதிக்கண்
மேற்சென் றிடித்தற் பொருட்டு. 4

புணர்ச்சி பழகுதல் வேண்டா வுணர்ச்சிதான்
நட்பாங் கிழமை தரும். 5

முகநக நட்பது நட்பன்று நெஞ்சத்
தகநக நட்பது நட்பு. 6

அழிவி னவைநீக்கி யாறுய்த் தழிவின்கண்
அல்ல லுழப்பதா நட்பு. 7

உடுக்கை யிழந்தவன் கைபோல வாங்கே
இடுக்கண் களைவதா நட்பு. 8

நட்பிற்கு வீற்றிருக்கை யாதெனிற் கொட்பின்றி
ஒல்லும்வா யூன்றா நிலை. 9

இனைய ரிவரெமக் கின்னம்யா மென்று
புனையினும் புல்லென்னு நட்பு. 10

80-ம் அதி.—நட்பாராய்தல்

அஃதாவது, மேற்சொல்லிய இலக்கணத்தாரை ஆராய்ந்து அறிந்தே நடக்கவேண்டுமாதலின் அவரை ஆராயுந்திறம். ஆகலான் இது, நட்பின்பின் வைக்கப்பட்டது.

நாடாது நட்டலிற் கேடில்லை நட்டபின்
வீடில்லை நட்பாள் பவர்க்கு. 1

ஆய்ந்தாய்ந்து கொள்ளாதான் கேண்மை கடைமுறை
தான்சாந் துயரந் தரும். 2

குணனுங் குடிமையுங் குற்றமுங் குன்றா
இனனு மறிந்தியாக்க நட்பு. 3

குடிப்பிறந்து தன்கட் பழிநாணு வானைக்
கொடுத்துங் கொளல்வேண்டு நட்பு. 4

அழச்சொல்லி யல்ல திடித்து வழக்கறிய
வல்லார்நட் பாய்ந்து கொளல். 5

கேட்டினு முண்டோ ருறுதி கிளைஞரை
நீட்டி யளப்பதோர் கோல். 6

ஊதிய மென்ப தொருவற்குப் பேதையார்
கேண்மை யொரீஇ விடல். 7

உள்ளற்க வுள்ளஞ் சிறுகுவ கொள்ளற்க
அல்லற்க ணாற்றறுப்பார் நட்பு. 8

கெடுங்காலைக் கைவிடுவார் கேண்மை யடுங்காலை
உள்ளினு முள்ளஞ் சுடும். 9

மருவுக மாசற்றார் கேண்மையொன் றீத்தும்
ஒருவுக வொப்பிலார் நட்பு. 10

81-ம் அதி.—பழைமை

அஃதாவது,—நட்பினரது பழயராந் தன்மைபற்றி அவர் செய்த பிழைகளைப் பொறுத்தல். ஆராய்ந்து சிநேகிக்கப்பட்டாராயினும் பொறுக்கப்படும் குற்றமுடையர் ஆகலானும், ஊழ்வகையாலும், நட்புக் கொள்ளப்பட்டவரிடத்துப் பிழையுளதாம் என்பது அறிவித்தற்கு இது, நட்பாராய்தலின்பின் வைக்கப்பட்டது.

பழைமை யெனப்படுவ தியாதெனின் யாதுங்
கிழமையைக் கீழ்ந்திடா நட்பு. 1

நட்பிற் குறுப்புக் கெழுதகைமை மற்றதற்
குப்பாதல் சான்றோர் கடன். 2

பழகிய நட்பெவன் செய்யுங் கெழுதகைமை
செய்தாங் கமையாக் கடை. 3

விழைதகையான் வேண்டியிருப்பர் கெழுதகையாற்
கேளாது நட்டார் செயின். 4

பேதைமை யொன்றோ பெருங்கிழமை யென்றுணர்க
நோதக்க நட்டார் செயின். 5

எல்லைக்க ணின்றார் துறவார் தொலைவிடத்துந்
தொல்லைக்க ணின்றார் தொடர்பு. 6

அழிவந்த செய்யினு மன்பறா ரன்பின்
வழிவந்த கேண்மை யவர். 7

கேளிழுக்கங் கேளாங் கெழுதகைமை வல்லார்க்கு
நாளிழுக்க நட்டார் செயின். 8

கெடாஅ வழிவந்த கேண்மையார் கேண்மை
விடாஅர் விழையு முலகு. 9

விழையார் விழையப் படுப பழையார்கட்
பண்பிற் றலைப்பிரியா தார். 10

82-ம் அதி.—தீ நட்பு

பொறுக்கப்படாத குற்றமுடைமையால் விடத்தக்கதாகிய நட்பு. நட்பாராய்தல் அதிகாரத்தில் சுருங்கச்சொல்லியவளவில் அடங்காமையால் அதனை இருவகைப்படுத்தி இரண்டதிகாரத்திலே சொல்லத்தொடங்கி முன்னே தீ நட்பு உரைக்கின்றார் ஆகலான் இது, பழமையின்பின் வைக்கப்பட்டது.

பருகுவார் போலினும் பண்பிலார் கேண்மை
பெருகலிற் குன்ற லினிது. 1

உறினட் டறினொரூஉ மொப்பிலார் கேண்மை
பெறினு மிழப்பினு மென். 2

உறுவது சீர்தூக்கு நட்பும் பெறுவது
கொள்வாருங் கள்வரு நேர். 3

அமரகத் தாற்றறுக்குங் கல்லாமா வன்னார்
தமரிற் றனிமை தலை. 4

செய்தேமஞ் சாராச் சிறியவர் புன்கேண்மை
எய்தலி னெய்தாமை நன்று. 5

பேதை பெருங்கெழீஇ நட்பி னறிவுடையார்
ஏதின்மை கோடி யுறும். 6

நகைவகைய ராகிய நட்பிற் பகைவரான்
பத்தடுத்த கோடி யுறும். 7

ஒல்லுங் கரும முடற்று பவர்கேண்மை
சொல்லாடார் சோர விடல். 8

கனவினு மின்னாது மன்னோ வினைவேறு
சொல்வேறு பட்டார் தொடர்பு. 9

எனைத்துங் குறுகுத லோம்பன் மனைக்கெழீஇ
மன்றிற் பழிப்பார் தொடர்பு. 10

83-ம் அதி.—கூடா நட்பு

அதாவது, பகைமையால் உள்ளே கூடாதிருந்தே சமயம் கிடைக்குமளவும் புறத்திலேகூடி நடப்பவர் நட்பு. ஆகலான் இது, தீ நட்பின்பின் வைக்கப்பட்டது.

சீரிடங் காணி னெறிதற்குப் பட்டடை
நேரா நிரந்தவர் நட்பு. 1

இனம்போன் றினமல்லார் கேண்மை மகளிர்
மனம்போல வேறு படும். 2

பலநல்ல கற்றக் கடைத்து மனநல்லர்
ஆகுதன் மாணார்க் கரிது. 3

முகத்தி னினிய நகாஅ வகத்தின்னா
வஞ்சரை யஞ்சப் படும். 4

மனத்தி னமையா தவரை யெனைத்தொன்றுஞ்
சொல்லினாற் றேறற்பாற் றன்று. 5

நட்டார்போ னல்லவை சொல்லினு மொட்டார்சொல்
ஒல்லை யுணரப் படும். 6

சொல்வணக்க மொன்னார்கட் கொள்ளற்க வில்வணக்கந்
தீங்கு குறித்தமை யான். 7

தொழுதகை யுள்ளும் படையொடுங்கு மொன்னார்
அழுதகண் ணீரு மனைத்து. 8

மிகச்செய்து தம்மெள்ளு வாரை நகச்செய்து
நட்பினுட் சாப்புல்லற் பாற்று. 9

பகைநட்பாங் காலம் வருங்கான் முகநட்
டகநட் பொரீஇ விடல். 10

84-ம் அதி.—பேதைமை

அந்நட்பை எதிர்மறுத்துப் பகைமுகத்தானே கூறத் தொடங்கினர். பேதைமையாலும் பகைமை ஏற்படுமாகலான் இது, கூடா நட்பின்பின் வைக்கப்பட்டது.

பேதைமை யென்பதொன் றியாதெனி னேதங்கொண்
டூதியம் போக விடல். 1

பேதைமையு ளெல்லாம் பேதைமை காதன்மை
கையல்ல தன்கட் செயல். 2

நாணாமை நாடாமை நாரின்மை யாதொன்றும்
பேணாமை பேதை தொழில். 3

ஓதி யுணர்ந்தும் பிறர்க்குரைத்துந் தானடங்காப்
பேதையிற் பேதையா ரில். 4

ஒருமைச் செயலாற்றும் பேதை யெழுமையுந்
தான்புக் கழுந்து மளறு. 5

பொய்படு மொன்றோ புனைபூணுங் கையறியாப்
பேதை வினைமேற் கொளின். 6

ஏதிலா ரார்த் தமர்பசிப்பர் பேதை
பெருஞ்செல்வ முற்றக் கடை. 7

மைய லொருவன் களித்தற்றாற் பேதைதன்
கையொன் றுடைமை பெறின். 8

பெரிதினிது பேதையார் கேண்மை பிரிவின்கட்
பீழை தருவதொன் றில். 9

கழாஅக்கால் பள்ளியுள் வைத்தற்றாற் சான்றோர்
குழாஅத்துப் பேதை புகல். 10

85-ம் அதி.—புல்லறிவாண்மை

அஃதாவது, தான் சிற்றறிவினனாயிருந்தே தன்னைப் பேரறிவனாக மதித்து உயர்ந்தோராலே சொல்லப்படும் உறுதிச்சொல்லைக் கொள்ளாமை. ஆகலான், இது,பேதைமையின்பின் வைக்கப்பட்டது.

அறிவின்மை யின்மையு ளின்மை பிறிதின்மை
இன்மையா வையா துலகு. 1

அறிவிலா னெஞ்சுவந் தீதல் பிறிதியாதும்
இல்லை பெறுவான் றவம். 2

அறிவிலார் தாந்தம்மைப் பீழிக்கும் பீழை
செறுவார்க்குஞ் செய்த லரிது. 3

வெண்மை யெனப்படுவ தியாதெனி னொண்மை
உடையம்யா மென்னுஞ் செருக்கு. 4

கல்லாத மேற்கொண் டொழுகல் கசடற
வல்லதூஉ மையந் தரும். 5

அற்ற மறைத்தலோ புல்லறிவு தம்வயிற்
குற்ற மறையா வழி. 6

அருமறை சோரு மறிவிலான் செய்யும்
பெருமிறை தானே தனக்கு. 7

ஏவவுஞ் செய்கலான் றான்றேறா னவ்வுயிர்
போஒ மளவுமோர் நோய். 8

காணாதாற் காட்டுவான் றான்காணான் காணாதான்
கண்டானாந் தான்கண்ட வாறு. 9

உலகத்தா ருண்டென்ப தில்லென்பான் வையத்
தலகையா வைக்கப் படும். 10

86-ம் அதி.—இகல்

புல்லறிவாண்மை முதலியவைகளால் வரும் குரோதம் காமம் முதலியவற்றுள் பகைமை அதிகமாயுள்ளதாதலால் இது, அதன் பின் வைக்கப்பட்டது.

இகலென்ப வெல்லா வுயிர்க்கும் பகலென்னும்
பண்பின்மை பாரிக்கு நோய். 1

பகல்கருதிப் பற்றா செயினு மிகல்கருதி
இன்னா செய்யாமை தலை. 2

இகலென்னு மெவ்வநோய் நீக்கிற் றவலில்லாத்
தாவில் விளக்கந் தரும். 3

இன்பத்து ளின்பம் பயக்கு மிகலென்னுந்
துன்பத்துட் டுன்பங் கெடின். 4

இகலெதிர் சாய்ந்தொழுக வல்லாரை யாரே
மிகலூக்குந் தன்மை யவர். 5

இகலின் மிகலினி தென்பவன் வாழ்க்கை
தவலுங் கெடலு நணித்து. 6

மிகன்மேவன் மெய்ப்பொருள் காணா ரிகன்மேவல்
இன்னா வறிவி னவர். 7

இகலிற் கெதிர்சாய்த லாக்க மதனை
மிகலூக்கி னூக்குமாங் கேடு. 8

இகல்காணா னாக்கம் வருங்கா லதனை
மிகல்காணுங் கேடு தரற்கு. 9

இகலானா மின்னாத வெல்லா நகலானாம்
நன்னய மென்னுஞ் செருக்கு. 10

87-ம் அதி.—பகை மாட்சி

அரசர்க்கு எவ்வழியாலும் பகையில்லாமை கூடாமையால், மேலே பொதுவகையால் விலக்கப்பட்ட இகலை இவ்விடத்தே சிறப்பு வகையால் விதிக்கின்றார். ஆதலால் இது, அதன்பின் வைக்கப்பட்டது.

வலியார்க்கு மாறேற்ற லோம்புக வோம்பா
மெலியார்மேன் மேக பகை. 1

அன்பில னான்ற துணையிலன் றான்றுவ்வான்
என்பரியு மேதிலான் றுப்பு. 2

அஞ்சு மறியா னமைவில னீகலான்
தஞ்ச மெளியன் பகைக்கு. 3

நீங்கான் வெகுளி நிறையில னெஞ்ஞான்றும்
யாங்கணும் யார்க்கு மெளிது. 4

வழிநோக்கான் வாய்ப்பன செய்யான் பழிநோக்கான்
பண்பிலன் பற்றார்க் கினிது. 5

காணாச் சினத்தான் கழிபெருங் காமத்தான்
பேணாமை பேணப் படும். 6

கொடுத்துங் கொளல்வேண்டு மன்ற வடுத்திருந்து
மாணாத செய்வான் பகை. 7

குணனிலனாய்க் குற்றம் பலவாயின் மாற்றார்க்
கினனிலனா மேமாப் புடைத்து. 8

செறுவார்க்குச் சேணிகவா வின்ப மறிவிலா
அஞ்சும் பகைவர்ப் பெறின். 9

கல்லான் வெகுளுஞ் சிறுபொரு ளெஞ்ஞான்றும்
ஒல்லானை யொல்லா தொளி. 10

88-ம் அதி.—பகைத்திறந் தெரிதல்

மாட்சிமைப்படாத பகையை ஆக்குதற்குற்றமும், பகையுள் நட்பாக்குந் தன்மையதும், அயலாக்கும் தன்மையதும் அவற்றைக் களையாமற்போனால் உண்டாகும் இழுக்கமும் ஆகிய யாவும்மாட்சி மைப்படாதபகையினவாதலால்இது, அதன்பின் வைக்கப்பட்டது.

பகையென்னும் பண்பி லதனை யொருவன்
நகையேயும் வேண்டற்பாற் றன்று. 1

வில்லே ருழவர் பகைகொளினுங் கொள்ளற்க
சொல்லே ருழவர் பகை. 2

ஏமுற் றவரினு மேழை தமியனாய்ப்
பல்லார் பகைகொள் பவன். 3

பகைநட்பாக் கொண்டொழுகும் பண்புடை யாளன்
தகைமைக்கட் டங்கிற் றுலகு. 4

தன்றுணை யின்றாற் பகையிரண்டாற் றானொருவன்
இன்றுணையாக் கொள்கவற்றி னொன்று. 5

தேறினுந் தேறா விடினு மழிவின்கண்
தேறான் பகாஅன் விடல். 6

நோவற்க நொந்த தறியார்க்கு மேவற்க
மென்மை பகைவ ரகத்து. 7

வகையறிந்து தற்செய்து தற்காப்ப மாயும்
பகைவர்கட் பட்ட செருக்கு. 8

இளைதாக முண்மரங் கொல்க களையுநர்
கைகொல்லுங் காழ்த்த விடத்து. 9

உயிர்ப்ப வுளரல்லர் மன்ற செயிர்ப்பவர்
செம்மல் சிதைக்கலா தார். 10

89-ம் அதி.—உட்பகை

அதாவது, புறப்பகைக்கு இடமாகிக்கொடுத்து, அதுவெல்லும் அளவும் உள்ளாய் நிற்கும் பகை. இது களையப்படுவதிலே சேர்ந்ததாகையால் பகைத்திறம் தெரிதலின்பின் வைக்கப்பட்டது.

நிழனீரு மின்னா வின்னா தமர்நீரும்
இன்னாவா மின்னா செயின். 1

வாள்போல் பகைவரை யஞ்சற்க வஞ்சுக
கேள்போல் பகைவர் தொடர்பு. 2

உட்பகை யஞ்சித்தற் காக்க உலைவிடத்து
மட்பகையின் மாணத் தெறும். 3

மனமாணா வுட்பகை தோன்றி னினமாணா
ஏதம் பலவுந் தரும். 4

உறன்முறையா னுட்பகை தோன்றினின்ற முறையான்
ஏதம் பலவுந் தரும். 5

ஒன்றாமை யொன்றியார் கட்படி னெஞ்ஞான்றும்
பொன்றாமை யொன்ற லரிது. 6

செப்பின் புணர்ச்சிபோற் கூடினுங் கூடாதே
உட்பகை யுற்ற குடி. 7

அரம்பொருத பொன்போலத் தேயு முரம்பொரு
துட்பகை யுற்ற குடி. 8

எட்பக வன்ன சிறுமைத்தே யாயினும்
உட்பகை யுள்ளதாங் கேடு. 9

உடம்பா டிலாதவர் வாழ்க்கை குடங்கருட்
பாம்போ டுடனுறைந் தற்று. 10

90-ம் அதி.—பெரியாரைப் பிழையாமை

இது, வலிமையால் பெரியராகிய வேந்தரையும் தவத்தினாலே பெரியராகிய முனிவரையும் அவமதித்து நடவாமையை விளக்குவது; ஆதலால், இது உட்பகையின்பின் வைக்கப்பட்டது.

ஆற்றுவா ராற்ற லிகழாமை போற்றுவார்
போற்றலு ளெல்லாந் தலை. 1

பெரியாரைப் பேணா தொழுகிற் பெரியாரால்
பேரா விடும்பை தரும். 2

கெடல்வேண்டிற் கேளாது செய்க வடல்வேண்டின்
ஆற்று பவர்க ணிழுக்கு. 3

கூற்றத்தைக் கையால் விளித்தற்றா லாற்றுவார்க்
காற்றாதா ரின்னா செயல். 4

யாண்டுச்சென் றியாண்டு முளராகார் வெந்துப்பின்
வேந்து செறப்பட் டவர். 5

எரியாற் சுடப்படினு முய்வுண்டா முய்யார்
பெரியார்ப் பிழைத்தொழுகு வார். 6

வகைமாண்ட வாழ்க்கையும் வான்பொருளு மென்னாந்
தகைமாண்ட தக்கார் செறின். 7

குன்றன்னார் குன்ற மதிப்பிற் குடியொடு
நின்றன்னார் மாய்வர் நிலத்து. 8

ஏந்திய கொள்கையார் சீறி னிடைமுறிந்து
வேந்தனும் வேந்து கெடும். 9

இறந்தமைந்த சார்புடைய ராயினு முய்யார்
சிறந்தமைந்த சீரார் செறின் 10

91-ம் அதி.—பெண்வழிச் சேறல்

காமத்தால் வருபவை நேரே பகையல்லவாயினும் பெருமை சிதைத்தல், அழிவைத்தருதல் என்கிற தொழில்களாலேபகையோடு ஒத்தலால், இது பெரியாரைப் பிழையாமையின்பின் வைக்கப் பட்டது.

மனைவிழைவார் மாண்பய னெய்தார் வினைவிழைவார்
வேண்டாப் பொருளு மது. 1

பேணாது பெண்விழைவா னாக்கம் பெரியதோர்
நாணாக நாணுத் தரும். 2

இல்லாள்கட் டாழ்ந்த வியல்பின்மை யெஞ்ஞான்றும்
நல்லாரு ணாணுத் தரும். 3

மனையாளை யஞ்சு மறுமையி லாளன்
வினையாண்மை வீறெய்த லின்று. 4

இல்லாளை யஞ்சுவா னஞ்சுமற் றெஞ்ஞான்றும்
நல்லார்க்கு நல்ல செயல். 5

இமையாரின் வாழினும் பாடிலரே யில்லாள்
அமையார்தோ ளஞ்சு பவர். 6

பெண்ணேவல் செய்தொழுகு மாண்மையி னாணுடைப்
பெண்ணே பெருமை யுடைத்து. 7

நட்டார் குறைமுடியார் நன்றாற்றார் நன்னுதலாள்
பெட்டாங் கொழுகு பவர். 8

அறவினையு மான்ற பொருளும் பிறவினையும்
பெண்ணேவல் செய்வார்க ணில். 9

எண்சேர்ந்த நெஞ்சத் திடனுடையார்க் கெஞ்ஞான்றும்
பெண்சேர்ந்தாம் பேதைமை யில். 10

92-வரைவின் மகளிர்

தம்நலத்தை விலைகொடுப்பவர் யாவர்க்கும் விற்பதல்லது, அதற்கு ஆவார், ஆகாதார் என்கிற வரைவு இல்லாத மகளிரது இயல்பு கூறுகின்றார். ஆகலான் இது, பெண்வழிச் சேறலின்பின் வைக்கப்பட்டது.

அன்பின் விழையார் பொருள்விழையு மாய்தொடியார்
இன்சொ லிழுக்குத் தரும். 1

பயன்றூக்கி பண்புரைக்கும் பண்பின் மகளிர்
நயன்றூக்கி நள்ளா விடல். 2

பொருட்பெண்டிர் பொய்ம்மை முயக்க மிருட்டறையில்
ஏதில் பிணந்தழீஇ யற்று. 3

பொருட்பொருளார் புன்னலந் தோயா ரருட்பொருள்
ஆயு மறிவி னவர். 4

பொதுநலத்தார் புன்னலந் தோயார் மதிநலத்தின்
மாண்ட வறிவி னவர். 5

தந்நலம் பாரிப்பார் தோயார் தகைசெருக்கிப்
புன்னலம் பாரிப்பார் தோள். 6

நிறைநெஞ்ச மில்லவர் தோய்வர் பிறநெஞ்சிற்
பேணிப் புணர்பவர் தோள். 7

ஆயு மறிவின ரல்லார்க் கணங்கென்ப
மாய மகளிர் முயக்கு. 8

வரைவிலா மாணிழையார் மென்றோள் புரையிலாப்
பூரியர்க ளாழு மளறு. 9

இருமனப் பெண்டிருங் கள்ளுங் கவறுந்
திருநீக்கப் பட்டார் தொடர்பு. 10

93-ம் அதி.—கள்ளுண்ணாமை

ஒழுக்கமும் உணர்வும் அழித்தலில் பரத்தையரோடு ஒப்பதாகிய கள்ளினை உண்ணாமையின் சிறப்பை எதிர்மறை முகத்தான் கூறுகின்றார் ஆகலான் இது, அதன்பின் வைக்கப்பட்டது.

உட்கப் படாஅ ரொளியிழப்ப ரெஞ்ஞான்றுங்
கட்காதல் கொண்டொழுகு வார். 1

உண்ணற்க கள்ளை யுணிலுண்க சான்றோரான்
எண்ணப் படவேண்டா தார். 2

ஈன்றாள் முகத்தேயு மின்னாதா லென்மற்றுச்
சான்றோர் முகத்துக் களி. 3

நாணென்னு நல்லாள் புறங்கொடுக்குங் கள்ளென்னும்
பேணாப் பெருங்குற்றத் தார்க்கு. 4

கையறி யாமை யுடைத்தே பொருள்கொடுத்து
மெய்யறி யாமை கொளல். 5

துஞ்சினார் செத்தாரின் வேறல்ல ரெஞ்ஞான்றும்
நஞ்சுண்பார் கள்ளுண் பவர். 6

உள்ளொற்றி யுள்ளூர் நகப்படுவ ரெஞ்ஞான்றுங்
கள்ளொற்றிக் கண்சாய் பவர். 7

களித்தறியே னென்பது கைவிடுக நெஞ்சத்
தொளித்ததூஉ மாங்கே மிகும். 8

களித்தானைக் காரணங் காட்டுதல் கீழ்நீர்க்
குளித்தானைத் தீத்துரீஇ யற்று. 9

கள்ளுண்ணாப் போழ்திற் களித்தானைக் காணுங்கால்
உள்ளான்கொ லுண்டதன் சோர்வு. 10

94-ம் அதி.—சூது

இது, கள்ளுண்டல்போல், அறம் பொருள் இன்பங்களுக்குத் தடையாக்கும் குண முடையதாதலால், அதன்பின் வைக்கப் பட்டது.

வேண்டற்க வென்றிடினுஞ் சூதினை வென்றதூஉந்
தூண்டிற்பொன் மீன்விழுங்கி யற்று. 1

ஒன்றெய்தி நூறிழக்குஞ் சூதர்க்கு முண்டாங்கொல்
நன்றெய்தி வாழ்வதோ ராறு. 2

உருளாய மோவாது கூறிற் பொருளாயம்
போஒய்ப் புறமே படும். 3

சிறுமை பலசெய்து சீரழிக்குஞ் சூதின்
வறுமை தருவதொன் றில். 4

கவறுங் கழகமுங் கையுந் தருக்கி
இவறியா ரில்லாகி யார். 5

அகடாரா ரல்ல லுழப்பர்சூ தென்னும்
முகடியான் மூடப்பட் டார். 6

பழகிய செல்வமும் பண்புங் கெடுக்குங்
கழகத்துக் காலை புகின். 7

பொருள்கெடுத்துப் போய்மேற் கொளீஇ யருள்கெடுத்
தல்ல லுழப்பிக்குஞ் சூது. 8

உடைசெல்வ மூணொளி கல்வியென் றைந்தும்
அடையாவா மாயங் கொளின். 9

இழத்தொறூஉங் காதலிக்குஞ் சூதேபோற் றுன்பம்
உழத்தொறூஉங் காதற் றுயிர். 10

95-ம் அதி.—மருந்து

மக்கட்குப் பிணிகள்பழவினையாலும் சூதுமுதலியதீயவொழுக்கக் காரணங்களாலும் வரும். வினையால் வருவது வினைகழியும்போதகலும். காரணங்களால் வருவன மருந்தினாற்றீரும். ஆகலான் மருந்தின் திறத்தைக்கூறும் இவ்வதிகாரம் சூதின்பின் வைக்கப்பட்டது.

மிகினுங் குறையினு நோய்செய்யு நூலோர்
வளிமுதலா வெண்ணிய மூன்று. 1

மருந்தென வேண்டாவாம் யாக்கைக் கருந்திய
தற்றது போற்றி யுணின். 2

அற்றா லளவறிந் துண்க வஃதுடம்பு
பெற்றா னெடிதுய்க்கு மாறு. 3

அற்ற தறிந்து கடைப்பிடித்து மாறல்ல
துய்க்க துவரப் பசித்து. 4

மாறுபா டில்லாத வுண்டி மறுத்துண்ணின்
ஊறுபா டில்லை யுயிர்க்கு. 5

இழிவறிந் துண்பான்க ணின்பம்போ னிற்குங்
கழிபே ரிரையான்க ணோய். 6

தீயள வன்றித் தெரியான் பெரிதுண்ணின்
நோயள வின்றிப் படும். 7

நோய்நாடி நோய்முத னாடி யதுதணிக்கும்
வாய்நாடி வாய்ப்பச் செயல். 8

உற்றா னளவும் பிணியளவுங் காலமுங்
கற்றான் கருதிச் செயல். 9

உற்றவன் றீர்ப்பான் மருந்துழைச் செல்வானென்
றப்பானாற் கூற்றே மருந்து. 10

அங்கவியல் முற்றிற்று.

ஒழிபியல்

96-ம் அதி.—குடிமை

இனி, அரசியல் முதலானவைகளிலே அடங்காது ஒழிந்தவைகளின் இயல்பைப் பதின்மூன்றதிகாரத்தினாலே சொல்லத்தொடங்கினர். ஆகலான் மருந்துபோல் சிறப்புடைய குடிமை அதன்பின் வைக்கப்பட்டது.

இற்பிறந்தார் கண்ணல்ல தில்லை யியல்பாகச்
செப்பமு நாணு மொருங்கு. 1

ஒழுக்கமும் வாய்மையு நாணுமிம் மூன்றும்
இழுக்கார் குடிப்பிறந் தார். 2

நகையீகை யின்சொ லிகழாமை நான்கும்
வகையென்ப வாய்மைக் குடிக்கு. 3

அடுக்கிய கோடி பெறினுங் குடிப்பிறந்தார்
குன்றுவ செய்த லிலர். 4

வழங்குவ துள்வீழ்ந்தக் கண்ணும் பழங்குடி
பண்பிற் றலைப்பிரித லின்று. 5

சலம்பற்றிச் சால்பில செய்யார்மா சற்ற
குலம்பற்றி வாழ்துமென் பார். 6

குடிப்பிறந்தார் கண்விளங்குங் குற்றம் விசும்பின்
மதிக்கண் மறுப்போ லுயர்ந்து. 7

நலத்தின்க ணாரின்மை தோன்றி னவனைக்
குலத்தின்க ணையப் படும். 8

நிலத்திற் கிடந்தமை கால்காட்டுங் காட்டுங்
குலத்திற் பிறந்தார்வாய்ச் சொல். 9

நலம்வேண்டி னாணுடைமை வேண்டுங் குலம்வேண்டின்
வேண்டுக யார்க்கும் பணிவு. 10

97-ம் அதி.—மானம்

அஃதாவது, எந்நாளும் தன்னிலையிலே தாழாமையும், ஊழால் தாழ்வு வந்தவிடத்து உயிர்வாழாமையும் ஆகும். இது, குடிப் பிறப்பை அழியாமல் நிறுத்துஞ் சிறப்புப்பற்றி அதன்பின்வைக்கப் பட்டது.

இன்றி யமையாச் சிறப்பின வாயினுங்
குன்ற வருப விடல். 1

சீரினுஞ் சீரல்ல செய்யாரே சீரொடு
பேராண்மை வேண்டு பவர். 2

பெருக்கத்து வேண்டும் பணிதல் சிறிய
சுருக்கத்து வேண்டு முயர்வு. 3

தலையி னிழிந்த மயிரனையர் மாந்தர்
நிலையி னிழிந்தக் கடை. 4

குன்றி னனையாருங் குன்றுவர் குன்றுவ
குன்றி யனைய செயின். 5

புகழின்றாற் புத்தேணாட் டுய்யாதா லென்மற்
றிகழ்வார்பின் சென்று நிலை. 6

ஒட்டார்பின் சென்றொருவன் வாழ்தலி னந்நிலையே
கெட்டா னெனப்படுத னன்று. 7

மருந்தோமற் றூனோம்பும் வாழ்க்கை பெருந்தகைமை
பீடழிய வந்த விடத்து. 8

மயிர்நீப்பின் வாழாக் கவரிமா வன்னார்
உயிர்நீப்பர் மானம் வரின். 9

இளிவரின் வாழாத மான முடையார்
ஒளிதொழு தேத்து முலகு. 10

98-ம் அதி.—பெருமை

அதாவது, செய்தற்கரிய செய்தல், செருக்கில்லாமை, பிறர்குற்றம் சொல்லாமை, என்றிவை முதலாகிய நற்குணங்களாலே பெரியாராயினோரது தன்மையாம். நிலையிலிருந்து மேலும் மேலும் உயர்த்துவதாகிய இக்குணங்கள் உண்டாவது நிலையிலிருந்துதாழாமை உள்ளவிடத்தே ஆகலால், இது, மானத்தின்பின் வைக்கப்பட்டது.

ஒளியொருவற் குள்ள வெறுக்கை யிளியொருவற்
கஃதிறந்து வாழ்து மெனல். 1

பிறப்பொக்கு மெல்லா வுயிர்க்குஞ் சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமை யான். 2

மேலிருந்து மேலல்லார் மேலல்லர் கீழிருந்துங்
கீழல்லார் கீழல் லவர். 3

ஒருமை மகளிரே போலப் பெருமையுந்
தன்னைத்தான் கொண்டொழுகி னுண்டு. 4

பெருமை யுடையவ ராற்றுவா ராற்றின்
அருமை யுடைய செயல். 5

சிறியா ருணர்ச்சியு ளில்லைப் பெரியாரைப்
பேணிக்கொள் வேமென்னு நோக்கு. 6

இறப்பே புரிந்த தொழிற்றாஞ் சிறப்புந்தான்
சீரல் லவர்கட் படின். 7

பணியுமா மென்று பெருமை சிறுமை
அணியுமாந் தன்னை வியந்து. 8

பெருமை பெருமித மின்மை சிறுமை
பெருமித மூர்ந்து விடல். 9

அற்ற மறைக்கும் பெருமை சிறுமைதான்
குற்றமே கூறி விடும். 10

99-ம் அதி.—சான்றாண்மை

அஃதாவது, பல குணங்களாலும், நிறைந்து அவைகளை ஆளுந் தற்றன்மை. பெருமையுள் அடங்காத பல குணங்களையுந்தொகுத் துக்கொண்டுநிற்கையால், அது, பெருமையின்பின் வைக்கப்பட்டது.

கடனென்ப நல்லவை யெல்லாங் கடனறிந்து
சான்றாண்மை மேற்கொள் பவர்க்கு. 1

குணநலஞ் சான்றோர் நலனே பிறநலம்
எந்நலத் துள்ளதூஉ மன்று. 2

அன்புநா ணொப்புரவு கண்ணோட்டம் வாய்மையோ
டைந்துசால் பூன்றிய தூண். 3

கொல்லா நலத்தது நோன்மை பிறர்தீமை
சொல்லா நலத்தது சால்பு. 4

ஆற்றுவா ராற்றல் பணித லதுசான்றோர்
மாற்றாரை மாற்றும் படை. 5

சால்பிற்குக் கட்டளை யாதெனிற் றோல்வி
துலையல்லார் கண்ணுங் கொளல். 6

இன்னா செய்தார்க்கு மினியவே செய்யாக்கால்
என்ன பயத்ததோ சால்பு. 7

இன்மை யொருவற் கிளிவன்று சால்பென்னுந்
திண்மையுண் டாகப் பெறின். 8

ஊழி பெயரினுந் தாம்பெயரார் சான்றாண்மைக்
காழி யெனப்படு வார். 9

சான்றவர் சான்றாண்மை குன்றி னிருநிலந்தான்
தாங்காது மன்னோ பொறை. 10

100-ம் அதி.—பண்புடைமை

அதாவது, பெருமை சான்றாண்மைகளில் வழுவாது நின்றே எல்லாரியல்புகளும் அறிந்து நடத்தலுடையராதல். ஆகலான் இது, சான்றாண்மையின்பின் வைக்கப்பட்டது.

எண்பதத்தா லெய்த லெளிதென்ப யார்மாட்டும்
பண்புடைமை யென்னும் வழக்கு. 1

அன்புடைமை யான்ற குடிப்பிறத்த லிவ்விரண்டும்
பண்புடைமை யென்னும் வழக்கு. 2

உறுப்பொத்தன் மக்களொப் பன்றால் வெறுத்தக்க
பண்பொத்த லொப்பதா மொப்பு. 3

நயனொடு நன்றி புரிந்த பயனுடையார்
பண்புபா ராட்டு முலகு. 4

நகையுள்ளு மின்னா திகழ்ச்சி பகையுள்ளும்
பண்புள பாடறிவார் மாட்டு. 5

பண்புடையார்ப் பட்டுண் டுலக மதுவின்றேல்
மண்புக்கு மாய்வது மன். 6

அரம்போலுங் கூர்மைய ரேனு மரம்போல்வர்
மக்கட்பண் பில்லா தவர். 7

நண்பாற்றா ராகி நயமில செய்வார்க்கும்
பண்பாற்றா ராதல் கடை. 8

நகல்வல்ல ரல்லார்க்கு மாயிரு ஞாலம்
பகலும்பாற் பட்டன் றிருள். 9

பண்பிலான் பெற்ற பெருஞ்செல்வ நன்பால்
கலந்தீமை யாற்றிரிந் தற்று. 10

OFFICE OF THE DIRECTOR OF ARCHAEOLOGY
5484
29 DEC 1976
MADRAS

101-ம் அதி.—நன்றியில் செல்வம்

அதாவது, சம்பாதித்தவனுக்கும், பிறர்க்கும் பயன்படுதலில்லாத செல்வத்தின் இயல்பு. செல்வமுடையானது குற்றம், செல்வத்தின்மேல் ஏற்றப்பட்டது. ஆகையால், இது, பண்புடைமையின்பின் வைக்கப்பட்டது.

வைத்தான்வாய் சான்ற பெரும்பொரு ளஃதுண்ணான்
செத்தான் செயக்கிடந்த தில். 1

பொருளானா மெல்லாமென் றீயா திவறும்
மருளானா மாணாப் பிறப்பு. 2

ஈட்ட மிவறி யிசைவேண்டா வாடவர்
தோற்ற நிலக்குப் பொறை. 3

எச்சமென் றென்னெண்ணுங் கொல்லோ
நச்சப் படாஅ தவன். 4

கொடுப்பதூஉந் துய்ப்பதூஉ மில்லார் கடுக்கிய
கோடியுண் டாயினு மில். 5

ஏதம் பெருஞ்செல்வந் தான்றுவ்வான் றக்கார்க்கொன்
றீத லியல்பிலா தான். 6

அற்றார்க்கொன் றாற்றாதான் செல்வ மிகநலம்
பெற்றா டமியண்மூத் தற்று. 7

நச்சப் படாதவன் செல்வ நடுவூருள்
நச்சு மரம்பழுத் தற்று. 8

அன்பொரீஇத் தற்செற் றறநோக்கா தீட்டிய
ஒண்பொருள் கொள்வார் பிறர். 9

சீருடைச் செல்வர் சிறுதுனி மாரி
வறங்கூர்ந் தனைய துடைத்து. 10

102-ம் அதி.—நாணுடைமை

அதாவது, முன்சொல்லப்பட்ட சால்பு பண்பு முதலிய குணங்களால் உயர்ந்தோர், தமக்குத்தகாத கருமங்களில் நாணுதலுடையாராந்தன்மை. ஆதலின், இது நன்றியில் செல்வத்தின்பின் வைக்கப்பட்டது.

கருமத்தா னாணுத னாணுத் திருநுதல்
நல்லவர் நாணுப் பிற. 1

ஊணுடை யெச்ச முயிர்க்கெல்லாம் வேறல்ல
நாணுடைமை மாந்தர் சிறப்பு. 2

ஊனைக் குறித்த வுயிரெல்லா நாணென்னும்
நன்மை குறித்தது சால்பு. 3

அணியன்றோ நாணுடைமை சான்றோர்க் கஃதின்றேற்
பிணியன்றோ பீடு நடை. 4

பிறர்பழியுந் தம்பழியு நாணுவார் நாணுக்
குறைபதி யென்னு முலகு. 5

நாண்வேலி கொள்ளாது மன்னோ வியன்ஞாலம்
பேணலர் மேலா யவர். 6

நாணா லுயிரைத் துறப்ப ருயிர்ப்பொருட்டால்
நாண்டுறவார் நாணாள் பவர். 7

பிறர்நாணத் தக்கது தானாணா னாயின்
அறநாணத் தக்க துடைத்து. 8

குலஞ்சுடுங் கொள்கை பிழைப்பி னலஞ்சுடும்
நாணின்மை நின்றக் கடை. 9

நாணகத் தில்லா ரியக்க மரப்பாவை
நாணா லுயிர்மருட்டி யற்று. 10

103-ம் அதி.—குடிசெயல்வகை

அதாவது, ஒருவன் தான்பிறந்த குடியை உயரச்செய்தலின் விதம். இது தாழ்வினிடத்து நாணுடையவர்க்கு உண்டாவதாக லால் அதன்பின் வைக்கப்பட்டது.

கருமஞ் செயவொருவன் கைதூவே னென்னும்
பெருமையிற் பீடுடைய தில். 1

ஆள்வினையு மான்ற வறிவு மெனவிரண்டின்
நீள்வினையா னீளுங் குடி. 2

குடிசெய்வ லென்னு மொருவற்குத் தெய்வம்
மடிதற்றுத் தான்முந் துறும். 3

சூழாமற் றானே முடிவெய்துந் தங்குடியைத்
தாழா துஞற்று பவர்க்கு. 4

குற்ற மிலனாய்க் குடிசெய்து வாழ்வானைச்
சுற்றமாச் சுற்று முலகு. 5

நல்லாண்மை யென்ப தொருவற்குத் தான்பிறந்த
இல்லாண்மை யாக்கிக் கொளல். 6

அமரகத்து வன்கண்ணர் போலத் தமரகத்தும்
ஆற்றுவார் மேற்றே பொறை. 7

குடிசெய்வார்க் கில்லை பருவ மடிசெய்து
மானங் கருதக் கெடும். 8

இடும்பைக்கே கொள்கலங் கொல்லோ குடும்பத்தைக்
குற்ற மறைப்பா னுடம்பு. 9

இடுக்கண்கால் கொன்றிட வீழு மடுத்தூன்றும்
நல்லா ளிலாத குடி. 10

104-ம் அதி.—உழவு

அஃதாவது, சிறுபான்மை வாணிகர்க்கும் பெரும்பான்மை வேளாளர்க்கும் உரித்தாகிய உழுதற்றொழில். இது, செய்விக்கும் போது மற்றவர்க்கும் உரித்தாகும். இது, முன்னே குடியுயர்தற்கு ஏதுவென்ற முயற்சியாதலால் குடிசெயல் வகையின்பின் வைக்கப் பட்டது.

சுழன்றுமேர்ப் பின்ன துலகு மதனால்
உழந்து முழுவே தலை. 1

உழுவா ருலகத்தார்க் காணியஃ தாற்றா
தெழுவாரை யெல்லாம் பொறுத்து. 2

உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்மற் றெல்லாந்
தொழுதுண்டு பின்செல் பவர். 3

பலகுடை நீழலுந் தங்குடைக்கீழ்க் காண்பர்
அலகுடை நீழ லவர். 4

இரவா ரிரப்பார்க்கொன் றீவர் கரவாது
கைசெய்தூண் மாலை யவர். 5

உழவினார் கைம்மடங்கி னில்லை விழைவதூஉம்
விட்டேமென் பார்க்கு நிலை. 6

தொடிப்புழுதி கஃசா வுணக்கிற் பிடித்தெருவும்
வேண்டாது சாலப் படும். 7

ஏரினு நன்றா லெருவிடுதல் கட்டபின்
நீரினு நன்றதன் காப்பு. 8

செல்லான் கிழவ னிருப்பி னிலம்புலந்
தில்லாளி னூடி விடும். 9

இலமென் றசைஇ யிருப்பாரைக் காணின்
நிலமென்னு நல்லா ணகும். 10

105-ம் அதி.—நல்குரவு

இது, உழவுமுதலியனவற்றால் உண்டாகி அநுபவிக்கப்படுவன யாவும், இல்லாமையின் தன்மையைத் தெரிவித்தலால் அதற்குப் பின் வைக்கப்பட்டது.

இன்மையி னின்னாத தியாதெனி னின்மையின்
இன்மையே யின்னா தது. 1

இன்மை யெனவொரு பாவி மறுமையும்
இன்மையு மின்றி வரும். 2

தொல்வரவுந் தோலுங் கெடுக்குந் தொகையாக
நல்குர வென்னு நசை. 3

இற்பிறந்தார் கண்ணேயு மின்மை யிளிவந்த
சொற்பிறக்குஞ் சோர்வு தரும். 4

நல்குர வென்னு மிடும்பையுட் பல்குறைத்
துன்பங்கள் சென்று படும். 5

நற்பொரு ணன்குணர்ந்து சொல்லினு நல்கூர்ந்தார்
சொற்பொருள் சோர்வு படும். 6

அறஞ்சாரா நல்குர வீன்றதா யானும்
பிறன்போல நோக்கப் படும். 7

இன்றும் வருவது கொல்லோ நெருநலுங்
கொன்றது போலு நிரப்பு. 8

நெருப்பினுட் டுஞ்சலு மாகு நிரப்பினுள்
யாதொன்றுங் கண்பா டரிது. 9

துப்புர வில்லார் துவரத் துறவாமை
உப்பிற்குங் காடிக்குங் கூற்று. 10

106-ம் அதி.—இரவு

மானம் கெடாமல் இரத்தல் இரவாமையோடு ஒத்தலால், அவ்விரவினும் வீடு பெறுதற்கு உதவிசெய்வதாகிய உடம்பைக் காக்கலாம் என்கிற அறநூல் வழக்குப்பற்றி முன் துவரத் துறத்தல் என்ற இரத்தலை விலக்குவற்கு இரவு சொல்லுகின்றார். ஆகலான் இது, நல்குரவுக்குப் பின் வைக்கப்பட்டது.

இரக்க விரத்தக்கார்க் காணிற் கரப்பின்
அவர்பழி தம்பழி யன்று. 1

இன்ப மொருவற் கிரத்த லிரந்தவை
துன்ப முறாஅ வரின். 2

கரப்பிலா நெஞ்சிற் கடனறிவார் முன்னின்
றிரப்புமோ ரேஎ ருடைத்து. 3

இரத்தலு மீதலே போலுங் கரத்தல்
கனவிலுந் தேற்றாதார் மாட்டு. 4

கரப்பிலார் வையகத் துண்மையாற் கண்ணின்
றிரப்பவர் மேற்கொள் வது. 5

கரப்பிடும்பை யில்லாரைக் காணி னிரப்பிடும்பை
எல்லா மொருங்கு கெடும். 6

இகழ்ந்தெள்ளா தீவாரைக் காணின் மகிழ்ந்துள்ளம்
உள்ளு ளுவப்ப துடைத்து. 7

இரப்பாரை யில்லாயி னீர்ங்கண்மா ஞாலம்
மரப்பாவை சென்றுவந் தற்று. 8

ஈவார்க ணென்னுண்டாந் தோற்ற மிரந்துகோள்
மேவா ரிலாஅக் கடை. 9

இரப்பான் வெகுளாமை வேண்டு மிரப்பிடும்பை
தானேயுஞ் சாலுங் கரி. 10

107-ம் அதி.—இரவச்சம்

மானங்கெடவரும் இரத்தலுக்கு அஞ்சுதலின் தன்மை கூறுகின்றார். ஆகலான், இது அதன்பின் வைக்கப்பட்டது.

கரவா துவந்தீயுங் கண்ணன்னார் கண்ணும்
இரவாமை கோடி யுறும். 1

இரந்து முயிர்வாழ்தல் வேண்டிற் பரந்து
கெடுக வுலகியற்றி யான். 2

இன்மை யிடும்பை யிரந்துதீர் வாமென்னும்
வன்மையின் வன்பாட் டதில். 3

இடமெல்லாங் கொள்ளாத் தகைத்தே யிடமில்லா
காலு மிரவொல்லாச் சால்பு. 4

தெண்ணீ ரடுபுற்கை யாயினுந் தாடந்த
துண்ணலி னூங்கினிய தில். 5

ஆவிற்கு நீரென் றிரப்பினு நாவிற்
கிரவி னிளிவந்த தில். 6

இரப்ப னிரப்பாரை யெல்லா மிரப்பின்
கரப்பா ரிரவன்மி னென்று. 7

இரவென்னு மேமாப்பி றோணி கரவென்னும்
பார்தாக்கப் பக்கு விடும். 8

இரவுள்ள வுள்ள முருகுங் கரவுள்ள
உள்ளதூஉ மின்றிக் கெடும். 9

கரப்பவர்க் கியாங்கொளிக்குங் கொல்லோ விரப்பவர்
சொல்லாடப் போஒ முயிர். 10

108-ம் அதி.—கயமை

அதாவது, முன்னே அரசியலுள்ளும், அங்கவியலுள்ளும், சிறப்புவகையால் சொல்லப்பட்டவைகளுள் ஏற்புடையவைகளைக் குறிப்பினல்யாவருக்கும் பொருந்தவைத்தமையால், அங்கே குறிப்பாற் சொல்லியவையும், இங்கே ஒழிபியலுள் வெளிப்படச் சொல்லியவையும் ஆகியகுணங்களுள்யாதுமிலராகிய கீழோரதுதன்மை. ஆகலான், இது எல்லாவற்றிற்கும் ஈறுக, இரவச்சத்தின்பின் வைக்கப்பட்டது.

மக்களே போல்வர் கயவ ரவரன்ன
ஒப்பாரி யாங்கண்ட தில். 1

நன்றறி வாரிற் கயவர் திருவுடையர்
நெஞ்சத் தவல மிலர். 2

தேவ ரனையர் கயவ ரவருந்தாம்
மேவன செய்தொழுக லான். 3

அகப்பட்டி யாவாரைக் காணி னவரின்
மிகப்பட்டுச் செம்மாக்குங் கீழ். 4

அச்சமே கீழ்கள தாசார மெச்சம்
அவாவுண்டே லுண்டாஞ் சிறிது. 5

அறைபறை யன்னர் கயவர்தாங் கேட்ட
மறைபிறர்க் குய்த்துரைக்க லான். 6

ஈர்ங்கை விதிரார் கயவர் கொடிறுடைக்குங்
கூன்கைய ரல்லா தவர்க்கு. 7

சொல்லப் பயன்படுவர் சான்றோர் கரும்புபோற்
கொல்லப் பயன்படுங் கீழ். 8

உடுப்பதூஉ முண்பதூஉங் காணிற் பிறர்மேல்
வடுக்காண வற்றாகுங் கீழ். 9

எற்றிற் குரியர் கயவரொன் றுற்றக்கால்
விற்றற் குரியர் விரைந்து. 10

பொருட்பால் முற்றிற்று.

காமத்துப்பால்

களவியல்

109-ம் அதி.—தகையணங்குறுத்தல்

இனி, அப்பொருளைத் துணைக் காரணமாகக் கொண்டு இம்மையே பயப்பதாகிய இன்பத்தைச் சொல்லலுற்றார்.

பொழில் முதலிய இடத்துத் தனித்துநின்றவளை வேட்டுவந்த தலைவன் அவளழகு தனக்கு வருத்தமுண்டாக்குதலைச் சொல்லுதலால், இது, பொருட்பாலுக்குப் பின்னும், காமத்துப்பாலில் முன்னும் வைக்கப்பட்டது.

அணங்குகொ லாய்மயில் கொல்லோ கனங்குழை
மாதர்கொன் மாலுமென் னெஞ்சு. 1

நோக்கினா ணோக்கெதிர் நோக்குத றாக்கணங்கு
தானைக்கொண் டன்ன துடைத்து. 2

பண்டறியேன் கூற்றென் பதனை யினி யறிந்தேன்
பெண்டகையாற் பேரமர்க் கட்டு. 3

கண்டா ருயிருண்ணுந் தோற்றத்தாற் பெண்டகைப்
பேதைக் கமர்த்தன கண். 4

கூற்றமோ கண்ணோ பிணையோ மடவரல்
நோக்கமிம் மூன்று முடைத்து. 5

கொடும்புருவங் கோடா மறைப்பி னடுங்கஞர்
செய்யல மன்னிவள் கண். 6

கடாஅக் களிற்றின்மேற் கட்படா மாதர்
படாஅ முலைமேற் றுகில். 7

ஒண்ணுதற் கோஒ வுடைந்ததே ஞாட்பினுள்
நண்ணாரு முட்குமென் பீடு. 8

பிணையேர் மடநோக்கு நாணு முடையாட்
கணியெவனோ வேதில தந்து. 9

உண்டார்க ணல்ல தடுநறாக் காமம்போற்
கண்டார் மகிழ்செய்த லின்று. 10

110-ம் அதி.—குறிப்பறிதல்

தலைவன் தலைவி குறிப்பை அறிதலும், தோழி குறிப்பை அறிதலும் ஆம். தலைவியழகைக்கண்டு வருந்திய தலைவன் தலைவியைக் கூடும்போது இது, வேண்டுமாகலான் தகையணங்குறுதலின் பின் வைக்கப்பட்டது.

இருநோக் கிவளுண்க ணுள்ள தொருநோக்கு
நோய்நோக்கொன் றந்நோய் மருந்து. 1

கண்களவு கொள்ளுஞ் சிறுநோக்கங் காமத்திற்
செம்பாக மன்று பெரிது. 2

நோக்கினா ணோக்கி யிறைஞ்சினா ளஃதவள்
யாப்பினு ளட்டிய நீர். 3

யானோக்குங் காலை நிலநோக்கு நோக்காக்கால்
தானோக்கி மெல்ல நகும். 4

குறிக்கொண்டு நோக்காமை யல்லா லொருகண்
சிறக்கணித்தாள் போல நகும். 5

உறாஅ தவர்போற் சொலினுஞ் செறாஅர்சொல்
லொல்லை யுணரப் படும். 6

செறாஅச் சிறுசொல்லுஞ் செற்றார்போ னோக்கும்
உறாஅர்போன் றுற்றார் குறிப்பு. 7

அசையியற் குண்டாண்டோ ரேஎர்யா னோக்கப்
பசையினள் பைய நகும். 8

ஏதிலார் போலப் பொதுநோக்கு நோக்குதல்
காதலார் கண்ணே யுள. 9

கண்ணொடு கண்ணிணை நோக்கொக்கின் வாய்ச்சொற்கள்
என்ன பயனு மில. 10

111-ம் அதி.—புணர்ச்சி மகிழ்தல்

குறிப்பறிந்து புணர்ந்த தலைவன் அப்புணர்ச்சியை மகிழ்ந்து சொல்லுதலின் இது, அதன்பின் வைக்கப்பட்டது.

கண்டுகேட் டுண்டுயிர்த் தற்றறியு மைம்புலனும்
ஒண்டொடி கண்ணே யுள. 1

பிணிக்கு மருந்து பிறம னணியிழை
தன்னோய்க்குத் தானே மருந்து. 2

தாம்வீழ்வார் மென்றோட் டுயிலி னினிதுகொல்
தாமரைக் கண்ணா னுலகு. 3

நீங்கிற் றெறூஉங் குறுகுங்காற் றண்ணென்னுந்
தீயாண்டுப் பெற்றா ளிவள். 4

வேட்ட பொழுதி னவையவை போலுமே
தோட்டார் கதுப்பினா டோள். 5

உறுதோ றுயிர்தளிர்ப்பத் தீண்டலாற் பேதைக்
கமிழ்தி னியன்றன தோள். 6

தம்மி லிருந்து தமதுபாத் துண்டற்றால்
அம்மா வரிவை முயக்கு. 7

வீழு மிருவர்க் கினிதே வளியிடை
போழப் படாஅ முயக்கு. 8

ஊட லுணர்தல் புணர்த லிவைகாமங்
கூடியார் பெற்ற பயன். 9

அறிதோ றறியாமை கண்டற்றாற் காமஞ்
செறிதோறுஞ் சேயிழை மாட்டு. 10

112-ம் அதி.—நலம்புனைந் துரைத்தல்

அதாவது, தலைவன் தலைவி நலத்தினை வருணித்துச் சொல்லியது. இது, புணர்ச்சியின் மகிழ்ந்தவிடத்து நிகழ்வதாகலான், அதன்பின் வைக்கப்பட்டது.

நன்னீரை வாழி யனிச்சமே நின்னினும்
மென்னீரள் யாம்வீழ் பவள். 1

மலர்காணின் மையாத்தி நெஞ்சே யிவள்கண்
பலர்காணும் பூவொக்கு மென்று. 2

முறிமேனி முத்த முறுவல் வெறிநாற்றம்
வேலுண்கண் வேய்த்தோ ளவட்கு. 3

காணிற் குவளை கவிழ்ந்து நிலனோக்கும்
மாணிழை கண்ணொவ்வே மென்று. 4

அனிச்சப்பூக் கால்களையாள் பெய்தா ணுசுப்பிற்கு
நல்ல படாஅ பறை. 5

மதியு மடந்தை முகனு மறியா
பதியிற் கலங்கிய மீன். 6

அறுவாய் நிறைந்த வவிர்மதிக்குப் போல
மறுவுண்டோ மாதர் முகத்து. 7

மாதர் முகம்போ லொளிவிட வல்லையேற்
காதலை வாழி மதி. 8

மலரன்ன கண்ணாள் முகமொத்தி யாயிற்
பலர்காணத் தோன்றன் மதி. 9

அனிச்சமு மன்னத்தின் றூவியு மாதர்
அடிக்கு நெருஞ்சிப் பழம். 10

113-ம் அதி.—காதற் சிறப்புரைத்தல்

அதாவது, தலைவன் தன் ஆசைமிகுதியைச் சொல்லலுமாம். இது, புணர்ச்சியும் நலனும்பற்றி நிகழ்கின்றதாகலின் அவ்வதிகாரங்களின் பின் வைக்கப்பட்டது.

பாலொடு தேன்கலந் தற்றே பணிமொழி
வாலெயி றூறிய நீர். 1

உடம்பொ டுயிரிடை யென்னமற் றன்ன
மடந்தையொ டெம்மிடை நட்பு. 2

கருமணியிற் பாவாய்நீ போதாயாம் வீழுந்
திருநுதற் கில்லை யிடம். 3

வாழ்த லுயிர்க்கன்ன ளாயிழை சாதல்
அதற்கன்ன ளீங்கு மிடத்து. 4

உள்ளுவன் மன்யான் மறப்பின் மறப்பறியேன்
ஒள்ளமர்க் கண்ணாள் குணம். 5

கண்ணுள்ளிற் போகா ரிமைப்பிற் பருவரார்
நுண்ணியரெங் காத லவர். 6

கண்ணுள்ளார் காத லவராகக் கண்ணும்
எழுதேங் கரப்பாக் கறிந்து. 7

நெஞ்சத்தார் காத லவராக வெய்துண்டல்
அஞ்சுதும் வேபாக் கறிந்து. 8

இமைப்பிற் கரப்பாக் கறிவ லனைத்திற்கே
ஏதில ரென்னுமிவ் வூர். 9

உவந்துறைவ ருள்ளத்து ளென்று மிகந்துறைவர்
ஏதில ரென்னுமிவ் வூர். 10

114-ம் அதி.—நாணுத்துறவுரைத்தல்

அதாவது, தூரப்படுத்தப்பட்டுப் பொருதவனாகிய தலைவனும், அறத்தொடு நிற்பிக்கத்தொடங்கிய தலைவியும், தமது நாணமிழத்தலைச் சொல்லுதலாம். இது, காதல் மிகுந்தவிடத்து நிகழ்வதாதலால், காதல் சிறப்புரைத்தலின் பின் வைக்கப்பட்டது.

காம முழந்து வருந்தினார்க் கேமம்
மடலல்ல தில்லை வலி. 1

நோனா வுடம்பு முயிரு மடலேறும்
நாணினை நீக்கி நிறுத்து. 2

நாணொடு நல்லாண்மை பண்டுடையே னின்றுடையேன்
காமுற்றா ரேறு மடல். 3

காமக் கடும்புன லுய்க்குமே நாணொடு
நல்லாண்மை யென்னும் புணை. 4

தொடலைக் குறுந்தொடி தந்தாண் மடலொடு
மாலை யுழக்குந் துயர். 5

மடலூர்தல் யாமத்து முள்ளுவேன் மன்ற
படலொல்லா பேதைக்கென் கண். 6

கடலன்ன காம முழந்து மடலேறாப்
பெண்ணிற் பெருந்தக்க தில். 7

நிறையரியர் மன்னளிய ரென்னாது காமம்
மறையிறந்து மன்று படும். 8

அறிகிலா ரெல்லாரு மென்றேயென் காமம்
மறிகின் மறுகு மருண்டு. 9

யாங்கண்ணிற் காண நகுப வறிவில்லார்
யாம்பட்ட தாம்படா வாறு. 10

115-ம் அதி.—அலரறிவுறுத்தல்

அதாவது, களவொழுக்கம் வேண்டிய தலைவன் பிறர்சொல்லுகின்ற அலர் தனக்கு ஆகின்றவிதத்தைத் தோழிக்கு அறிவித்தலும், மனம் உடன்போக்காக வேண்டிய தலைவியும் தோழியும் அவ்வலரை அவனுக்கு அறிவித்தலுமாம். இது, நாணுத்துறந்தவழி நிகழ்வதாகலின், அதன்பின் வைக்கப்பட்டது.

அலரெழ வாருயிர் நிற்கு மதனைப்
பலரறியார் பாக்கியத் தால். 1

மலரன்ன கண்ணா ளருமை யறியா
தலரெமக் கீந்ததிவ் வூர். 2

உறாஅதோ வூரறிந்த கௌவை யதனைப்
பெறாஅது பெற்றன்ன நீர்த்து. 3

கவ்வையாற் கவ்விது காம மதுவின்றேல்
தவ்வென்னுந் தன்மை யிழந்து. 4

களித்தொறுங் கள்ளுண்டல் வேட்டற்றாற் காமம்
வெளிப்படுந் தோறு மினிது. 5

கண்டது மன்னு மொருநா ளலர்மன்னுந்
திங்களைப் பாம்புகொண் டற்று. 6

ஊரவர் கௌவை யெருவாக வன்னைசொல்
நீராக நீளு மிந்நோய். 7

நெய்யா லெரிநுதுப்பே மென்றற்றாற் கௌவையாற்
காம நுதுப்பே மெனல். 8

அலர்நாண வொல்வதோ வஞ்சலோம் பென்றார்
பலர்நாண நீத்தக் கடை. 9

தாம்வேண்டி நல்குவர் காதலர் யாம்வேண்டுங்
கௌவை யெடுக்கு மிவ்வூர். 10

களவியல் முற்றிற்று.

கற்பியல்

116-ம் அதி.—பிரிவாற்றுமை

இனிக் கற்புப் பதினெட்டதிகாரத்திலே சொல்லத்தொடங்கி, முதலில் பிரிவாற்றுமை சொல்லவேண்டினர். ஆகலான் இது, அலரறிவுறுத்தலின்பின் வைக்கப்பட்டது.

செல்லாமை யுண்டே லெனக்குரை மற்றுநின்
வல்வரவு வாழ்வார்க் குரை. 1
இன்க ணுடைத்தவர் பார்வல் பிரிவஞ்சும்
புன்க ணுடைத்தாற் புணர்வு. 2
அரிதரோ தேற்ற மறிவுடையார் கண்ணும்
பிரிவோ ரிடத்துண்மை யான். 3
அளித்தஞ்ச லென்றவர் நீப்பிற் றெளித்தசொல்
தேறியார்க் குண்டோ தவறு. 4
ஓம்பி னமைந்தார் பிரிவோம்பன் மற்றவர்
நீங்கி னரிதாற் புணர்வு. 5
பிரிவுரைக்கும் வன்கண்ண ராயி னரிதவர்
நல்குவ ரென்னு நசை. 6
துறைவன் றுறந்தமை தூற்றுகொல் முன்கை
இறையிறவா நின்ற வளை. 7
இன்னு தினனில்லூர் வாழ்த லதனினும்
இன்னு தினியார்ப் பிரிவு. 8
தொடிற்சுடி னல்லது காமநோய் போல
விடிற்சுட லாற்றுமோ தீ. 9
அரிதாற்றி யல்லனோய் நீக்கிப் பிரிவாற்றிப்
பின்னிருந்து வாழ்வார் பலர். 10

117-ம் அதி.—படர்மெலிந்திரங்கல்

அஃதாவது, பிரிவு பொறுக்கமாட்டாதவளாகிய தலைவி தான் உறுத்துகின்ற துன்பத்தை எப்போதும் நினைத்தலின் அந்நினைவால் மெலிந்து இரங்கலாம். ஆகையால், இது பிரிவாற்றாமையின்பின் வைக்கப்பட்டது.

மறைப்பேன்மன் யானிஃதோ நோயை யிறைப்பவர்க்
கூற்றுநீர் போல மிகும். 1

கரத்தலு மாற்றேனிந் நோயைநோய் செய்தார்க்
குரைத்தலு நாணுத் தரும். 2

காமமு நாணு முயிர்காவாத் தூங்குமென்
நோனா வுடம்பி னகத்து. 3

காமக் கடன்மன்னு முண்டே யதுநீந்தும்
ஏமப் புணைமன்னு மில். 4

துப்பி னெவனாவர் மற்கொ றுயர்வரவு
நட்பினு ளாற்று பவர். 5

இன்பங் கடன்மற்றுக் காம மஃதடுங்கால்
துன்ப மதனிற் பெரிது. 6

காமக் கடும்புன னீந்திக் கரைகாணேன்
யாமத்தும் யானே யுளேன். 7

மன்னுயி ரெல்லாந் துயிற்றி யளித்திரா
என்னல்ல தில்லை துணை. 8

கொடியார் கொடுமையிற் றாங்கொடிய விந்நாள்
நெடிய கழியு மிரா. 9

உள்ளம்போன் றுள்வழிச் செல்கற்பின் வெள்ளநீர்
நீந்தல மன்னோவென் கண். 10

118-ம் அதி.—கண்விதுப்பழிதல்

அதாவது, கண்கள் தலைவனைக் காணுதற்கு விரைதலாலே வருந்துதல். இது, படராலே மெலிந்தவிடத்து நிகழ்வதாகலின் அதன்பின் வைக்கப்பட்டது.

கண்டாங் கலுழ்வ தெவன்கொலோ தண்டாநோய்
தாங்காட்ட யாங்கண் டது. 1

தெரிந்துணரா நோக்கிய வுண்கண் பரிந்துணராப்
பைத லுழப்ப தெவன். 2

கதுமெனத் தாநோக்கித் தாமே கலுழும்
இதுநகத் தக்க துடைத்து. 3

பெயலாற்றா நீருலந்த வுண்க ணுயலாற்றா
உய்வினோ யென்க ணிறுத்து. 4

படலாற்றா பைத லுழக்குங் கடலாற்றாக்
காமநோய் செய்தவென் கண். 5

ஓஒ வினிதே யெமக்கிந்நோய் செய்தகண்
தாஅ மிதற்பட் டது. 6

உழந்துழந் துண்ணீ ரறுக விழைந்திழைந்து
வேண்டி யவர்க்கண்ட கண். 7

பேணாது பெட்டா ருளர்மன்னோ மற்றவர்
காணா தமைவில கண். 8

வாராக்காற் றுஞ்சா வரிற்றுஞ்சா வாயிடை
ஆரஞ ருற்றன கண். 9

மறைபெற லூரார்க் கரிதன்றா லெம்போல்
அறைபறை கண்ணா ரகத்து. 10

119-ம் அதி.—பசப்புறுபருவரல்

அதாவது, பசப்புறுதலாகிய வருத்தம். பிரிவு பொருமையால் வருவதோர் நிறவேறுபாடு. இது, தலைவனைக் காணப்பெருத விடத்து, நிகழ்வதாகலான், கண்விதுப்பழிதலின் வைக்கப் பட்டது.

நயந்தவர்க்கு நல்காமை நேர்ந்தேன் பசந்தவென்
பண்பியார்க் குரைக்கோ பிற. 1

அவர்தந்தா ரென்னுந் தகையா லிவர்தந்தென்
மேனிமே லூரும் பசப்பு. 2

சாயலு நாணு மவர்கொண்டார் கைம்மாறு
நோயும் பசலையுந் தந்து. 3

உள்ளுவன் மன்யா னுரைப்ப தவர்திறமாற்
கள்ளம் பிறவோ பசப்பு. 4

உவக்காணெங் காதலர் செல்வா ரிவக்காணென்
மேனி பசப்பூர் வது. 5

விளக்கற்றம் பார்க்கு மிருளேபோற் கொண்கன்
முயக்கற்றம் பார்க்கும் பசப்பு. 6

புல்லிக் கிடந்தேன் புடைபெயர்ந்தே னவ்வளவில்
அள்ளிக்கொள் வற்றே பசப்பு. 7

பசந்தா ளிவளென்ப தல்லா லிவளைத்
துறந்தா ரவரென்பா ரில். 8

பசக்கமற் பட்டாங்கென் மேனி நயப்பித்தார்
நன்னிலைய ராவ ரெனின். 9

பசப்பெனப் பேர்பெறுத லன்றே நயப்பித்தார்
நல்காமை தூற்றா ரெனின். 10

120-ம். அதி—தனிப்படர்மிகுதி

அஃதாவது, தனியாகிய துன்பமிகுதியாம். இது பசப்புற்று வருந்தினவகளுக்கு உரியதாகலின், பசப்புறு பருவரலின் வைக்கப்பட்டது.

தாம்வீழ்வார் தம்வீழப் பெற்றவர் பெற்றாரே
காமத்துக் காழில் கனி. 1

வாழ்வார்க்கு வானம் பயந்தற்றால் வீழ்வார்க்கு
வீழ்வா ரளிக்கு மளி. 2

வீழுநர் வீழப் படுவார்க் கமையுமே
வாழுந மென்னுஞ் செருக்கு. 3

வீழப் படுவார் கெழீஇயிலர் தாம்வீழ்வார்
வீழப் படாஅ ரெனின். 4

நாங்காதல் கொண்டார் நமக்கெவன் செய்பவோ
தாங்காதல் கொள்ளாக் கடை. 5

ஒருதலையா னின்னாது காமங்காப் போல
விருதலை யானு மினிது. 6

பருவரலும் பைதலுங் காணான்கொல் காமன்
ஒருவர் கணின்றொழுகு வான். 7

வீழ்வாரி னின்சொற் பெறாஅ துலகத்து
வாழ்வாரின் வன்கணா ரில். 8

நசைஇயார் நல்கா ரெனினு மவர்மாட்
டிசையு மினிய செவிக்கு. 9

உறாஅர்க் குறுநோ யுரைப்பாய் கடலைச்
செறாஅஅய் வாழிய நெஞ்சு. 10

121-ம் அதி.—நினைந்தவர் புலம்பல்

அதாவது, முன் கூடியகாலத்தின்பத்தை நினைந்து, பாசறையிடத்துத் தலைவன் தனிமை அடைதலும், தலைவி தனிமை அடைதலும் ஆம். இது, படர்மிகுதி தன்னிடத்ததாக நினைந்த தலைவிக்கும், உரித்தாகலின் தனிப்படர் மிகுதியின்பின் வைக்கப்பட்டது.

உள்ளினுந் தீராப் பெருமகிழ் செய்தலாற்
கள்ளினுங் காம மினிது. 1

எனைத்தொன் றினிதேகாண் காமந்தாம் வீழ்வார்
நினைப்ப வருவதொன் றில். 2

நினைப்பவர் போன்று நினையார்கொ றும்மல்
சினைப்பது போன்று கெடும். 3

யாமு முளேங்கொ லவர்நெஞ்சத் தென்னெஞ்சத்
தோஒ வுளரே யவர். 4

தந்நெஞ்சத் தெம்மைக் கடிகொண்டார் நாணார்கொல்
எந்நெஞ்சத் தோவா வரல். 5

மற்றியா னென்னுளேன் மன்னோ வவரொடியான்
உற்றநா ளுள்ள வுளேன். 6

மறப்பி னெவனாவன் மற்கொன் மறப்பறியேன்
உள்ளினு முள்ளஞ் சுடும். 7

எனைத்து நினைப்பினுங் காயா ரனைத்தன்றோ
காதலர் செய்யுஞ் சிறப்பு. 8

விளியுமென் னின்னுயிர் வேறல்ல மென்பார்
அளியின்மை யாற்ற நினைந்து. 9

விடாஅது சென்றாரைக் கண்ணினாற் காணப்
படாஅதி வாழி மதி. 10

122-ம் அதி.—கனவுநிலையுரைத்தல்

அதாவது, தலைவி தான்கண்ட கனவினது நிலைமையைத் தோழிக்குச் சொல்லியது. அக்கனவு நனவினிடத்து நினைவு மிகுதியாலே கண்டதாகலான் இது, நினைந்தவர் புலம்பலின்பின் வைக்கப்பட்டது.

காதலர் தூதொடு வந்த கனவினுக்
கியாதுசெய் வேன்கொல் விருந்து. 1

கயலுண்கண் யானிரப்பத் துஞ்சிற் கலந்தார்க்
குயலுண்மை சாற்றுவேன் மன். 2

நனவினா னல்கா தவரைக் கனவினாற்
காண்டலி னுண்டென் னுயிர். 3

கனவினா னுண்டாகுங் காம நனவினால்
நல்காரை நாடித் தரற்கு. 4

நனவினாற் கண்டதூஉ மாங்கே கனவுந்தான்
கண்ட பொழுதே யினிது. 5

நனவென வொன்றில்லை யாயிற் கனவினாற்
காதலர் நீங்கலர் மன். 6

நனவினா னல்காக் கொடியார் கனவினான்
என்னெம்மைப் பீழிப் பது. 7

துஞ்சுங்காற் றோண்மேல ராகி விழிக்குங்கால்
நெஞ்சத்த ராவர் விரைந்து. 8

நனவினா னல்காரை நோவர் கனவினாற்
காதலர்க் காணா தவர். 9

நனவினா னந்நீத்தா ரென்பர் கனவினாற்
காணார்கொ லிவ்வூ ரவர். 10

123-ம் அதி.—பொழுதுகண் டிரங்கல்

அஃதாவது, மாலைப்பொழுது வந்தவிடத்து அதனைக்கண்டு, தலைவி இரங்குதல். கனவு முந்துருத வினையில்லை என்பதுபற்றிப் பகற்பொழுது பொறுத்திருந்த தலைவிக்கு உரியதாகலான், இது, கனவுநிலை உரைத்தலின்பின் வைக்கப்பட்டது.

மாலையோ வல்லை மணந்தா ருயிருண்ணும்
வேலைநீ வாழி பொழுது. 1

புன்கண்ணை வாழி மருண்மாலை யெங்கேள்போல்
வன்கண்ண தோநின் றுணை. 2

பனியரும்பிப் பைதல்கொண் மாலை துனியரும்பித்
துன்பம் வளர வரும். 3

காதல ரில்வழி மாலை கொலைக்களத்
தேதிலர் போல வரும். 4

காலைக்குச் செய்தன் றென்கொ லெவன்கொல்யான்
மாலைக்குச் செய்த பகை. 5

மாலைநேர் செய்தன் மணந்தா ரகலாத
காலை யறிந்த திலேன். 6

காலை யரும்பிப் பகலெல்லாம் போதாகி
மாலை மலருமிந் நோய். 7

அழல்போலு மாலைக்குத் தூதாகி யாயன்
குழல்போலுங் கொல்லும் படை. 8

பதிமருண்டு பைத லுழக்கு மதிமருண்டு
மாலை படர்தரும் போழ்து. 9

பொருண்மாலை யாளரை யுள்ளி மருண்மாலை
மாயுமென் மாயா வுயிர். 10

124-ம் அதி.—உறுப்பு நலனழிதல்

அஃதாவது, தலைவியினுடைய கண்ணும், தோளும், நெற்றியும், முதலாகிய அவயவங்கள் தம்மழகழிதல். இது, இரக்கமிகுந்த விடத்து, நிகழ்வதாகலின் பொழுது கண்டிரங்கலின்பின் வைக்கப் பட்டது.

சிறுமை நமக்கொழியச் சேட்சென்றா ருள்ளி
நறுமலர் நாணின கண். 1

நயந்தவர் நல்காமை சொல்லுவ போலும்
பசந்து பனிவாருங் கண். 2

தணந்தமை சால வறிவிப்ப போலும்
மணந்தநாள் வீங்கிய தோள். 3

பணைநீங்கிப் பைந்தொடி சோருந் துணைநீங்கித்
தொல்கவின் வாடிய தோள். 4

கொடியார் கொடுமை யுரைக்குந் தொடியொடு
தொல்கவின் வாடிய தோள். 5

தொடியொடு தோணெகிழ நோவ லவரைக்
கொடிய ரெனக்கூற னொந்து. 6

பாடு பெறுதியோ நெஞ்சே கொடியார்க்கென்
வாடுதோட் பூச லுரைத்து. 7

முயங்கிய கைகளை யூக்கப் பசந்தது
பைந்தொடிப் பேதை நுதல். 8

முயக்கிடைத் தண்வளி போழப் பசப்புற்ற
பேதை பெருமழைக் கண். 9

கண்ணின் பசப்போ பருவா லெய்தின்றே
ஒண்ணுதல் செய்தது கண்டு. 10

125-ம் அதி.—நெஞ்சோடு கிளத்தல்

அதாவது, பிரிவு பொறுமை மேற்படத் தனக்கு ஓர் பற்றுக் கோடு காணாத தலைவி தன்னெஞ்சொடு செய்திறன் அறியாது சொல்லுதல். இது, உறுப்புக்கள் தமது நலனழிந்தவழி நிகழ்வ தாகலின், அதன்பின் வைக்கப்பட்டது.

நினைத்தொன்று சொல்லாயோ நெஞ்சே யெனைத்தொன்றும்
எவ்வநோய் தீர்க்கு மருந்து. 1

காத லவரில ராகநீ நோவது
பேதைமை வாழியென் னெஞ்சு. 2

இருந்துள்ளி யென்பரித னெஞ்சே பரிந்துள்ளல்
பைதனோய் செய்தார்க ணில். 3

கண்ணுங் கொளச்சேறி நெஞ்சே யிவையென்னைத்
தின்னு மவர்க்காண லுற்று. 4

செற்றா ரெனக்கை விடலுண்டோ நெஞ்சேயாம்
உற்றா லுறாஅ தவர். 5

கலந்துணர்த்துங் காதலர்க் கண்டாற் புலந்துணராய்
பொய்க்காய்வு காய்தியென் னெஞ்சு. 6

காமம் விடுவொன்றோ நாண்விடு நன்னெஞ்சே
யானோ பொறேனிவ் விரண்டு. 7

பரிந்தவர் நல்காரென் றேங்கிப் பிரிந்தவர்
பின்செல்வாய் பேதையென் னெஞ்சு. 8

உள்ளத்தார் காத லவராக வுள்ளிநீ
யாருழைச் சேறியென் னெஞ்சு. 9

துன்னாத் துறந்தாரை நெஞ்சத் துடையேமா
இன்னு மிழத்துங் கவின். 10

126-ம் அதி.—நிறையழிதல்

இது, தலைவி மனத்திலே அடக்கப்படுமவைகளை ஆசைமிகுதியால் அடக்கமாட்டாமல் வாய்விடுதல். அது அழிதற்குக் காரணம் நெஞ்சொடு சொல்லுதலால், இது அதன்பின் வைக்கப்பட்டது.

காமக் கணிச்சி யுடைக்கு நிறையென்னும்
நாணுத்தாழ் வீழ்த்த கதவு. 1

காம மெனவொன்றோ கண்ணின்றென் னெஞ்சத்தை
யாமத்து மாளுந் தொழில். 2

மறைப்பேன்மற் காமத்தை யானோ குறிப்பின்றித்
தும்மல்போற் றோன்றி விடும். 3

நிறையுடையே னென்பேன்மன் யானோவென் காமம்
மறையிறந்து மன்று படும். 4

செற்றார்பின் செல்லாப் பெருந்தகைமை காமநோய்
உற்றா ரறிவதொன் றன்று. 5

செற்றவர் பின்சேறல் வேண்டி யளித்தரோ
எற்றென்னை யுற்ற துயர். 6

நாணென வொன்றோ வறியலங் காமத்தாற்
பேணியார் பெட்ப செயின். 7

பன்மாயக் கள்வன் பணிமொழி யன்றோநம்
பெண்மை யுடைக்கும் படை. 8

புலப்ப லெனச்சென்றேன் புல்லினே னெஞ்சங்
கலத்த லுறுவது கண்டு. 9

நிணந்தீயி லிட்டன்ன நெஞ்சினார்க் குண்டோ
புணர்ந்தூடி நிற்பே மெனல். 10

127-ம் அதி.—அவர்வயின் விதும்பல்

